10/2/2002

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 5, 2000 தொகுதி 93

எண் 1.

C

D
V2:11,31'P00
P00-93-1
202738

வெளியீடு 30-11-2000 Issued 30-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 3, 2000 – தொகுதி 93 – எண் 1

**Monday the 3rd April, 2000 – Volume 93 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

D
V2:11,31 P00
P00-93-1
222778

102
2002

**3-4-2000**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | | |
|---|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | | iiii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | | xiii, xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | | xv-xxv |
| 1. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-41 |
| 2. | உரிமை மீறல் பிரச்சினை— | |
| | சேலம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி திரு. நடராஜன் மாற்றப்படவில்லையென முதலமைச்சர் கூறியுள்ளது குறித்து | 42-45 |
| 3. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து | 45-49 |
| 4. | சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை | 49-60 |
| | திரு. சி. ஞானசேகரன் | 49-52 |
| | திரு. பெ.சு. திருவேங்கடம் | 52, 53 |
| | திரு. ம. அப்துல் லத்தீப் | 53-56 |
| | மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 56-60 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. *விதி 110-ன்கீழ் அறிக்கை—* | |
| குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொடுக்கப்படும் சத்துமாவு வழங்கும் அனுமதி ஏற்கெனவே உள்ள விநியோகதாரருக்கே தொடர்ந்து அளிக்கப்படுவது பற்றி மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சரின் அறிக்கை | 61-64 |
| 6. வரவு-செலவுத் திட்டம், *2000-2001,* பொது விவாதம்—தொடர்ச்சி | 64-128 |
| திரு. டி. சுதர்சனம் | 64-70 |
| திரு. அன்பில் பெரியசாமி | 71-74 |
| *திரு. கே. சுப்பராயன் | 74-88 |
| திரு. பெ.சு. திருவேங்கடம் | 88-94 |
| திரு. ஐ. கணேசன் | 94-97,99,100, 101,102,103 |
| திரு. டி. அமரமூர்த்தி | 106-115 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 115-123 |
| *திரு. கேசி. கணேசன் | 123-128 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 128-130 |



**தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.*

**2. கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

*தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

**3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

**4. வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**

*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்*

**5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

*நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **விளையாட்டு மற்றும் இளைஞர் பணி மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** கால்நடை பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| **1. Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| **2. Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| **3. Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| **4. Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| **5. Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko.Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Developement, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Sports and Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1 **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**

2 **திரு. சி.டி. தண்டபாணி**

3 **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**

4 **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

5 **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9.. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன் பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | .. அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. .. இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஓட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79 சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்

89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு .பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி



130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகேழந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆவா.)
166. பெர்னார்ட், திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திக்குளம்

203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி

212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஒசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

226. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

227. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

228. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

229. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

230. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

235. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 21, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 3, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்."*

பயனளிக்காத சொற்களை விடுத்து, மனதில் பதிந்து பயனளிக்கக்கூடிய சொற்களையே கூற வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *181, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**181—**

#### பெண்கள் உயர்நிலைப் பள்ளி

**23698—***திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்படுமா?

[2000 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1999-2000 கல்வி ஆண்டில் கண்டமங்கலம் இருபாலரும் பயிலும் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்கள் பள்ளியைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்க கருத்துரு பெறப்பட்டு, உரிய நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாததாலும், உயர்மட்டக் குழுவினால் பரிந்துரை செய்யப்படாததாலும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க அனுமதி அளிக்கப்படவில்லை.*

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்திலிருந்து புதுவை செல்கின்ற வழியிலே 40 கிலோ மீட்டருக்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளியோ அல்லது மேல்நிலைப் பள்ளியோ இல்லை என்பதை உணர்ந்துதான் அந்த கண்டமங்கலம் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசினுடைய நிபந்தனைகள் அனைத்தையும் இந்த ஆண்டு பூர்த்தி செய்கின்ற வகையில் எல்லா உறுதிமொழிகளும் அளிக்கின்றோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் 1,000 பேரில் மாணவிகள் 500 பேர்கள் இருக்கிறார்கள். ஏறத்தாழ, 500 மாணவிகளை வைத்து தொடங்குவதற்கு உரிய வசதிகள் இருந்தால் தொடங்கலாம். பள்ளி தொடங்க வேண்டும் என்பதற்காக ஒரு இலட்சம் ரூபாய் நிதி செலுத்த வேண்டும் என்பதும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து செலுத்துவதாகத் தெரிவிக்கப்பட்ட அடிப்படையில், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பொது மக்களுடைய நன்கொடையாக அந்த ஒரு இலட்சம் ரூபாய் வசூலித்து அளிக்கப்படுமானால், தொடங்குவதற்கு முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**182—**

## தேர்வு விகிதம்

*24672—**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—



2000 ஏப்ரல் 3]

*(அ) 1997 ஆம் ஆண்டில் மேல்நிலைத் தேர்வு மற்றும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வுகளில் தேர்வு விகிதம் குறைந்ததற்கான காரணம் குறித்து அரசு ஆய்வு செய்ததா?*

*(ஆ) தேர்வு விகிதத்தை அதிகரிக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) 1997-ஆம் ஆண்டு தேர்வு விகிதம், முந்தைய ஆண்டுகளைவிட (1994, 1995 மற்றும் 1996, குறையவில்லை. எனினும் தேர்வு விகிதம் இன்னும் அதிகரிப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 10 மற்றும் +2 தேர்வெழுதும் பின்தங்கிய/தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக தமிழகமெங்கும் 1,000 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் தனியாக மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், இலவச வகுப்பு நடத்துவதுடன் வழிகாட்டி நூல் மற்றும் மாதிரி வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு விகிதத்தை அதிகப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கும் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. இருப்பினும், +2 மாணவர்களுக்குப் பாடச் சுமை மிக அதிகமாக உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால், அதைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்னர் பாடச் சுமையைப் பற்றி ஆய்வு நடத்துவதற்கு முன்னாள் இயக்குநர் ஒருவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆய்வு செய்து, எந்தக் குறிப்பிட்ட பாடங்கள் மாணவர்களுக்கு சுமை என்பது கண்டறியப்பட்டு, அந்த ஒருசில பாடங்கள் குறைக்கப்படுவதற்கோ அல்லது மாற்றப்படுவதற்கோ வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. பாடச் சுமை அதிகம் என்பதுகூட முழு உண்மை அல்ல. அந்த மாணவர்கள் அந்த அளவு தகுதி பெற்றால்தான் உயர்கல்வி பெறுவதற்கேற்ற அடிப்படையைப் பெற்றவர்களாக ஆவார்கள். பயிற்றுவிக்கிற முறையில் மேலும் திறமையைக் காட்டி, ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியோடு செயல்பட்டால், பாடச் சுமை என்பது, நம்மைப் போன்றவர்களுக்குச் சுமையாக இருந்தாலும், மாணவர்களுக்கு இருக்காது.

[2000 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

*முற்பகல் 9-35.*

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் மாணவர்கள் மாணவிகளைவிடக் குறைந்த அளவில் தேர்வு பெறுகிறார்கள். இதை அரசு அறியுமா? இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண் மாணவர்களைவிட பெண்கள் அதிகமாக தேர்ச்சி பெறுகிறார்கள் என்பது உண்மை. அந்த உண்மைக்கு ஒரு நியாயம் இருக்கிறது. பெண்கள் படிப்பதில் அக்கறை காட்டுகிறார்கள். ஆடவர்கள் அதிக அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மீனாட்சி சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட பொறியியல் கல்லூரியில் கடந்த டிசம்பர் மாதம் தேர்வு எழுதியவர்களுக்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மீனாட்சி சுந்தரனார் இல்லை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

**திரு. மு. அப்பாவு:** மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில்—M.S.University என்று சொல்வார்கள். அதில் கடந்த டிசம்பர் 1999 மாதம் தேர்வு எழுதிவர்களுக்கு, பொறியியல் கல்லூரியிலிருந்து படித்து December Semester எழுதியவர்களுக்கு இதுவரை தேர்வு முடிவு வெளியிடப்படவில்லை. ஜனவரி முதல் வாரம் அல்லது இரண்டாவது வாரம் வெளியிடப்பட வேண்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட dummy number களை அந்த University—யிலே தொலைந்துவிட்டதாகத் தகவல் தெரிவிக்கின்றது. 3 மாத காலமாக தேர்வு முடிவு வெளியிடப்படவில்லையென்று பொதுமக்களும், மாணவர்களும் வேதனையோடு இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது குறித்து தெரியுமா? இதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்போதுதான் இந்தச்



2000 ஏப்ரல் 3]

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு கேள்வி எழுப்புகிற எண்ணம் வந்ததே தவிர, அதுபற்றி எழுதிகூட அனுப்பவில்லை. அவருக்கு அவசியம் என்ற உணர்வு இதற்கு முன்னர் ஏற்படவில்லை. ஒரு பல்கலைக்கழகம் என்பது சுயாட்சி உடையது. பல்கலைக்கழகத்திலே குறைபாடுகள் ஏற்படுமானால் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் மூலமாகத்தான் இந்தக் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். அரசு அவர்களுடைய கவனத்திற்குத்தான் கொண்டு வர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு தேர்வு விகிதத்தைக் கூடுதல் ஆக்குவதற்கும், பாடத்தின் சுமையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இந்தக் கால கட்டத்தில் மாணவர்களிடம் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும், நாட்டுப் பற்றை உருவாக்குவதற்கும், சேவை நோக்கத்தை வளர்ப்பதற்கும், முன்பு இருந்ததைப்போல, நீதி போதனை வகுப்புகளைக் கொண்டு வருவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனியான ஒரு கேள்வி இருக்குமானால் விவரமாக விடையளிக்க முடியும். இருந்தாலும் நான் தெரிவிக்க விரும்புவது, ஒழுக்க போதனை என்பது பாடத்தாலே மட்டும் வருவது அல்ல. ஆசிரியர்கள் நடந்து கொள்கிற முறை, ஒரு கட்டுப்பாடு, ஒரு ஒழுங்கு, இந்த நடைமுறைகள்தான் அவர்களை மிகச் சிறந்த ஒழுக்கம் உடையவர்களாக உயர்த்துகிறது. அந்தக் கட்டுப்பாடு மேலும் செம்மையாக அமைவதற்குத் தொடர்ந்து முயற்சிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியிலேயே தேர்வு மையம் இல்லாததால், தேர்வு விகிதம் குறைய வாய்ப்புள்ளது. எனவே எஸ்.எஸ்.எல்.சி-யில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் படிக்கும் பள்ளிகளுக்குத் தேர்வு மையம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 மாணவர்களுக்கு மேல் இருப்பார்களேயானால், அந்தப் பள்ளிக்கூடங்களில் போதுமான வசதிகள் இருக்குமானால், அந்த மையமாக ஏற்றுக் கொள்ளப்படுவது நடைமுறையில் இருப்பதாகத்தான் நான் அறிந்து இருக்கிறேன். மாணவிகளாக இருந்து, அதுவும் கோஷா மாணவிகளாக இருந்தால், 70 பேர், 80 பேர் இருந்தால்கூட கூடுமான

வரையில் அவர்களுக்கு மையம் வழங்கவும் முயற்சிக்கப்படுகிறது. எல்லாப் பள்ளிக்கூடங்களும் மையமாக அமைவதற்கு வாய்ப்பில்லை; அது நல்லதும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பல்வேறு வசதிகள் அந்தப் பள்ளிக்கூடத்தில் இருப்பதால் சிறப்பாகப் பயில்கிறார்கள். ஆனால் கிராமப் புறத்தில், எங்களுடைய எடப்பாடி போன்ற கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் அமர்வதற்குகூட சரியாக இடவசதி இல்லை. அவர்களால் சிறப்பாகப் கல்வியைக் பயில முடியவில்லை. இதையெல்லாம் மாற்ற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து சிறப்பான கல்வியைத் தமிழகத்திற்கு அளிக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தொடர் முயற்சி. ஏனென்றால், ஏறத்தாழ 35,000-க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகள், 6,000 7,000 ; உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் 5,000 6,000 ; மேல்நிலைப் பள்ளிகள் 3,000 4,000 அந்தப் பள்ளிக்கூடங்கள் அனைத்தும் போதுமான வசதிகளோடு அமைவதற்கான வாய்ப்பை கடந்த கால வரலாற்று அடிப்படையில் பெற்றிருக்கவில்லை. பள்ளிக்கூட வசதி குறைவாக இருக்கிறது என்பதற்காக கிராமப்புற மாணவர்களுடைய கல்வி தடைபட்டு விடக்கூடாது. எனவே வசதி குறைவாக இருந்தாலும், கிராமப்புற மாணவர்களை அந்தப் பள்ளிகளிலே படிக்க வைப்பதற்காக, வசதி குறைவாக இருக்கிற சூழ்நிலையிலேயும் பள்ளிகளை நாம் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறோம். பெற்றோர்களும், அந்த ஊர் பெருமக்களும் சேர்ந்து, போதுமான வசதி செய்ய இயலாவிட்டாலும், மேல் வகுப்புகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலை தொடர்ந்து இருக்கிறது. எனவே, வழங்கப்படுகிறது. இந்தக் குறைகளில் எந்தக் குறை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருதுகிறாரோ, அதை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்படுகிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 183, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**183—**

**கொசு ஒழிப்பு**

*8406-**திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியில் கொசு ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இந்த அவைக்கு அளிக்கின்றேன்.

ஆம். நாகை தொகுதியில் யானைக்கால் மற்றும் மலேரியா நோயினைக் கட்டுப்படுத்தவும், கொசு ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்தவும், நாகப்பட்டினம் தலைமை மருத்துவமனையில் 1997-98-ல் 24 மணி நேரம் இயங்கும் யானைக்கால் மற்றும் மலேரியா சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் மலேரியா, யானைக்கால் போன்ற நோய்களை, கொசு ஒழிப்புத் திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 65 நகராட்சிகளில் ரூபாய் 50 இலட்சம் செலவில் சிறப்புத் திட்டம் ஒன்று அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நாகை நகராட்சியும் ஒன்றாகும். மேலும், கொசு ஒழிப்பினைத் தீவிரப்படுத்தும் பொருட்டு மூவர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மும்பை, கல்கத்தா, புதுடெல்லி மற்றும் முக்கிய நகரங்களில் நடைமுறையில் உள்ள கொசு ஒழிப்பு வழிமுறைகளைக் கண்டறிந்து அறிக்கை ஒன்றினைத் தயாரித்துக் கொடுத்துள்ளது. அறிக்கையினை அரசு பரிசீலித்து, செயல்திட்டம் உருவாக்கி, நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேரியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் போன்ற நோய்களைப் பரப்பி வரும் கொசுக்களை அழிப்பதற்காக நம்முடைய அரசு எவ்வளவு தீவிர முயற்சிகளை மேற்கொண்டும், இன்னும் நமக்கு முழுமையாக வெற்றி கிட்டவில்லை. காரணம், அந்தக் கொசுக்களை அழிப்பதற்கு உரிய மருந்துக்கு சரியான வீரியம் இல்லை என்கின்ற ஒரு கருத்து கூறப்படுகிறது.

அமெரிக்க நாட்டில் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து, இப்போது ஒரு புதிய மருந்தைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அந்த மருந்தினை உபயோகப்படுத்தினால் கொசுக்களை முழுமையாக அழித்து விடமுடியும் என்கின்ற ஒரு நிலைமை இருக்கின்ற நிலையில், வரும் காலகட்டத்தில் நம்முடைய அரசு அந்த வகையில் முயற்சி மேற்கொண்டு கொசுக்களை முழுமையாக அழிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்குமா? மேலும், தற்போது சென்னையில் குப்பைகளை அகற்றுவதற்கு ஒரு தனித் துறையை அமைத்து, அழகாக, செம்மையாக நடக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போன்று கொசுத் தொல்லையை நீக்குகின்ற வகையில் ஒரு தனிப் படையை அமைத்து, தனியாரிடம் ஒப்படைத்து, கொசுக்களை அழிப்பதற்கும் அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுக்களை ஒழிப்பதை விட, கொசுக்கள் உருவாவதற்கு காரணம் என்ன என்பதை இந்த அரசு கண்டறிந்து, நீர் நிலைகளிலும், சாக்கடை போன்ற இடங்களிலும் கொசுக்கள் வளர்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதிலே, முதல் கட்டமாக, சென்னை மாநகராட்சி மிகச் சிறந்த முறையிலே அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. அதைப்போல, தமிழகம் எங்கும் இருக்கக்கூடிய நகராட்சிகளிலும் அமல்படுத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. எனவேதான், 65 நகராட்சிகளுக்கு ரூபாய் 50.00 இலட்சம் நிதியொதுக்கி, முதல் கட்டமாக அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. மேலும், இந்த அரசாங்கத்தாலே உருவாக்கப்பட்ட குழு, தன்னுடைய அறிக்கையைத் தந்திருக்கிறது. அதை முழுமையாக அமல்படுத்துவதற்கு இன்னும் ஓரிரு மாதங்களிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக யானைக்கால் வியாதியால் மக்கள் பெரிதும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் பொதுவாக நகராட்சிப் பகுதிகள் குறைவாக இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக, கருங்கல், நட்டாளம், தலக்குளம், இரணியல், திருவிதாங்கோடு, களியக்காவிளை போன்ற பகுதிகளில் வாழ்கின்ற குழந்தைகள் முதல் பெரியவர் வரை பெருவாரியாக இந்த யானைக்கால் நோயினால் பாதிக்கப்படக்கூடிய மிகக் கொடுமையான சூழ்நிலை இருக்கிறது. கொசுக்கள் மூலம் பல்வேறு





வகையான நோய்கள் பரவுவது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். Typhoid, Jaundice, Filariasis போன்ற நோய்கள் எல்லாம் பரவுகின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக, வரும் முன் காப்போம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் போல, கொசுக்களை அழிப்பதற்கு முதல் கட்டமாக, கொசுக்களை ஒழித்தாலே நாட்டிலே பெருவாரியான நோய்களைக் கட்டுப்படுத்திவிட முடியும். எனவே, கொசுக்களை ஒழிப்பதற்கு போர்க்கால நடவடிக்கையாக ஏதாவது சிறப்புத் திட்டம் உண்டா? கன்னியாகுமரி மாவட்டத்திலே யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களை, உடல் ஊனமுற்றோர் பட்டியலிலே சேர்த்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற திட்டமும் அரசினுடைய செயல்பாட்டில் உள்ளதா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, கன்னியாகுமரியிலே யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் என்பதை அரசும் அறியும், முதலமைச்சரும் அறிவார்கள். அங்கே அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் புகைப்படங்கள் எல்லாம் எடுத்து, முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு வந்திருந்தபோது, அவர்களிடத்திலே காட்டி, அதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அமல்படுத்த வேண்டுமென்று அங்கே வலியுறுத்தினார்கள். உடனடியாக, முதலமைச்சர் அவர்களும் எங்களுக்கு அறிவுரை வழங்கி தனி இலாகாவே அந்த மாவட்டத்திலே உருவாக்கப்பட்டு, இப்போது மிகச் சிறப்பாக அந்த இலாகா, அந்த யானைக் கால் நோயை ஒழிப்பதற்கான பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது. ஏற்கெனவே முதிர்ந்த நிலையிலே இருக்கின்றவர்களுடைய நோயைக் கட்டுப்படுத்த முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், புதியதாக யாருக்கும் யானைக்கால் நோய் வராமல் தடுப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. மேலும், அந்தப் பாதிக்கப்பட்டவர்களை ஊனமுற்றவர்களாகக் கருதி, அரசு ஏதாவது உதவி செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அது குறித்து பின்னர் அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், நீங்களே பெரிய சித்த மருத்துவர் ஆயிற்றே, உங்களிடம் மருந்து கிடையாதா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோய் என்பது கொடுமையான நோய். அது வந்தபிறகு தான் அதைக் கண்டுபிடிக்க முடிகிறது. பெருவாரியாகப்

[2000 ஏப்ரல் 3

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க இதுவரைக்கும் எங்களுடைய மருத்துவத்தில் யாரும் முயற்சியில் ஈடுபடவில்லை. உங்களுடைய அறிவுரைப்படியே இனிமேல் யானைக்கால் நோயையும் சரியாக்க முடியுமா என்ற முயற்சியை நாங்கள் மேற்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, இது நாகப்பட்டினம் பற்றிய கேள்வி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திலே மட்டுமே கொசு ஒழிக்கிற கேள்வியாக இருந்தாலும், இது தமிழ்நாட்டின் பிரச்சினையாகவும் இருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு மூலமாக நகராட்சிகளுக்கு, மாநில அரசுகளுக்கு கொசு ஒழிப்பதற்கு மருந்துகள் மானியமாக வழங்கப்பட்டு வந்தன. அவை இப்பொழுது கிடைக்கிறதா? கிராமங்களைவிட நகரங்களிலே பன்றிகள் நிறைய மேய்கின்றன. பன்றியிலே இந்தக் கொசு உட்கார்ந்து கடித்து விட்டு, சில குழந்தைகளையும், வேறு யாரையும் கொசு கடித்துவிட்டால், மூளைக்காய்ச்சல் போன்ற நோய் ஏற்பட்டு, வேகமாகப் பரவி, உயிர் இழப்பு ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? மத்திய அரசிடமிருந்து கொசுக்களை ஒழிப்பதற்கான மருந்துகளை நாம் பெறுகிறோமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி குறிப்பிட்டது போல தமிழகம் முழுவதற்கும்தான் இந்தத் திட்டத்தைப் பற்றி நான் சொல்லிக் கொண்டு இருக்கின்றேன். அவர் கேட்டதைப்போல தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் உதவியுடன் கொசுப் புழுக்கொல்லிகளை ஒழிக்கின்ற திட்டம் இப்போதும் மத்திய அரசின் உதவியோடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு, 1997-98-ல் பெந்தியான் என்ற அந்த மருந்து 5,000 லிட்டர் அளவிற்கு 41 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் மத்திய அரசாங்கம் நிதியுதவி செய்திருக்கிறது. 1997-98-ல் டெமிபாஸ் 1,200 லிட்டர் 54 இலட்சத்து 86 ஆயிரத்து 841 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே, 1998-99-ல் பெந்தியான் 14 ஆயிரம் லிட்டர் அந்த மருந்தை வாங்குவதற்கு 1 கோடியே 34 இலட்சத்து 53 ஆயிரத்து 440 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.



2000 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**184—**

## மின்னழுத்தம் சீரமைத்தல்

*28117—**திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைக்கருங்குளம், மின்வாரிய துணை நிலையத்திற்குட்பட்ட தோப்புவிளை கிராமத்தில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டைக்கருங்குளம் Sub-Station—லிருந்து மின்சாரம் வருகின்றபோது தோப்புவிளைக்கு மின்மாற்றி எண் 1-ன் மூலம் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது விவசாயத்திற்காக ஒரு மின் மாற்றி அமைக்கப்பட்டு அது நீண்ட தூரத்தில் இருப்பதால் அதிலிருந்தும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. புதிய மின் மாற்றி எப்பொழுது அமைக்கப்படும் என்று கேட்பதோடு, இதேபோன்று குட்டம், குஞ்சனவிளை, வெம்மனக்குடி, கூடுதாழை, இராமங்குடி, செம்மன்விளை, கூடாவிளை, குண்டல், இடிந்தகரை, விஜயாபதி, தோமையார்புரம், ஆவுடையார்புரம், எஸ்.எஸ்.புரம், கஸ்தூரிரங்கபுரம், வடுகம்மன்பட்டி, செட்டிக்குளம், புதுமனை, சங்கனாபுரம், தளவாய்புரம், கேசவனேரி போன்ற பகுதிகளிலேயும், மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது. அவற்றிற்கும் விரைவிலேயே மின் மாற்றிகள் அமைத்து சீரான மின்னழுத்தம் கொடுக்க முன் வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோப்புவிளை கிராமத்திற்கு மின் விநியோகம் செய்யும் மின்மாற்றி எண் 1-லிருந்து செல்லும் தாழ்வு அழுத்த மின்னூட்டியில் உள்ள பழைய கம்பிகளை மாற்றி பருமனான கம்பிகள் போடுவதன் மூலம் மின் அழுத்தத்தை சீர் செய்வதற்கு மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு, அப்பணியானது, 17-11-1999 அன்று முடிக்கப்பட்டுவிட்டது.

*முற்பகல் 9-50*

இந்தப் பணிக்கு முன்பும், பின்பும், மின் அழுத்தம் முறையே 140 வோல்ட்டும் 200 வோல்ட்டும் ஆகும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த மாவட்டத்திலேயுள்ள அத்தனை கிராமங்களுடைய பட்டியலையும் சொல்லி, அங்கெல்லாம் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மையாக இருக்காது. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்தியிலே இருக்கக்கூடிய நம்முடைய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சரவர்கள், அங்கே நாங்குனேரி போன்ற பகுதிகளிலும், குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தையே தொழில்மயமாக்க வேண்டுமென்ற ஒரு முடிவெடுத்து, மத்திய அமைச்சர்கூட, Export Free Zone—நாகப்பட்டினம் மாவட்டத்திலே நேற்று இந்தியா முழுவதும் பாராட்டக்கூடிய அளவிற்கு அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு முழுவதும் தூத்துக்குடியிலே மின் அழுத்தக் குறைவே ஏற்படாத வகையில் எல்லா திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தில் உள்ளதை முழுவதும் சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலுள்ள, மின் அழுத்தம் குறைவாக இருப்பதைக் குறித்து அங்குள்ள D.E., S.E. போன்றவர்களோடு முறைப்படி தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறேன். அவர்கள் மின் அழுத்தம் குறைவாக இருப்பதை ஒத்துக்கொள்வதோடு, 2000—2001-லே அதற்குரிய சாமான்கள் இன்னும் அதிகமாகக் கிடைக்கவில்லை. ஆகவே, வந்ததும் செய்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முன்னுரிமை கொடுத்து, இந்த ஊர்களுக்கெல்லாம் மின் மாற்றி அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்றுதான் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி மட்டுமல்ல. அந்த மாவட்டத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அனைத்து



2000 ஏப்ரல் 3]

நடவடிக்கைகளும் இந்த ஆண்டு டிசம்பருக்குள்ளாக எடுக்கப்படும் என்பதைத்தான் நான் என்னுடைய பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாங்குநேரி, தூத்துக்குடி மாவட்டமா?

**திரு. மு. அப்பாவு:** திருநெல்வேலி மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 185, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**185—**

**வட்டம் உருவாக்குதல்**

*29577—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆலந்தூர் வட்டம் உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் வட்டம் மிகப் பெரிய அளவிலே பரந்து கிடக்கின்ற வட்டம், 30 மைல் பரப்பளவு வட்டமாக இருக்கிறது. பொதுமக்கள் அந்த வட்டத்திற்கு வந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிற காரணத்தால் அதை இரண்டாகப் பிரித்து ஆலந்தூரில் ஒரு வட்டம் ஏற்படுத்துவதற்கு மீண்டும் மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வாரா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கட்தொகை கணக்கெடுப்புப் பணி 1-1-2000 முதல் 31-3-2001 வரை நடைபெற உள்ளதால், புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்கவோ, நிர்வாக அமைப்புகளில் மாற்றம்

[2000 ஏப்ரல் 3

செய்யவோ கூடாது என அரசு ஆணை நிலை எண் *1841*, பொதுத் (தேர்தல்) துறை, நாள்: *15-12-1999*-ல் தடை விதித்து, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உறுப்பினரின் கோரிக்கை மக்கட்தொகை கணக்கெடுப்புப் பணி முடிந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *186*, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**186—**

**ஊராட்சியுடன் இணைத்தல்**

**21847*—**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, வடுகுபாளையம் ஊராட்சியைச் சேர்ந்து திருவெங்கலூர் கிராமத்தினை திருமானூர் ஊராட்சியுடன் இணைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வடுகுபாளையம் ஊராட்சிக்கும், திருவெங்கலூர் கிராமத்திற்கும் கிட்டத்தட்ட *6* கிலோமீட்டர் இருக்கிறது. ஆனால், திருமானூர் ஊராட்சி அரை கிலோமீட்டரில் இருக்கிறது. வடுகுபாளையம் ஊராட்சிக்குச் செல்ல வேண்டுமென்றாலும், திருமானூர், வந்துதான் செல்ல வேண்டும். அந்த திருவெங்கலூர் கிராம மக்கள் அத்தனை பழக்க, வழக்கங்களையும் திருமானூரிலே வைத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. தூரம் அதிகமாக இருப்பதனால் அந்த வடுகுபாளையம் ஊராட்சித் தலைவர்கள் திருவெங்கலூர் கிராமத்திற்குச் சென்று, அங்கு பணிகளைச் சரிவர கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்த திருவெங்கலூர் கிராமத்தை திருமானூர் ஊராட்சியில் சேர்க்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமம் அல்லது ஒரு ரெவின்யூ கிராமம் இவை *500* மக்களுக்குக் குறையாமல் இருக்குமானால் அல்லது *2* கிலோ மீட்டர் தாண்டாமல் இருக்குமானால், அவற்றைத் தனித்து பிரிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் இதுபோன்ற கோரிக்கைகள் பல பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. அதெல்லாம் முடிவுற்று, இங்கே வருமானால், வந்தாலும் தற்போது சட்டப்படி திட்டமிட்டு, அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், *1-1-2000* முதல் *31-3-2001* வரை எந்தவிதமான பணிகளும் செய்யக்கூடாது என அந்தப் புள்ளிவிவரக் கணக்குகள் எடுக்கின்ற அத்துறை அரசுக்கு அனுப்பியிருக்கின்ற காரணத்தால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இந்தப் பரிசீலனை முடிவுற்று தயார் நிலையில் இருந்தால், அதற்குப் பிறகு அறிவிப்பைச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் *187*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*முற்பகல் 9-55*

**187—**

**மேம்பாலத்திற்கு நிதி**

**24231*—**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மேம்பாலங்கள் கட்டுவதற்குத் தேவைப்படும் நிதியைப் பத்திரங்கள் வெளியீட்டின் மூலம் திரட்ட சென்னை மாநகராட்சி உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வெளியிடப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2000 ஏப்ரல் 3

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் 29/98 கடிதப்படி Bond—ன் மூலம் நிதி பெறுவதற்கு 14% லிருந்து 14½% வட்டி ஆகும். ஹட்கோ மூலமோ டூஃபிட்கோ மூலமோ மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைக்கிறது. ஆகவே அதிலே பெற வேண்டுமென்று அரசு அறிவுறுத்தியது. ஆனால், Municipal Tax Free Bond என்ற மத்திய அரசின் திட்டத்தின்கீழ் குறைந்த வட்டியில் இப்போது நாசிக், அகமதாபாத் போன்ற மாநகராட்சிகள் பயன்பெறுகின்றன. குறிப்பாக நம்முடைய தமிழ்நாடு மின் வாரியம் இதுவரையிலும் 300 கோடி ரூபாயை அந்தத் திட்டத்தின்கீழ் பெற்றிருக்கின்றது. எனவே, மேலும் 12 பாலங்கள் சென்னை மாநகராட்சியில் கட்டுவதற்கு மத்திய அரசு திட்டத்தின் கீழ் குறைந்த வட்டியில் நிதி பெற அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நாம் அறிவித்து பணிகள் நடந்திருக்கின்ற பாலங்களுக்காக முதலில் அரசு அப்படித் திட்டமிட்டு அவர்கள் வசூலிக்கலாம் என்ற நிலை இருந்தாலும், அவர்கள் அதைப்பற்றி பத்திரங்கள் வெளியீட்டின் மூலம் பெறுவதை விட குறைந்த வட்டிக்கு கிடைக்கிறது என்ற அடிப்படையில் தற்போது கடன் பெற்று, மிகுதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து சேர்த்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேற்பட்டு புதிய பாலங்கள் கட்டுகிற சூழ்நிலை வருகிறபோது அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 188, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**188—**

### ஓடையின் குறுக்கே பாலம்

*13696—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்தில் செங்கவரம் மற்றும் காரைமேட்டில் மழைக் காலங்களில் செங்கவரம் ஏரியில் இருந்து வரும் ஓடையில் அதிக தண்ணீர் செல்வதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?



2000 ஏப்ரல் 3]

(ஆ) ஆம் எனில், ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செங்கவரம் கிராமம், செங்கவரம் ஏரி கலுங்கல் வடிகால் கால்வாயில் பழுது அடைந்திருந்த சிறு பாலம் ரூ.90,000 மதிப்பீட்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, பணி அக்டோபர் 1998-ல் முடிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. என்னுடைய தொகுதியில் வாழ்கின்ற 95 விழுக்காட்டிற்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள். என்னுடைய தொகுதிக்கு உள்ளடங்கிய செஞ்சி ஒன்றியத்தில் மலைப்பாறை ஏரி என்கின்ற திட்டம், மற்றும் மேல்மலையனூர் ஒன்றியத்தில் வராக நதி என்கின்ற திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நீண்ட நாட்களாகத் தயார் நிலையில் இருக்கின்றன. எனவே, அந்த மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் இந்தத் திட்டங்களை வரும் நிதியாண்டில் நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியான வேறொரு பிரச்சினை. இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டாலும் சரி, அல்லது பொதுப்பணித் துறை மானியத்திலே பேசுகிறபோது சொன்னாலும் சரி, அதுகுறித்து நான் பதிலளிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**189—**

### சாலை அமைத்தல்

*29450—**திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 3

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் பெத்தேல்புரம்—சிறுவாட்டுகாட்டிற்கு இடையே சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள வடகாடு ஊராட்சி மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. அந்த வடகாடு ஊராட்சியில் பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுகாட்டிற்குச் செல்ல வேண்டும் என்றால் இடையிலே சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அந்தச் சாலை இதுநாள் வரை அமைக்கப்படவில்லை. சிறுவாட்டுகாட்டில் மக்கள் சுமார் ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள். அங்கு ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம்கூட இருக்கிறது. அங்கே எந்த ஆசிரியரைப் பணிக்கு நியமித்தாலும் வர மறுக்கிறார்கள். காரணம் தினமும் காலையில் 6 கிலோ மீட்டரும் மாலையில் 6 கிலோ மீட்டரும் நடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அங்குள்ள மக்கள் ஏதாவது பொருள்களை சிறுவாட்டுகாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டுமென்றால் குதிரையில்தான் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதேபோன்று அங்குள்ள மக்கள் மருத்துவமனைக்கோ அல்லது விபத்துக் காலத்தில் கீழே வரவேண்டுமென்றாலோ குதிரையில்தான் வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுகாட்டிற்குச் சாலை அமைக்க இந்த ஆண்டு நிதி ஒதுக்குவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் அரிய இனமான சாம்பல் நிற அணில்கள் அதிகம் காணப்படுகின்றன. இயற்கை தாவரங்களுக்கும், அரிய உயிரினங்களுக்கும் கடும் பாதிப்பு ஏற்படும் என்பதால் இந்தப் பகுதியிலே சாலை அமைக்க முடியாத நிலை இருக்கிறது. இந்தப் பகுதி கொடைக்கானல் வன உய்விடப் பகுதியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர் மக்கள் சென்று வருவதற்கு வேறு வழியிருக்கிறது என்று தெரிகிறது.



2000 ஏப்ரல் 3]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையை உள்ளடக்கிய ஒரு மாவட்டம், வனத் துறைக்குச் சொந்தமான பல்வேறு சாலைகள் அந்தப் பகுதியிலே அதிகம் இருக்கின்றன. கிராமப் பகுதிகளிலே, மலை கிராமங்களிலே வாழக்கூடிய மக்கள் ஆங்காங்கே பல இடங்களிலே வனத் துறையால் சாலைகள் போடப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். அதன் அடிப்படையிலே திண்டுக்கல் தொகுதி, ஆத்தூர் தொகுதி, ஒட்டன்சத்திரம் தொகுதி ஆகிய தொகுதிகளில் அடங்கிய பல்வேறு மலைக் கிராமங்களுக்கு வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலைகள் போடப்படாமல் இருக்கின்றன என்ற ஒரு வருத்தம் அந்த மக்கள் மத்தியிலே இருக்கின்றது. அதை ஆய்வு செய்து அந்த மலைக் கிராம மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்கின்ற வகையிலே இந்த ஆண்டு அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மலைவாழ் மக்கள் சென்று வருவதற்குப் பாதை அமைப்பதற்குப் பல திட்டங்கள் மத்திய அரசாலும், மாநில அரசாலும் உருவாக்கப்பட்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட பணிகள் நடைபெறவில்லை என்பதை என்னிடத்திலே ஒரு பட்டியலாகத் தருவாரேயானால், அதுகுறித்து அதிகாரிகளோடு கலந்து பேசி, அவசியமென்றால் அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 190, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**190—**

**பேருந்துகளின் எண்ணிக்கை**

*23986—**திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 3

அரசு போக்குவரத்துக் கழக கோவில்பட்டி கிளையில் இயங்கிக் கொண்டிருக்கும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) கோவில்பட்டி பணிமனை தற்போது 21 நகரப் பேருந்துகளையும், 34 புறநகர் பேருந்துகளையும், 6 மாற்றுப் பேருந்துகளையும், ஆக 61 பேருந்துகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், மதுரை கோட்டம்-5-ஐச் சேர்ந்த கோவில்பட்டி கிளையில் 19 புறநகர் பேருந்துகளும், 2 உபரிப் பேருந்துகளும் ஆறு வழித் தடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், விளாத்திகுளம், சங்கரன் கோவில், தூத்துக்குடி, திருநெல்வேலி, சாத்தூர், இராஜபாளையம் ஆகிய இடங்களில் பணிமனைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய பணிமனைகளில் இருந்து இயக்கப்படும் பேருந்துகள் மூலமாக கோவில்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்குப் போதிய பேருந்து வசதிகள் தற்போது இருப்பதால் கோவில்பட்டி கிளையில் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த தற்போது தேவை எழவில்லை.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி விரைந்து வளரக்கூடிய நகரம். அந்த நகரத்தைச் சுற்றி, 20 வழித் தடங்கள் கிராமப் பகுதிகளிலேயிருந்து கோவில்பட்டி நகரத்திற்குத்தான் வந்தாக வேண்டும். ஆகவே, நகரப் பேருந்துகளை அதிக எண்ணிக்கையில் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது 66 பஸ்கள் ஓடினாலும் மக்கள் மத்தியிலே, கிராமப் பகுதிகளில் பஸ் வசதியில்லை என்ற குறை நீண்ட நாட்களாக இருக்கின்றது. அதனால், வளர்ந்து வரக்கூடிய அந்தக் கோவில்பட்டி நகரத்திற்கு அதிக எண்ணிக்கையில் பேருந்துகளைக் கொடுத்து, 20 வழித் தடங்களில் கிராமப் பகுதியிலிருந்து வரக்கூடிய மக்களுக்கு மேலும் நகரப் பேருந்துகளை அதிகப்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வாழுகிற மக்களுடைய கோரிக்கைகளுக்கேற்பவும், போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலைக்கேற்பவும் வருங்காலங்களில் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 191, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 3]

191—

## பேருந்து வசதி

*26475— **திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், காட்டுப்பாளையம், வேலம்பாளையம், ஆதிதிராவிடர் காலனி ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்-2) ஈரோட்டைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண் வி. 1 வெள்ளக்கோவிலிருந்து காட்டுப்பாளையம், வேலம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி பிரிவு வழியே 9-12-1998 முதல் தினசரி 4 தனி நடைகளை இயக்கி வருகின்றது. வேலம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி பிரிவில் பேருந்து சென்று திரும்ப இயலாதபடி குறுகிய பாலம் உள்ளதால் காலனி வரை பேருந்து சென்று வர இயலாத நிலை உள்ளது. மேலும், மேற்படி பிரிவிருந்து காலனி சுமார் 200 மீட்டர் தொலைவிலேயே உள்ளது.

**திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னால் எழுப்பப்பட்டிருக்கின்ற வினாவில் அடங்கியுள்ள கிராமங்களான காட்டுப்பாளையம் மற்றும் வேலம்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்குப் பேருந்து சென்று கொண்டிருப்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். நீண்ட நாட்களாக நான் வலியுறுத்தியதால் அந்தப் பேருந்து, போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மூலம் இயக்கப்பட்டது என்பது உண்மை. அதற்காகத் துறைக்கும், அரசுக்கும் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், 4 முறை சென்று வருகின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது இரண்டு முறைதான் சென்று வருவதாக இதுவரையில் அந்தப் பகுதி மக்கள் என்னிடம் கூறியிருக்கின்றார்கள். நான் விசாரித்த அளவிலே அது உண்மையாகத் தெரிகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவலை அதிகாரிகள் தந்திருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றி மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி 4 தனிநடைகள்

[2000 ஏப்ரல் 3

தொடர்ந்து இயங்குவதற்கு, மேலும் ஆவன செய்ய வேண்டும். மேலும், அந்தப் பகுதிகளினுடைய கிராமங்கள் தாசநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதி. அந்தப் பகுதியினுடைய மக்கள் வங்கிக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, ஊராட்சிமன்ற அலுவலகத்திற்குச் செல்வதாக இருந்தாலும், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் போன்ற வங்கிகளுக்குச் செல்வதாக இருந்தாலும், அந்த தாசநாயக்கன்பட்டிக்குச் செல்ல வேண்டும். அதனால் காட்டுப்பாளையம், அதேபோல, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்த ஆதிதிராவிட காலனிக்குள்ளே பேருந்து செல்லவில்லை என்றாலும் அந்த முக்கிய சாலை வழியாக, அதே வழியாகச் சென்று உத்தமபாளையம் வழியாக, நாமநாயக்கன்பட்டி வழியாக தாசநாயக்கன்பட்டி சென்றால் ஏதுவாக இருக்கும். அதுமாதிரி வழித் தடத்தை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்ட குறிப்பில் 4 தனி நடைகள் செல்வதாகத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு அது சுருக்கப்பட்டு 2 தனி நடைகளாக இயங்கி வரும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வாறு குறிப்பிடுவார்கள் என்று சொன்னால், நிச்சயமாக 4 தனி நடைகள் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே இருக்கிற பொது மேலாளரை நான் அவருடன் அனுப்பி வைக்கின்றேன். அதற்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தருவார்கள் என்று சொன்னால், அவர் கோரிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு வாய்ப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நிறைய விவசாயிகள் காய் கனிகளைத் திருப்பூருக்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஏராளமான குழந்தைகள் பொங்கலூர் கல்விச் சாலைக்கு வர வேண்டியிருக்கிறது. அதேபோல, தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்னுடைய தொகுதி. ஏற்கெனவே விவசாயிகளுக்கு ஒரு தனி பேருந்து வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அதனால், இப்போது காய் கனிகளை எல்லாம் அவர்கள் உழவர் சந்தைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கிறது. ஆனால், தொழிலாளர்களும்,



2000 ஏப்ரல் 3]

குழந்தைகளும் அந்த பஸ்ஸிலேயே நெருக்கியடித்துக்கொண்டு வர வேண்டிய காரணத்தினால், காலையில் தொழிலாளிகளுக்காவது தனியாக ஒரு பேருந்தை விடுவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தனியாக ஒரு பேருந்தும், தொழிலாளர்களுக்குத் தனியாக ஒரு பேருந்தும், மாணவர்களுக்குத் தனியாக ஒரு பேருந்தும் இப்படித் தனித் தனியாக பேருந்துகளை இயக்கிக் கொண்டிருப்பது எவ்வளவு கடினம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, நேரத்திற்கேற்ப அங்கே இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப, பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உழவர் சந்தை ஆரம்பித்தபோது, அவர்கள் இலவசமாக அந்தக் காய்கறிகளைக் கொண்டு வர வேண்டுமென்ற அந்த உயரிய நோக்கத்தோடு அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றையே தொழிலாளர்களும் பயன்படுத்திக் கொள்வதுதான் சிறப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**192—**

### சாலையைச் சீர்செய்தல்

**25768*—**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, நூம்பல் நெடுஞ்சாலை (சென்னை பூந்தமல்லி-கோபரசநல்லூர்- புளியம்பேடு- நூம்பல் சாலை) மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் கண்டுள்ள சாலை ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்பட்டு, தற்போது போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *193*, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**193—**

**கருணை இல்லம்**

**28128*— **திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், சின்னமனூரில் சிவகாமியம்மன் கோயிலின் பராமரிப்பில் கருணை இல்லம் மீண்டும் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிவகாமியம்மன் கோயிலில் நீண்ட நாட்களாக இலவசமாக ஏழை மக்களுக்கு உணவு அளித்து வந்தார்கள். சமீப காலமாக நிதிநிலையினுடைய கஷ்டத்தின் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதைத் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு, அதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய வினா, அந்தக் கோயிலில் நடத்தப்பட்ட கருணை இல்லம் தொடர்பானது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஏராளமான கருணை இல்லங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆனால், சின்னமனூரைப் பொறுத்தவரையில் மொத்த வருமானம் *4* இலட்சத்து *32* ஆயிரத்து மூன்று ரூபாய். இந்தக் கருணை இல்லம் தொடங்கப்பட்ட காலத்திலேகூட போதுமான நிதி வசதியில்லாத



காரணத்தினால் *5* கோயில்களிலிருந்து கடன்பெற்றுத்தான் இந்தக் கருணை இல்லம் நடந்து கொண்டிருந்தது. ரெட்டியார்சத்திரத்தில் *3,000* ரூபாய், திண்டுக்கல்லில் *3,000* ரூபாய், இராஜபாளையத்தில் *3,000* ரூபாய், வீரபாண்டியில் *15,000* ரூபாய், தெப்பம்பட்டில் *15,000* ரூபாய், என்று கடன் பெறப்பட்டது. அதேநேரத்தில் இந்தக் கோயில் அரசுக்குத் தரவேண்டிய தொகை *3* இலட்சத்து *23* ஆயிரம் ரூபாய் இன்னும் நிலுவையில் இருக்கிறது. எனவே, இந்த நிலையில்தான், கருணை இல்லத்தை அந்த ஊரில்—ஏனென்றால் மற்ற இடங்களில் சிறப்பாக நடக்கிறது.— சிறப்பாக நடத்த முடியவில்லை என்பதற்காக அந்த மாணவர்கள் அனைவரும் வீரபாண்டி கௌமாரியம்மன் கோயிலுக்கு அனுப்பப்பட்டு, இப்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் அறநிலையத் துறை மூலம் எத்தனை கருணை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் எத்தனை மாணவர்கள் மொத்தம் உள்ளனர் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் *38* திருக்கோயில்களில் *43* கருணை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர்கள் *966* பேர், சிறுமியர் *433* பேர். இதில் *23* இல்லங்கள் சிறுவர்களுக்கும், *20* கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கும் நடத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *194*, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**194—**

**தெப்பக்குளத்தைச் சீரமைத்தல்**

**29860*—**திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான தெப்பக்குளத்தைச் சீரமைத்துத் தூர் வாரி சிறப்பாக தெப்பம் விட அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 3

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமானதாகக் கூறப்படும் தெப்பக்குளம் மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமானது அல்ல. இக்குளம் விருத்தாசலம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

*முற்பகல் 10-10*

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான அந்தத் தெப்பக்குளம் இருக்கின்ற இடம் கோயிலுக்குச் சொந்தமானது அல்ல. ஆனால், விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திலே மாசிமகம் திருவிழாவையொட்டி நடக்கின்ற தெப்பத் திருவிழா கோயிலின் சார்பாகத்தான் நடத்தப்படுகின்றது. எனவே, நகராட்சியில் நிதி இல்லை, அதிக வருமானம் உள்ள கோயிலிலேயிருந்து பல கோயில்களுக்கு பல பணிகளைச் செய்கின்ற இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, ஏனென்றால் இரண்டு பக்கங்களில்தான் அந்தக் கற்கள் சரிவுற்றிருக்கின்றன, அதனால் அங்கு வருகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் நின்று அந்த தெப்பத் திருவிழாவை அதிகமாக ரசிக்க முடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதைச் சீரமைத்துத் தருவதற்கான ஏற்பாட்டினைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயில் குளம் கிராமப் பதிவேட்டில் அம்மன் குளம் என்ற பெயரில் இருக்கிறது. அது கோயில் சொத்துப் பதிவேட்டில் வரவில்லை. எனவே, அது நகராட்சியின் பராமரிப்பில்தான் உள்ளது. ஒவ்வொரு முறையும் மாசிமகம் திருவிழா வருகிறபோது, நகராட்சியே பொறுப்பேற்றுக்கொண்டு, அதில் தூர் வாரச்செய்து, தண்ணீர் நிரப்பி முறையான தெப்பத் திருவிழாவை நடத்திக்கொண்டு வருகிறது. இதுதான் நடைமுறை உண்மை. எனினும், கோயில் நிர்வாகம் வாய்ப்பிற்கேற்பக் கொஞ்சம் நிதிவசதியைக் கூடுதலாக்கி, இயன்றவரை உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 195, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 3]

**195—**

**விவசாயிகளுக்குப் பச்சை அட்டை**

*30867—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நபார்டு வங்கி உத்தரவுப்படி கேரளா அரசு விவசாயிகளுக்குப் பச்சை அட்டை வழங்குவது போல, தமிழக விவசாயிகள் கடன் பெற பச்சை அட்டை திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி பரிந்துரைத்த, இந்திய தலைமை வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "கிசான் கடன் வசதி அட்டை" வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகள் இப்போது பயிரிடுவது என்றால் மிகவும் கடுமையான செலவினங்கள் ஆகின்றன. அந்தச் செலவினங்களை ஈடுகட்டுவதற்காக கந்து வட்டிக்காரர்களிடமெல்லாம் அவர்கள் சென்று கடன்பட வேண்டியிருக்கின்ற சூழ்நிலையை மாற்றியமைக்க, நபார்டு வங்கி இத்தகைய வழிகாட்டி நெறிமுறைகளை வழங்கியிருப்பதாக கேள்விப்படுகிறோம். எனவே, பச்சை அட்டை அனைத்து விவசாயிகளுக்கும், தமிழகம் முழுவதும் எப்போது வழங்கப்பட்டு நடைமுறை படுத்தப்படவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

இன்னொரு கேள்வி. நபார்டு வங்கி கடன் வழங்குகிறபோது அது மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டு, நேரடியாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படுமேயானால், அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற கடனுதவிக்கு வட்டிச் சுமை குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இப்போது நடைமுறையிலே நபார்டு வங்கியிலேயிருந்து மாநில கூட்டுறவு வங்கி வாங்கி, அவர்கள் ஒரு வட்டியைப் போட்டு அதை மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு வழங்கி, அவர்கள் இன்னொரு வட்டி போட்டு, அதைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்குகிறபோது, விவசாயிகள் தேவையில்லாமல் வட்டிச் சுமைக்கு ஆளாகிறார்கள். எனவே, நபார்டு வங்கி வழங்குகின்ற

அந்தக் கடன் உதவித் தொகையை மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து நேரடியாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கினால் விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்தும், வட்டிச் சுமையிலிருந்தும் பாதுகாக்க வழி ஏற்படுகிற காரணத்தினால், இதனைச் செய்ய அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலை ஆணை எண் 94, 22-4-1999 ஆம் தேதியன்று நமது தமிழக அரசின் சார்பாக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. கிசான் கடன் வசதி அட்டை மூலம் ரூபாய் 5 ஆயிரத்திற்கு மேல் கடன் பெற தகுதியுள்ள உறுப்பினர்கள் பயிர்க் கடன் அளவு, மற்றும் தனி நபர் உச்சக் கடன் அளவு பெற தங்கள் தேவைக்கேற்ப எத்தனை முறை வேண்டுமானாலும் கடன் பெறலாம். அவ்வகை அட்டை மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். அட்டை மூலம் பெறப்பட்ட கடன் 12 மாதங்களுக்கு மேல் நிலுவையாக இருக்கக்கூடாது. இதனை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். 29-2-2000 வரை 18 மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 14 ஆயிரத்து 357 விவசாயிகளுக்குக் கடன் அட்டை கொடுக்கப்பட்டு, 20.91 கோடி ரூபாய் கடன் தொகையினைப் பெற்றுள்ளார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நபார்டு வங்கியிலிருந்து பெறக்கூடிய தொகை நேரடியாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தரப்படுமேயானால், இன்னும் விவசாயிகளுக்குக் குறைவான வட்டிக்குத் தரமுடியாதா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்—நேரிடையாக நபார்டு ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறக்கூடிய கடனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கொடுத்தால்கூட, அவர்களுடைய நிபந்தனை என்னவென்றால், நாங்கள் 5 சதவீதத்திற்குத் தந்தால், விவசாயிகளுக்கு 12 சதவீதத்திற்குக் குறைவாகக் கொடுக்கக்கூடாது, 12 சதவீதத்திற்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் அந்தப் பணத்தைத் தருகிறார்கள். இப்போதுகூட நபார்டு வங்கியிலிருந்து 5 சதவீதத்திற்கு வாங்கி, தலைமை வங்கி முழுமையாகப் பெற்று, தலைமை வங்கியிடமிருந்து ஐந்தரை சதவீதத்திற்கு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் பெறுகிறபோது 100 கோடி ரூபாய் கடன் தருவார்களேயானால், அதில் கிட்டத்தட்ட 65 சதவீதம் நபார்டு வங்கியினுடைய பணமும், 35 சதவீதம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய பணமும் இணைத்துதான் தரவேண்டுமே தவிர, முழுமையாக நபார்டு வங்கியினுடைய பணத்தையே தர இயலாது. மத்திய வங்கி வெளியிலிருந்து வைப்புத் தொகை வாங்குகிறபோது, 13.5 சதவீதம், 14 சதவீதம் என்று வைப்புத் தொகையை விவசாயிகளிடமிருந்து





வாங்குகிறார்கள். ஆனால், இரண்டையும் சேர்த்துத்தான் அந்தப் பணத்தை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே 9 சதவீதத்திற்குக் கழிக்கிறார்களே தவிர, அது முழுமையாக நபார்டு வங்கியின் பணம் மட்டும் அல்ல. ஆகவே இரண்டு வங்கிகளின் பணமும் தரப்படுகின்ற காரணத்தால், இதற்குக் குறைவான வட்டிக்குத் தர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய கடன் அட்டையானது இப்போது 14,000 பேர்களுக்கு வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் அதை அதிகப்படுத்திட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிற இந்த நேரத்தில், சேத்தியாதோப்பில் இருக்கிற எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்கப்பட்டபோது, அதனுடைய பங்குத் தொகையாக ரூ.1,000-ஐ விவசாயிகளிடமிருந்து கேட்டபொழுது, அப்போதைக்கு ரூ.100 கட்டினால் போதும், பாக்கி ரூ.900-ஐ கடனாக வைத்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கிறோம் என்று சொல்லி, அப்போது ஆலைக்குப் பங்குகள் சேர்க்கப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னாலே, அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குச் சரியான return கிடைக்கவில்லை. இந்த நிலையில், செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ரூ.900, இன்றைக்கு வட்டியெல்லாம் சேர்த்து ரூ.4,000, ரூ.5,000 ஆக கூடுதலாகப் போயிருக்கிறது. எனவே, அரசு அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, ரூ.900 அசலை மட்டும் பெறுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவு விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன் அட்டை வழங்க முடியும் என்று கேட்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால் தேவைப்படுகின்ற அளவுக்குத் தரச்சொல்லி ஆணையிடப்பட்டிருக்கிறது. எம்.ஆர்.கே. சர்க்கரை ஆலையிலே வழங்கப்பட்ட பங்குத் தொகையான ரூ.900 கடனுக்கு வட்டி அதிகமாக வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அது தனி நிர்வாகம். கடன் தருவது மட்டும்தான் எங்களுடைய பணி. அதைத் தள்ளுபடி செய்வதோ மற்ற பணிகளோ என்றால் அதற்கு தனி இலாகா இருக்கிறது. நமக்கும்

[2000 ஏப்ரல் 3

அதற்கும் தொடர்பு இல்லை. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசுப் பணத்திலிருந்து *190* கோடி ரூபாயை விவசாயிகளுக்காகத் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த சர்க்கரை ஆலையைச் சிறப்பாக நடத்துவதற்காக அரசாங்கம் guarantee கொடுத்து, *100* கோடி ரூபாய் கடனை மத்திய வங்கியிலிருந்து தந்திருக்கிறார்கள். இதுதான் இப்போதைய நிலைமை. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டால் அதற்குப் பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவு நிறுவனங்களில் மிக அதிகமான அளவுக்கு வைப்புத் தொகை வருகிறது. காரணம், தனியார் நிறுவனங்கள் எல்லாம் மோசடி செய்கிற காரணத்தால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு மிக அதிகமான வைப்பு நிதி வருகிறது. ஆனால், அதை முறையாகக் கடனாகக் கொடுப்பதற்கு கூட்டுறவு நிறுவனங்களில், போதுமான பணியாளர்கள் இல்லை. நீண்ட காலமாகப் பணியாளர்கள் நியமிக்கப்படாத காரணத்தால், வங்கிகளின் வேலைகளில் சுணக்கம் ஏற்படுகின்றது. மகளிருக்கு சிறு வணிகக் கடன் கொடுப்பது முதலாக, விவசாயக் கடன்கள் மற்றும் பல்வேறு வேளாண்சாராக் கடன்களை வழங்குவதற்கு அங்கே ஆட்கள் போதாத நிலை இருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்திலே இதற்கான விடையிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *196*, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**196—**

### வட்ட அலுவலகம்

**32862*—**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 3]

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் வட்ட அலுவலகத்தை, ஊரணிபுரத்தில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் வட்ட அலுவலகம், *12-11-1999* முதல் ஊரணிபுரத்தில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டக் கிளை அலுவலகம் ஒரத்தநாட்டிலிருந்து ஊரணிபுரத்திற்கு மாற்றியமைக்கப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது என்பது குறித்து மகிழ்ச்சி. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே, ஊரணிபுரம் மத்திய வங்கியின் கிளை அலுவலகம், ஊரணிபுரம் என்று பெயர் போடப்பட்டு பாப்பாநாட்டில் இருக்கிறது. அதையும் ஊரணிபுரத்திற்குக் கொண்டுவந்து, அங்கே மத்திய வங்கி அலுவலகத்தையும் திறக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு, மத்திய வங்கியினுடைய கிளைகளே முழுமையாகத் திறக்கப்படாத நிலை இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ஆண்டுக்கு *25* இடங்களிலே கிளைகளைத் திறக்கலாம் என்று உத்தரவு தந்து, இப்போது ஆங்காங்கு புதிய கிளைகள் திறக்கப்பட்டு இயங்கிக்கொண்டு வருகின்றன. ஊரணிபுரத்திலே அதற்கான வசூல் சரியாக நடந்து, கடன் பெறுகிற விவசாயிகளும் அதிகமாக இருப்பார்களேயானால், கிளை அலுவலகம் அமைப்பதிலே ஆட்சேபனை எதுவும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *197*, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**197—**

### துறையை இரண்டாகப் பிரித்தல்

**23990*—**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும், ஆதிதிராவிடர் நலத் துறையும் ஒன்றாக இருந்ததை தனியாகப் பிரித்து, அந்த இரண்டு சமுதாயங்களும் நிறைய பலன்களை அனுபவிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். எனவே, இப்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையைப் பொறுத்த அளவில், அதிகமான நன்மைகளை அந்த;ச் சமுதாய மக்கள் பெறக்கூடிய அளவுக்கு, இரண்டாகப் பிரித்து, அரசு மேலும் சலுகைகளை அந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்க ஆவன செய்யுமா, மறுபரிசீலனை செய்து அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்களால் 1989-ல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பிரிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதுகுறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை மற்றும் பொதுத் துறை ஆகியவற்றுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அத்துறைகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை. எனவே, இத்துறைகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 198, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



**198—**

## குடிசைத் தொழில்கள்

**25227*—**திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குடிசைத் தொழில்களை ஊக்கப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் குடிசைத் தொழில்களை ஊக்கப்படுத்த இந்திய அரசு கதர் மற்றும் கிராமத் தொழில்களுக்கு விளிப்புத் தொகை வழங்கும் திட்டத்தை 1996-ல் அறிமுகப்படுத்தியது. எளிதான முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 1997-ல் தேவையான திருத்தங்களுடன் இத்திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைத் தொழில் மூலமாக நமது தமிழகத்திலே எந்தெந்த மாவட்டங்களிலே அதிகமான பயிற்சி கொடுத்து, அங்கிருக்கிற வேலையில்லா பட்டதாரிகளுக்கும், பிளஸ்-2 படித்த மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பிலே சலுகை கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக, மலைவாழ் மக்கள் பவானி சாகர் காடுகளிலும், தாளவாடி, கடம்பூர் போன்ற பகுதிகளிலேயும் வாழ்க்கைத் தரம் மிகவும் குன்றியிருக்கிறார்கள். அவர்கள் முன்னேற்றத்திற்கு, தனிப்பட்ட முறையிலே மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காக அங்கே குடிசைத் தொழில் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, அரசு குடிசைத் தொழில்களைத் தொடங்குவது இல்லை. சில சலுகைகளை, மாவட்டத் தொழில் மையத்திலே குடிசைத் தொழிலுக்கென்று ஓர் ஆய்வாளரை

நியமித்து, கிராமங்களிலே கிடைக்கிற பொருட்களை வைத்து கைவினைஞர்கள் மற்றும் குடிசைத் தொழில்களிலே ஈடுபடுகிறவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசு செய்து வருகிறது. அரசினுடைய விளிம்புத் தொகை, சாதாரணமாக ரூ.10 இலட்சம் வரை கடனாக தனி நபர் பெற வேண்டுமென்றால், அவர்களுக்கு 25 சதவிகிதம் விளிம்புத் தொகை தருகிறது. அதே சமயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் 30 சதவிகிதம் விளிம்புத் தொகை தருகிறது. கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவர்கள் கடன் வாங்க வேண்டுமென்று முயற்சி செய்தால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக, அவர்களுக்கு விளிம்புத் தொகை வழங்கப்படுகிறது. தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே பல்வேறு மூலப்பொருட்களைக் கொண்டு இப்போது விருதுநகர், நெல்லை மற்றும் தூத்துக்குடி பகுதிகளிலே குடிசைத் தொழிலாக, கைகளினால் செய்யப்படுகின்ற தீப்பெட்டித் தொழில் அங்கேயெல்லாம் நடைபெறுகின்றன. அதேபோல, ஒவ்வொரு பகுதியிலேயும், தஞ்சையை எடுத்துக்கொண்டால், வெண்கலச் சிலையை செய்வது மற்றும் தஞ்சாவூர் தட்டு செய்வது போன்ற தொழில்களை கைவினைஞர்கள் செய்கின்றார்கள். இருந்தாலும் ஆங்காங்கேயிருக்கின்ற மூலப்பொருட்களை வைத்து, குடிசைத் தொழில் செய்கின்றவர்கள் சங்கம் அமைத்து கடன் கேட்டால், நிச்சயமாக இந்த அரசு பரிந்துரை செய்து, பெற்றுத் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய விருப்பப்படி, தமிழகம் முழுவதும் இப்போது மகளிர் குழுக்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. சிறப்பாக விதிமுறைகளுக்கேற்ப அந்த மகளிர் குழுக்களும் அமைந்து, செயல் முறையிலே இருந்து வருகின்றன. ஆகவே, குடிசைத் தொழில் என்பதை அந்த ஏழையெளிய மகளிருக்காக உருவாக்கப்பட்ட குழுக்களின் மூலமாக செயல்படுத்துவதற்கு புதிய விதிமுறைகளை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, இப்போது மகளிர் சுய சேவைக் குழுக்கள் அமைத்து அவர்கள் வங்கியிலே பணம் சேமித்து வைத்து, அவர்கள் செய்கின்ற தொழிலுக்கோ, வியாபாரத்திற்கோ, மற்ற தொழிலுக்கோ கடனாகப் பணத்தைப் பெற்று திரும்பச் செலுத்தி வருகிறார்கள் ; கூட்டுறவு வங்கிகள் மூலமாக, இன்னும் பிற வங்கிகள்





மூலமாக. ஆனால் இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டப்படி, தமிழகம் முழுக்க சுய சேவைக் குழுக்கள் மூலமாக எல்லா கூட்டுறவு வங்கிகளிலேயும் கடன் பெறுகிறார்கள். அதேபோல மகளிர், வணிகக் கடன் மூலமாக கடன் பெறுகிறார்கள். இதிலே குடிசைத்தொழில் என்பது மாறுபட்டிருக்கிறது. குடிசைத் தொழில் செய்கின்றவர்களுக்கு விளிம்புத் தொகையை அரசாங்கம்,, கதர்த் துறை வாரியம் 25% கொடுக்கிறது. பிற்படுத்தப்பட்டவராக இருந்தால் 25% தாழ்த்தப்பட்ட, பழங்குடியினராக இருந்தால் 30% margin money. ஆக அதிலே இந்த வசதி இல்லை. பங்குத் தொகையை அவர்கள் முழுவதுமாகச் செலுத்த வேண்டும். ஆனால், இதிலே பங்குத் தொகையை கதர்த் துறை வாரியமே செலுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழிற்சாலையே இல்லாத பகுதிகள் அல்லது வேலைவாய்ப்புகளைப் பெறமுடியாத பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அரசே இதுபோன்ற குடிசைத் தொழிலை அறிமுகப்படுத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே முயற்சி, விருப்பம் என்ற இரண்டும் இருந்தால்தான் அங்கே தொழில் உருவாவதற்கு வாய்ப்பு இருக்கும். முயற்சி இல்லையென்றால் இருக்காது. ஆகவே தொழில் செய்ய முன்வந்தால் அங்கிருக்கிற தொழில் செய்ய முன்வருகின்றவர்களை அழைத்து, கூட்டத்தைக் கூட்டி, அதன்மூலமாக எந்தத் தொழில் செய்ய முன்வருகிறார்கள் என்று பார்த்து, அதற்கு அரசு முழு உதவியும் செய்யத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைத் தொழில் மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளில் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் எவ்வளவு பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு பாரதப் பிரதமர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்

[2000 ஏப்ரல் 3

மூலமாக ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் தமிழக அரசு 15 ஆயிரம் பேர்களுக்குக் கடனுதவி வழங்கி வருகிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் சுமார் 50 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரம் பேர்களுக்குக் கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு கடன் வழங்க உதவி செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 199, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**199—**

**மணிமண்டபம்**

*25891—**திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் உள்ள ஓமந்தூர் கிராமத்தில் வாழ்ந்த ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அரசால் அங்கு மணிமண்டபம் கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் திண்டிவனம் தொகுதியில் ஓமந்தூர் கிராமத்தில் பிறந்து, திண்டிவனம் நகரத்தில் உள்ள வால்டர் ஸ்கடர் உயர்நிலைப் பள்ளியில் பயின்று, சுதந்திரப் போராட்டத்தில் நான்கு முறை சிறை சென்று, அன்றைய சென்னை மாகாணத்தினுடைய முதல் பிரதம அமைச்சராக இருந்து இறுதிக் காலத்தில் தன்னுடைய சொத்தின் பெரும்பங்கினை கல்விக்காகவும், அனாதை இல்லத்திற்கும் எழுதி வைத்து மறைந்தார்கள். அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்காக அவர்களுடைய வாரிசுகள் 3 ஏக்கர் நிலம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, ரெட்டியார் சமுதாய மக்கள் போற்றுகின்ற வகையில், ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படுமா என்பதை அறிவதோடு, அவர்களுடைய வாரிசுகளுக்கு சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பட்டியலில் இடம் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகளைப் போற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8-7-1998 ஆம் நாளன்று அரசின் சார்பில் இராஜபாளையத்தில் நடைபெற்ற முன்னாள் முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் மரியாதைக்குரிய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அரசின் சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா அரசின் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் 25-8-1998 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய தியாகத்தைப் போற்றுகின்ற வகையில், அவர்களுடைய பெருமையைப் போற்றும் வகையில் சென்னை, அண்ணா சாலையிலுள்ள அரசினர் தோட்டம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று அழைக்கப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தற்போது அரசினர் தோட்டம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது. எனவே, ஓமந்தூரார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதைவிட மிகப் பெரிய பெருமையைச் சேர்த்திருக்கிற ஒரு செயலாக கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற காரணத்தால் தனியாக ஓமந்தூர் கிராமத்தில் மணிமண்டபம் கட்டத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய படம் நம்முடைய சட்டசபை வளாகத்தில் வைக்கப்படுமா? அரசினர் தோட்டத்திற்கு ஓமந்தூரார் ரெட்டியார் பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரில் இருந்த மாவட்டங்கள் பெயர் எடுக்கப்பட்டுள்ளதே, மீண்டும் வைக்கப்படுமா? இதில், பெயர்களை எடுத்ததில் ஏதேனும் உள்நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேதான் உள்நோக்கம் இருக்கிறது. பெயர்களை எடுத்ததிலே உள்நோக்கம் இல்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களும்

கலந்து பேசி, ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்து பேசி, இந்தப் பெயர்கள் மாவட்டங்களுக்கு, பேருந்து கழகங்களுக்கு, வைப்பதால் ஏற்படுகின்ற பிரச்சினையை எண்ணிப் பார்த்து, அந்தப் பெயர்களையெல்லாம் அகற்ற வேண்டுமென்று எடுத்த முடிவுக்கிணங்கத்தான் அரசு அந்தப் பெயர்களை எடுத்தது. பெயர்களை எடுத்தது மாத்திரமல்ல. பயனுள்ள வகையில் எந்தெந்தத் தலைவர்களுடைய பெயரால், அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அல்லது மாவட்டங்கள் இருந்தனவோ அதற்குப் பதிலாக, பல்கலைக்கழகத்திலே அந்தத் தலைவர்களுடைய பெயரால் இருக்கை (Chair) களை உருவாக்கி 25 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே ஒவ்வோர் ஆண்டும், மாணவர்களுக்காக, நல்ல முறையிலே பயின்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு போன்ற பல வகைகளீலே அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது, நல்ல காரியத்திற்கு செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** பேரவையின் அனுமதியுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் தமிழகத்தில் மிகச் சிறந்த முதலமைச்சர்களில் ஒருவராகச் சிறந்து விளங்கியவர். மிகப் பெரிய காந்தியவாதி. அவருடைய வரலாற்றைப் படிக்கிறபோது, ஒரு தடவை ஒரு கதர் இராட்டை வாங்குவதற்காகத் தன்னுடைய பதவியைக்கூட பெரியதாக எண்ணாமல் நேரே கதர் கடைக்குச் சென்று இராட்டை வாங்கி வந்ததாக நான் படித்தேன். அப்படிப்பட்ட எளிமையும், நேர்மையும், ஒழுக்கமும் உள்ள அந்த நல்ல மனிதருக்கு நம்முடைய தமிழக அரசு அரசினர் தோட்டத்தினை ஓமந்தூரார் தோட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். அங்கேயே ஒரு மணிமண்டபம் கட்டி, ஒரு சிலை வைத்து சிறப்பான முறையில் பராமரிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நல்ல உண்மையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஓமந்தூரார் பிரதமராக அதாவது முதல்வராக இருந்து மறைந்த பிறகு 20 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அந்த 20 ஆண்டு காலத்திலே ஓமந்தூராரை நினைக்காமல் இருந்த காங்கிரசாருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தூண்டுகோலாகத்தான் ஓமந்தூரார் பெயரால் ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று வைத்திருக்கிறோம். அதுமாத்திரமல்ல, கக்கன் அவர்களானாலும்,





நம்முடைய உணவு அமைச்சராக காங்கிரஸ் ஆட்சியிலே இருந்த இராமையா அவர்களானாலும், அவர்களுடைய குடும்பங்களையெல்லாம் கவனிக்கின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். ஓமந்தூரார் தோட்டத்திற்குள்ளே ஒரு மணிமண்டபம் அமைக்க முடியுமா என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் கேட்டார். ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்குள்ளே இப்போது ராஜாஜி மண்டபம் இருக்கிறது. நாம் எல்லாம், M.L.A.–க்கள் எல்லாம் வசிக்கின்ற, வந்து தங்குகின்றப் மிகப் பிரம்மாண்டமான ஒரு மாளிகை அங்கே கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வளவு மணி மண்டபங்களையும் உள்ளடக்கிய தோட்டம் அங்கு இருக்கும்போது, புதியதாக ஒரு மண்டபம் அங்கே தேவையில்லை என்று கருதுகின்றேன். தேவையானால், அவர் பிறந்த கிராமத்திலே மணிமண்டபம் கட்டுவது பற்றி இங்கே மூல வினா எழுப்பப்பட்டது, அதுப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முதலமைச்சர்களில் மிகுந்த மதிப்பிற்குரியவராகக் கருதப்படுகிறவர் ஓமந்தூரார். பொது வாழ்க்கையில் எப்படி ஒரு மனிதன் செயல்பட வேண்டும் என்பதற்கு ஓர் அப்பழுக்கற்ற இலக்கணமாக வாழ்ந்தவர்தான் ஓமந்தூரார். எனவே, பொது வாழ்வில் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் உரிய காலத்தில் உரியபடி கௌரவிக்கப்பட வேண்டுமென்ற முறையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு நேர்மையான முறையிலே பதில் அளித்திருக்கிறார்கள். அவருடைய பிறந்த ஊரில் ஒரு மணிமண்டபம் அமைத்து, அது வெற்று கற்களால் மட்டுமல்லாமல் வாழ்ந்த அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கிற முறையிலேயும், அவருடைய பல்வேறு பொது வாழ்வின் சீரிய தன்மைகளை வெளிப்படுத்துகிற முறையிலேயும், அந்த மணிமண்டபத்தை அமைக்க வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அவர்களுக்கு தாடி வைக்காத பெரியார் என்று பெயரே உண்டு. அப்படிப்பட்டவரை இந்த அரசு மறந்துவிடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *200*, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

200—

## கால்நடை மருத்துவமனை

*26276—**திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதியில், எடமேலையூர் மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவமனைகளை பெரிய மருத்துவமனைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு என்பது தாலுகா தலைநகரம். நாள்தோறும் 700, 800 கால்நடைகள் அங்குள்ள மருத்துவமனைக்கு வருகின்றன. எனவே, விவசாயிகளுடைய நலன் கருதி அந்த மருத்துவமனையை பெரு மருத்துவமனையாக மாற்ற அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிவதோடு, எடமேலையூர் மருத்துவமனையிலும் அதே நிலைதான். எனவே, அதையும் பெரு மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா, மறுபரிசிலனை செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரத்தநாடு மற்றும் பாப்பாநாடு ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எடமேலையூரிலும் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. பொதுவாக ஒரு கால்நடை மருத்துவமனை அமையப்பெற்று அங்கு தினசரி சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 60-க்கு மேல் இருந்தால் ஒவ்வோர் ஆண்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ், தகுதி மற்றும் நிதிநிலைமையின்



அடிப்படையில் கால்நடை மருத்துவமனைகள் பெரு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு பெரு மருத்துவமனை அமைக்க தேவையான இட வசதி, உள்நோயாளிக் கூடம் அமைத்தல், சிசிச்சைக் கூடம் அமைத்தல், எக்ஸ்-ரே பிரிவு கட்டடம், எக்ஸ்-ரே யூனிட் மற்றும் சிகிச்சைக்கான இயந்திரங்கள், மருந்துகளைப் பாதுகாக்க போதிய இட வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தண்ணீர் வசதி ஏற்படுத்தல், பணியாளர்கள் குடியிருப்பு கட்டுதல் ஆகிய பணிகளுக்காக தொடராச் செலவினமாக சுமார் 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயும், பணியாளர்களுக்கு சம்பளம் என்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சத்து 42 ஆயிரத்து 720 ரூபாயும், மேலும் மருந்துகளுக்காக ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாயும் நிதித் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு மருத்துவமனையை பெரு மருத்துவமனையாக நிலை உயர்த்தி அரசு ஆணை ஏதும் வெளியிடப்படவில்லை. எதிர்காலத்தில் நிதிநிலை மற்றும் தகுதிகளின் அடிப்படையில் ஒரத்தநாடு கால்நடை மருத்துவமனை மற்றும் எடமேலையூர் மருத்துவமனை ஆகியவற்றை பெரு மருத்துவமனைகளாக ஆக்க பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடமேலையூர் கால்நடை மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டு காலமாக உதவி இயக்குநர் அந்தஸ்தில் மருத்துவர் இல்லை. அந்தப் பணியிடம் காலியாக இருக்கிறது. எனவே, அரசு உடனடியாக அந்த காலி இடத்தை நிரப்ப முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

[2000 ஏப்ரல் 3

## 2. உரிமை மீறல் பிரச்சினை

**சேலம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி திரு. நடராஜன் மாற்றப்படவில்லையென முதலமைச்சர் கூறியுள்ளது குறித்து**

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி உட்காருங்கள். திரு. சுந்தரம் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமையன்று பட்ஜெட் விவாதத்திலே நான் பேசும்போது, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரி (D.R.O.) நடராஜன் அவர்கள் மாற்றப்பட்டு, அதற்கான அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அந்த இடத்திலே பூர்ணலிங்கம், இல்லை பூவலிங்கம் என்பவரை நியமிக்க வேண்டிய order கொடுக்கப்பட்டது என்றும் நான் சட்டமன்றத்திலே பேசினேன். அப்போது நடராஜன் அவர்கள் மாற்றப்படவில்லை; அதற்காக உத்தரவு போடப்படவில்லை; ஆதாரம் இருக்கிறதா, காட்டுங்கள் என்று முதல்வர் அவர்கள் கூறினார்கள். நான் இப்போது அந்த அதிகாரி நடராஜன் அவர்கள் மாற்றப்பட்டதற்கான அரசாணை (Rt.) எண் 1127, 22-3-2000 இங்கே தலைமைச் செயலாளர் அனுப்பியதை நான் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைச் சொன்னால் போதும்; என்னிடம் அதைக் காண்பித்துவிட்டீர்கள். நான் உங்களுக்கு ஒரு விளக்கம் சொல்கிறேன்; உட்காருங்கள். இது விஷயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் வந்து என்னிடம் தீர்மானம் கொடுத்தார்கள். அறையில் முதலமைச்சரைப் பார்த்தார்கள். முதலமைச்சர் ஏதோ விளக்கம் கொடுத்தார்கள். அது அடுத்த பிரச்சினை. நீங்கள் முறையாக என்னுடைய அறையில் வந்து இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்க வேண்டும். நான் உங்களுக்கு அனுமதி கொடுத்து இருப்பேன். ஏதோ புகைவண்டி காலதாமதமாக வந்துவிட்டது என்று சொல்கிறீர்கள். அதனால் இந்தத் தடவை நான் அனுமதி கொடுக்கிறேன். இனிமேல் என்னுடைய அறையில் வந்து கேட்காமல் எழுப்பினால், நிச்சயம் அனுமதி கொடுக்கமாட்டேன். இப்போது முதலமைச்சர் பதில் சொல்லுவார். (குறுக்கீடு)



2000 ஏப்ரல் 3]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் பேசும்போது அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். நான் முதலமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறேன். இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நடராஜன் அவர்களுக்கு உத்தரவு போடவில்லை; ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டார்கள். நான் இப்போது ஆதாரத்தை கொடுத்து இருக்கின்றேன். ஆகவே, நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்வது,...

*முற்பகல் 10-40*

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது பற்றி அவர் பேசுகிறார். முதலில் அவர் உத்தரவைக் காட்டிக் காட்டிப் பேசுகிறாரே, அந்த உத்தரவில் நடராஜன் மாற்றப்பட்டிருக்கிறார் என்று எங்கே இருக்கிறது என்பதை அவர் காட்ட வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள், அன்றைக்குப் பேசும்போது நடராஜனுக்கு உத்தரவு போடப்படவே இல்லை என்று சொன்னார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இப்போதும் சொல்கிறேன். அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன், ஆயிரம் தடவை சொல்கிறேன். நடராஜனுக்கு உத்தரவு போடப்படவே இல்லை. அவர் கையில் வைத்திருக்கிற தாளில் நடராஜனுக்குப் போடப்பட்டிருக்கிற உத்தரவு இருக்கிறதா, உறுப்பினர் படித்துக் காட்டட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடராஜன் இடத்தில் பூவலிங்கம் அவர்களை அமர்த்தியிருப்பதாக இங்கே தலைமைச் செயலாளர் அவர்களே ஆணை போட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலேயே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நடராஜன் இடத்தில் பூவலிங்கம் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். சுப்பராயன் இடத்தில் பழனிசாமி அமர்த்தப்படுகிறார் என்று சொல்லிவிட்டால், சுப்பராயன் இடத்தைக்

காலி செய்தால்தான் பழனிசாமி அங்கே உட்கார முடியும். இல்லாவிட்டால் சுப்பராயன் மடியிலே போய் பழனிசாமி உட்கார முடியாது. அதைப்போல சுப்பராயனே மாற்றப்படவில்லை என்கிறேன் நான். நடராஜன் மாற்றப்படவில்லை, நடராஜனுக்கு உத்தரவு போடப்படவில்லை என்பதுதான் அன்றைக்கு நடைபெற்ற விவாதமே. நடராஜனுக்கு உத்தரவு போடப்படவில்லை. மேலும் அன்றைய தினம் திரு. சுந்தரம் ஒரு வார்த்தைகூட பூவலிங்கம் என்ற பெயரை உச்சரிக்கவே இல்லை. அவை நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தைப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுப் படித்துப் பார்க்கலாம். பூவலிங்கம் என்ற வார்த்தையை அன்றைக்கு அவர் சொல்லவே இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடராஜன் இடத்திற்கு பூவலிங்கம் அமர்த்தப்பட்டிருக்கிறார். அப்படியென்றால் முதல்வருக்குத் தெரியாமல் தலைமைச் செயலாளர் எப்படி ஆணை பிறப்பித்தார்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அன்றைக்கு வந்த விவாதமே, சேலத்தில் இருக்கின்ற நடராஜன் மாற்றப்பட்டு விட்டார், யாரோ தலையிட்டு அந்த மாறுதலை மாற்றி மறுபடியும் அங்கே நிலைக்க வைத்துவிட்டார்கள் என்று உறுப்பினர் சுந்தரம் சொன்னார்கள். யாரும் தலையிடவில்லை. ஏனென்றால் உத்தரவே போடப்படாமல் இருக்கும்போது எப்படித் தலையிட முடியும்? தலையிடுவது தவறு என்றுகூட நான் கூற மாட்டேன். எத்தனையோ அதிகாரிகள் மாற்றப்படும்போது, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம்கூட அவர்கள் அந்த ஊரிலேயே நீடிப்பது நல்லது, கொஞ்ச நாட்களுக்கு நீடிக்கட்டும் என்று சொல்லி என்னிடம் பல சிபாரிசு கடிதங்கள் வந்திருக்கின்றன. நியாயமானவற்றைச் செய்திருக்கிறேன், நியாயம் இல்லாதவற்றை விட்டுவிட்டிருக்கிறேன். அதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அதில் எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. ஓர் அதிகாரியை மாற்றி இன்னோர் அதிகாரியை நியமிப்பதில் எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. எனவே, அன்றைக்கு சுந்தரம் அவர்கள் எந்தக் குற்றச்சாட்டும் கூறவில்லை. நடராஜன் மாற்றப்பட்டார் என்று சொன்னார்கள். நடராஜன் மாற்றப்படவில்லை, நடராஜனுக்கு மாறுதல் உத்தரவு அனுப்பப்படவில்லை என்றுதான் சொன்னேன். அதுதான் விவாதமே.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பட்டிமன்றம் அல்ல. (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள், நான் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். நான் ஜனநாயக முறைப்படி நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஏற்கெனவே சொன்னேன், 'நீங்கள் இதுவரை தீர்மானம் கொடுக்காவிட்டாலும் உங்களைப் பேச அனுமதித்தேன்' என்று. நீங்களும் பேசினீர்கள், முதலமைச்சரும் பதில் கூறிவிட்டார். உங்களுக்கு அதற்கு மேல் ஏதாவது பிரச்சினை இருந்தால் எழுதிக்கொடுங்கள், நான் அதன்மீது உத்தரவு போடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் உரிமைப் பிரச்சினை கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறல் இல்லை என்று நான் சொல்கிறேன். அதற்கு மேல் ஆதாரம் இருந்தால் நீங்கள் எழுதிக்கொடுங்கள், நான் பரிசீலனை செய்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னைச் சொல்லவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேல் என்ன சொல்லப் போகிறீர்கள்? நான்தான் சொல்லிவிட்டேனே?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைக் குழுவிற்கு அனுப்புவதும் அனுப்பாததும் என்னுடைய அதிகாரம். நீங்கள் எழுதிக்கொடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுதிக்கொடுங்கள்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. நீங்கள் கொடுத்ததிலே உரிமை மீறல் கிடையாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, நீங்கள் எத்தனை நாள் கேட்டாலும் அனுமதி கிடையாது. அதிலே உரிமை

மீறல் கிடையாது என்ற தகவலைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, உரிமைப் பிரச்சினை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) முடியாது.

***திரு. இரா. தாமரைக்கனி:** என்னுடைய தொகுதிப் பிரச்சினை, ஒரு உரிமைப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முடியாது என்று சொல்லிவிட்டால் நீங்கள் உட்கார வேண்டும். என்னை வந்து கேட்டீர்கள். சட்ட அமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை என்று சொன்னீர்கள். சட்ட அமைச்சர் பதில் சொல்லி விட்டார். சட்ட அமைச்சர் பதில் சொன்னார். (குறுக்கீடு) சட்ட அமைச்சர் பதில் சொன்னார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். அதை அவையில் எழுப்ப விடுங்கள். அதற்குப் பிறகு அதை dismiss செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆதாரத்தோடு எழுதிக் கொடுத்து அதற்கு அவர் பதிலை வாங்கி dismiss பண்ணிவிட்டேன். (குறுக்கீடு) உறுப்பினர் தாமரைக்கனி சத்தம் போடக் கூடாது. (குறுக்கீடு) உறுப்பினர் சத்தம் போடக் கூடாது. (குறுக்கீடு) கோப்பினை நீங்கள் பார்க்க அனுமதித்தேன். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சும்மா அரட்டாதீங்க, ஏன் அரட்டுகிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) ஏய் போங்கடா, நான் சபாநாயகரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, உட்கார வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி உட்கார வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எங்களையும், எதிர்க் கட்சியிலே உள்ள உறுப்பினர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அங்கிருந்தவாறு ஆளுங்கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களைப் பார்த்து "ஏய் போங்கடா" என்று சொல்லியிருக்கிறார். இது நாகரீகமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ அங்கு சில பதவிகள் எல்லாம் காலியாகிறதே, இப்படியெல்லாம் பேசினாலாவது ஏதாவது பதவி கிடைக்குமா என்பதற்காக இப்படிப் பேசுகிறார் என்று கருதுகிறேன். "ஏய் போங்கடா" என்று அவர் சொன்ன வார்த்தையை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது. அதை அவரே திரும்பப் பெற வேண்டும். நீக்கி விட்டால் அவர் எப்படி அவையிலே நடந்து கொண்டார் என்பது நாட்டிற்குத் தெரியாமல் போய் விடும். அவர் கூறிய வார்த்தையை அவரே திரும்பப்



பெற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் எல்லாம் இங்கேயிருந்து பயனில்லை.

*முற்பகல் 10-45*

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் என்னைப் பார்த்து 'ஏய்' என்று சொல்லலாமா? அவர்கள் மன்னிப்புக் கேட்டால் நானும் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் எதுவும் சொல்லவில்லை. நீங்கள்தான் 'போங்கடா' என்று சொன்னீர்கள். எனவே, நீங்கள்தான் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** 'ஏய்' என்று அவர்கள் சொல்லலாமா? நான் என்ன அவர்கள் வீட்டு வேலைக்காரனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மிரட்டுகிறீர்களா? நீங்கள் இப்போது மன்னிப்புக் கேட்கிறீர்களா? இல்லையா?

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் மன்னிப்புக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் மன்னிப்புக் கேட்கப் போகிறீர்களா? இல்லையா? அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை. (குறுக்கீடு) நீங்கள்தான் மன்னிப்புக் கேட்க வேண்டும் (குறுக்கீடு) நீங்கள் மன்னிப்புக் கேட்கிறீர்களா? இல்லையா?

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் கேட்க வேண்டும். நான் தவறு செய்யவில்லை. அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வருத்தம் தெரிவியுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் முதலில் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் என்றால் யார்? (குறுக்கீடு) அவர்கள் என்றால் யார்?

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் முதலில் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் என்றால் யார்? எல்லா உறுப்பினர்களையும் எழுந்து மன்னிப்புக் கேட்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் வருத்தம் தெரிவிக்கிறீர்களா, இல்லையா? (கூச்சல்-குழப்பம்)

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆளுங்கட்சி உறுப்பினர் காந்தி என்னைப் பார்த்து 'ஏய்' என்று சொன்னதற்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு உறுப்பினர் காந்தி அவைக்கே வரவில்லை. உறுப்பினர் காந்தி 'ஏய்' என்று கூப்பிட்டதாகச் சொன்னீர்கள். அவர் அவையிலே இப்போது இல்லை. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, நீங்கள் வருத்தம் தெரிவிக்கிறீர்களா? இல்லையா?

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் வருத்தம் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் என்றால் யார்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா இல்லையா? பொதுவாக ஆளுங்கட்சியிலே யாராவது குரல் எழுப்பினால் முதலமைச்சரே கண்டிக்கிறார். இது நாடறிந்த உண்மை. நீங்கள் 'ஏய் போங்கடா' என்று சொன்னது உண்மை. அந்த வார்த்தையை வாபஸ் வாங்குங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆளுங்கட்சியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 'ஏய் போங்கடா' என்று சொன்ன வார்த்தையை வாபஸ் வாங்கிவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 'போங்கடா' என்று சொன்ன வார்த்தையை வாபஸ் வாங்காமல் பேசினால்...

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் மைக் கொடுத்தால்தான் நான் சொல்ல முடியும் (குறுக்கீடு) நான் சொல்கிறேன் ஐயா, (குறுக்கீடு) என்னை சொல்லவே விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆளுங்கட்சியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர் 'ஏய்' என்று சொன்ன காரணத்தால் உணர்ச்சி வசப்பட்டு நான் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன். அதற்காக நான் வருத்தப்படுகிறேன். நான் அதை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், அதை விடுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய இறையாண்மையைக் கட்டிக் காப்பாற்றுகின்ற பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. உங்களை மிரட்டுகின்ற வகையிலே 'அரட்டாதீர்கள்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிரட்டுகின்ற பாணியிலே பேசியிருக்கின்றார். இது உங்களுடைய உரிமையை மீறுவதாகக் கருதுகிறேன். இது குறித்து உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல நேரங்களில் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது உண்டு. சில நேரங்களில் நானே உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவேன். ஆகவே, மன்னிப்போம், மறப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, வேலூர் நகராட்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்பு அறிவிப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஏ. ராசேந்திரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டு, திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளுடைய கழிவுநீர் ஏற்கெனவே பாலாற்றில் கலந்து, நிலத்தடி நீர் 200 அடி ஆழத்திற்கு மாசடைந்துவிட்ட காரணத்தினால், குடிநீர்ப் பிரச்சினை எங்கள் பகுதியிலே மிகவும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. பாலாற்றிலிருந்து வேலூர் நகராட்சிக்கும், சேண்பாக்கம், அல்லாபுரம், தொரப்பாடி, சத்துவாச்சாரி ஆகிய 4 பேரூராட்சிகளுக்கும் மற்றும் காட்பாடியை ஒட்டி இருக்கக்கூடிய 5 பேரூராட்சிகளுக்கும் என்று பல்வேறு பேரூராட்சிகளுக்கும் அந்த இடத்திலே பாலாறு ஒன்றுதான் குடிநீர் ஆதாரத்தினைக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நதி. ஆனால் அந்தப் பாலாற்றில் இப்போது நிலத்தடி நீரே மிகவும் அதிக ஆழத்திற்குச்

சென்றுவிட்டிருக்கிற காரணத்தினாலும், அந்தத் தண்ணீர் மாசடைந்துவிட்ட காரணத்தினாலும், ஒரு நகராட்சியில் இருக்கக்கூடிய ஒரு குடிமகனுக்குக் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டும் என்கிற நம்முடைய கொள்கை அங்கே அடிபட்டுப்போய், அல்லாபுரம் பேரூராட்சி போன்ற பகுதிகளிலே, அதேபோல, வேலூர் நகராட்சியிலே பெருமாள் நகர், கஸ்பாவினுடைய ஓரத்தில், அதேபோல கலவன்பேட்டை பகுதியிலே 7 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீரே கிடைக்கிறது.

*முற்பகல் 10-50*

சத்துவாச்சாரி பகுதியிலே இருக்கக்கூடிய குடிநீரில் மிகவும் மாசு ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தாலே அந்தத் தண்ணீர் குடிக்க லாயக்கற்ற தண்ணீர் என்று 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து அதற்கான சான்றுகள் ஆய்வின்போது கிடைத்து வந்துகொண்டிருக்கின்றன. சத்துவாச்சாரி பகுதியில் இருந்துதான், வேலூர் நகராட்சியிலேகூட, தோட்டப்பாளையம், காகிதப்பட்டறை, சைதாப்பேட்டை போன்ற பகுதிகளுக்குக் குடிநீர் சென்றுகொண்டிருக்கிறது. ஆகவே, குடிக்க லாயக்கற்ற தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கிற வேலூர் மக்கள், அந்தக் குடிக்க லாயக்கற்ற தண்ணீர்கூட போதிய அளவுக்குக் கிடைக்காமல் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி, மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகப் பல போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நானேகூட பானை உடைப்பு போராட்டத்தைக்கூட நடத்தினேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் 3 ஆண்டுகளுக்கு முன்னால், இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9½ கோடி ரூபாயை வேலூர் குடிநீர்த் திட்டத்திற்காக வழங்கினார்கள். அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதும் தெரிவித்தேன். ஆனால், 3 ஆண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூர் குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்தில்கொண்டு கொடுத்த பணத்தை குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த அலுவலர்களும், நகராட்சியும் ஒழுங்காகப் பயன்படுத்தினார்களா என்று சொன்னால் அதைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டதுதான் மிகவும் வேதனையான ஒரு செய்தி. 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு அரசாணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்தும், 3 ஆண்டுகளுக்கு முன்னாலே 9½ கோடி ரூபாயை வழங்கியும்கூட, குடிநீர் வடிகால் வாரியம்—நான் பொன்னையாற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொடுக்க வேண்டுமென்று 1991-லிருந்து வலியுறுத்தி வந்தும்கூட, என்னுடைய வலியுறுத்தலை அவர்கள் ஓரங்கட்டிவிட்டு





காரணாம்பட்டு பகுதியிலே பாலாற்றிலிருந்து குடிநீர் எடுக்கலாம் என்று சொன்னார்கள். காரணாம்பட்டு பகுதியிலே ஆய்வு செய்து இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், அந்தத் தண்ணீர் மாசடைந்துவிட்டிருக்கிறது, ஆகவே, நாம் அங்கே தண்ணீர் எடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அலுவலர்கள் பொறுப்பற்ற முறையிலே நடந்துகொள்கிற காரணத்தினாலேதான் இப்போது எங்களுடைய பகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை இந்த அளவுக்கு கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம் தற்போது, 9½ கோடி ரூபாய் கொடுத்தது அப்படியே Pending ஆகிவிட்டது. ஏற்கெனவே, நான் 1991 ஆம் ஆண்டு வலியுறுத்திய அந்த பொன்னையாற்றுத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் இப்போது என்னுடைய அந்தக் கருத்துக்கு ஒத்துவந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது அந்த 9½ கோடி ரூபாய் என்பது ரூ.11.25 கோடியாக செலவாகும் என்று அவர்கள் ஒரு திட்டத்தினைத் தீட்டி இப்போது அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, வேலூர், அதேபோல தொரப்பாடி, சேண்பாக்கம், அல்லாபுரம், சத்துவாச்சாரி மக்கள் குடிப்பதற்கான நீர் 2006 ஆண்டு வரைதான் கிடைக்கும் என்று அவர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிரந்தரமாக எங்களுடைய குடிநீர்ப் பிரச்சினை தீரவேண்டுமென்று சொன்னால், ஒகேனக்கல்லிலிருந்து காவிரி ஆற்றுத் தண்ணீரை வேலூருக்கு இந்த அரசு கொண்டுவந்தால்தான் எங்களுடைய பிரச்சினை தீரும். இல்லையென்று சொன்னால், எங்களுடைய பிரச்சினை தீராது. ஏனென்றால் தண்ணீர் முழுவதும் மாசு அடைந்துவிட்டிருக்கிறது. குடிக்க இலாயக்கற்ற தண்ணீராக இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குழுவின் கூட்டத்திற்காக ஏலகிரி மலைக்கு வந்தபோது அவர்கள் ஒரு பத்திரிகையாளரிடம்கூட ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இப்போது காவிரி ஆற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்ற கருத்தைக்கூட அவர்கள் ஒருமுறை தெரிவித்தார்கள், பேட்டியிலே. எங்களுக்கு காவிரி ஆற்றுத் தண்ணீர் வருவதற்கு 320 கோடி ரூபாய் ஆகும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அலுவலர்கள் ஏற்கெனவே ஒரு திட்டத்தைத் தீட்டி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே இந்த 320 கோடி ரூபாய்—2006-க்குப் பிறகு தொடர்ந்து குடிநீர்—எங்களுடைய வேலூர் பகுதி மக்களுக்கு கிடைக்க—வேலூர் மட்டும் பயனடையப் போவதில்லை.

திருப்பத்தூர் நகராட்சி, ஆம்பூர் நகராட்சி, வாணியம்பாடி நகராட்சி மற்றும் உதயேந்திரம் போன்ற பல பேரூராட்சிகளும், சுருக்கமாகச் சொன்னால் எங்களுடைய மாவட்டமே தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், எங்களுக்கு ஒகேனக்கல்லிருந்து, அந்தக் காவிரி ஆற்றுத் தண்ணீர்த் திட்டத்தை 320 கோடி ரூபாயிலே நிறைவேற்றினால்தான் எங்களுக்கு வாழ்வு. இல்லையென்று சொன்னால், நாங்கள் எல்லாம் குடிநீரே இல்லாமல் செத்து சுண்ணாம்பு ஆகவேண்டிய ஒரு நிலைக்கு ஆளாக்கப்படுவோம் என்கிற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக எங்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இப்போதைக்கு பொன்னையாற்றுத் திட்டத்தை நிறைவேற்ற 11.25 கோடி ரூபாயையும், பிறகு 2006-க்குப் பிறகு நாங்கள் தொடர்ந்து குடிநீர் பெறுவதற்கு காவிரி ஆற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 320 கோடி ரூபாயையும் நீங்கள் அனுமதித்து எங்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்கிற என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திரு.வேங்கடம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நானும் இதற்கான கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அறிவிப்பு கொடுத்திருந்தால் உங்களை அழைக்கிறேன். உட்காருங்கள். திரு.பெ.சு. திருவேங்கடம்.

*முற்பகல் 10-55*

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், இந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு மழை பொய்த்துவிட்டது. அதனால், அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு சரியாகத் தண்ணீர் வரவில்லை. நிலத்தடி நீர் குறைந்து விட்ட காரணத்தினால், குடிநீர்ப் பற்றாக்குறை மாவட்டம் முழுவதும் இப்போது இருக்கிறது. அதேபோன்று, விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திற்கு இரண்டு E.E.—க்கள் திருவண்ணாமலையிலும் செய்யாற்றிலும் இருக்கிறார்கள். ஒரு ஆழ்துளை போடுகின்ற கருவிதான் இருக்கிறது. அதனால் தேவையை ஈடு செய்யமுடியவில்லை. அதனால் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, வேண்டியஅளவு துளைபோடுகின்ற கருவிகளை எங்களுடைய மாவட்டத்திற்கு அனுப்பி, அங்கிங்கெனாதபடி ஒன்பது



தொகுதிகளிலேயும் அந்த நிலைமை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே, குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத வகையிலே குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட வேண்டும். அதற்கான நிதியினை ஒதுக்கி செப்பனிட வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல்லத்திப், நீங்கள் அறிவிப்பு கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள், பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** இந்தக் கூட்டத் தொடர் தொடங்கிய உடனே முதல் தீர்மானமாக இந்தத் தீர்மானத்தைத்தான் கொடுத்தேன். நான் சொல்கிறேன் என்பதால் அல்ல, தங்களுடைய குறிப்பில் இருந்தால் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பரவாயில்லை. நீங்கள் சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் மரபு. அதுவும் உங்களைப் போன்ற மூத்த உறுப்பினர் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால், அதை நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இந்தத் தடவை பருவ மழை பொய்த்துவிட்டது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. தமிழ்நாட்டினுடைய ஏனைய மாவட்டங்களில் சராசரி மழை பெய்திருந்தாலும், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இந்தத் தடவை மிகக் குறைந்த அளவுக்குத்தான் மழை பெய்துள்ளது. எனவே, எல்லா கிராமங்களிலும் குறிப்பாக, மலைப் பகுதிகளில், ஜவ்வாது மலைப் பகுதி போன்ற பகுதிகளில்—ஆலங்காயம் ஒன்றியம் பகுதிகளில் இப்போது குடிக்கக்கூட நீர் இல்லாமல் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவது, அப்படிப்பட்ட சூழ்நிலையை சமாளிக்கத்தான் அந்தப் பகுதி முழுவதும் நூற்றுக்கணக்கான ஆழ்துளைக் கிணறுகளை குடிநீர் வடிகால் வாரியம் அமைத்ததாகச் சொல்லுகிறார்கள். அமைத்தும் இருப்பதாகக் கணக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், 20 சதவீதம் கூட—உண்மையைச் சொல்கிறேன்—இந்த ஆழ்துளைக் கிணறுகள் வேலை செய்யவில்லை; தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, அந்தப் பகுதி முழுவதும் இப்போது மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு, மைல் கணக்கிலே சென்றாலும், பேருந்து தண்ணீர் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. பேருந்து நிறுத்தப்படுகின்றன. கடைகள் அடைக்கப்படுகின்றன. உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற நிலைமையில் ஒவ்வொரு நாளும் அங்கு

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 ஏப்ரல் 3

மக்கள் தங்களுடைய இயலாமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நான் அரசைக் கேட்டுக் கொள்வது, பாலாற்றைப் பொறுத்தவரையில், அதனுடைய நிலத்தடி நீரைத்தான் நாம் நம்பி இருக்கிறோம். நாம் இப்போது காவிரியைப் பற்றி விரிவாகப் பேசுகிறோம். ஆனால் பாலாற்றின் குறுக்கே, சில ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகா மாநிலத்திலுள்ள பகுதியில் பேத்தமங்கலம் ஏரியைக் கட்டினார்கள். அதிலே எவ்வளவு தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள் என்பது நமக்குத் துல்லியமாகத் தெரியவில்லை. நான்கூட அண்மையிலே அந்தப் பகுதி முழுவதையும் பார்க்க வேண்டுமென்று பேத்தமங்கலம் ஏரியை உள்ளிட்ட அந்தப் பாலாற்றுப் படுகையை நான் பார்வையிட்டேன். பாலாற்றுப் படுகையில் கட்டப்பட்டுள்ள அந்த பேத்தமங்கலம் ஏரிக்குக் கீழ்ப்பக்கம் தமிழ்நாட்டை நோக்கி மேலும் நான்கு நீர்நிலைகள் கட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். எனவே, அதை எந்த வகையில் அவர்கள் கட்டினார்கள் என்பதையெல்லாம் நாங்கள் தெரிந்துகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். பாலாற்றில் தண்ணீர் வருவதற்குப் பெருந்தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவேதான் நிலத்தடி நீரை நாம் நம்பியிருக்கிறோம். அங்கு, அனைத்துப் பகுதிகளிலும் ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டு நிலத்தடி நீரை உறிஞ்சிக் கொண்டேயிருக்கிறோம். அதனாலே, அந்தப் பகுதியில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய. அபாயமும் மிக அதிகமாக உருவாகியிருக்கிறது என்று புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவேதான், மழைக் காலத்தில் வெள்ளத்திலே வருகிற தண்ணீரைத் தடுத்து நிறுத்துவதற்கு முறையான ஏற்பாடுகள் நீண்டகாலமாக—*1952*-லிருந்து நாம் முயற்சி—செய்து வருகிறோம். ஆனால் அது ஏனோ நடைபெறவில்லை.

*முற்பகல் 11-00*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னோடு ஒத்துப்போகிறாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. புல்லூர் அணைக்கட்டு அங்கே கட்டப்பட வேண்டும். புல்லூர் அணைக்கட்டு கட்டுவதற்கு, ஏதாவது உங்களுக்கு அதிலே சிக்கல் இருந்தால், குறைந்தபட்சம் Check dam-களையாவது கட்டி தண்ணீரை மழைக்காலத்திலே அங்கே தேக்கிவைக்கவேண்டும். புல்லூர் அணைக்கட்டு கட்டி, ஆம்பூருக்குத் தண்ணீர் வேண்டுமென்றால், நீங்கள் காவிரி நீரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முடித்துவிடுகிறேன். காவிரி நீரை ஒகேனக்கல்லிலிருந்து கொண்டு வருகின்ற திட்டம் ஏற்புடையதுதான். அதை நானும் வரவேற்கிறேன். ஆனால், அக்கம்பக்கத்திலேயிருக்கிற நம்முடைய அணைக்கட்டுகள், குறிப்பாக வெள்ளைக்கல் அணைக்கட்டு அங்கே கட்டப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆம்பூருக்கு ஆம்பூரைச் சுற்றி இருக்கிற கிராமங்களுக்குக் குடிநீர் வேண்டுமெனில், தயவுசெய்து முன்னுரிமை வழங்கி, வெள்ளைக்கல் அணைக்கட்டை நீங்கள் கட்டினால்தான், ஆம்பூருக்கும், ஆம்பூரைச் சுற்றியிருக்கிற நூற்றுக் கணக்கான கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். இன்றைக்கு மிகப் பெரிய பாதகமான சூழ்நிலை அங்கே நிலவிக்கொண்டிருக்கிறது. எனவே, நான் கேட்டுக்கொள்வது, குடிநீர் வடிகால் வாரியம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், முறையாகச் செயல்படுவதில்லை என்பது என்னுடைய தாழ்மையான, நான் பெற்றிருக்கிற பட்டறிவின் அடிப்படையிலே சொல்லப்படுகிற உண்மை. ஆழ்துளைக் கிணறுகளைக் கட்டுகிறீர்கள். 40,000 ரூபாய், 45,000 ரூபாய் என்று அதற்குச் செலவழிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பல கருத்துகளைத் திருப்பி திருப்பி வலியுறுத்திச் சொல்கிறீர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சீக்கிரம் சொல்லி முடித்துவிடுகிறேன். எனவே, தயவு செய்து அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, ஆழ்துளைக் கிணறுகளிலே, 80 சதவிகிதம் வேலைசெய்வதில்லை. ஏதோ, பெயருக்குக் கட்டுகிறார்கள். ஆழ்துளைக் கிணறுகளைப் போடுகிறார்கள்; தண்ணீர் வருவதில்லை. எனவே, உடனடியாக, போர்க்கால நடவடிக்கையாக, நீங்கள் தண்ணீருக்கு அங்கே ஏற்பாடு செய்தால்தான், சாதாரணமாகக் குடிப்பதற்காவது தண்ணீர் கிடைக்கும். எனவே, மிகப் பெரியதொரு பேராபத்தான நிலைமை நிலவிக் கொண்டிருக்கிறது. அரசு துரித நடவடிக்கை எடுத்து, அங்கே குடிதண்ணீர் கிடைப்பதற்கு மற்ற வகையிலே நீர்மை அதிகமாவதற்கு முறையான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு, எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட வெள்ளைக்கல் அணை உடனடியாகக் கட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஆண்டியப்பனூர் அணை, வக்கரப்பள்ளி அணை, நம்முடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைச் சீக்கிரம் பேசி முடியுங்கள் என்றால், நீங்கள் வரிசையாக ஓர் அணைக்கட்டுகளின் பட்டியலையே கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

[2000 ஏப்ரல் 3

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்த அணைகளெல்லாம் கட்டப்பட்டால்தான் தண்ணீர் இருக்கும். இல்லாவிட்டால் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது, நிதியொதுக்கீடு செய்து, ஏற்கெனவே இதிலே உறுதியாக வாக்குறுதி தந்து, சபையிலேயே அதற்கான அறிவிப்பைத் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவுப் பார்வைக்காக வைக்கிறேன். எங்களோடு நீர்மையோடு நடந்துகொள்ளுங்கள்; எங்களுக்கு நீரைத் தாருங்கள். வடாற்காடு மற்றும் திருவண்ணாமலை மாவட்ட மக்களைக் காப்பாற்றுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்துக் காப்பாற்றுங்கள் என்று உங்களுடைய கவனத்தை ஈர்க்க இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியில் உள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றி விவாதிப்பதற்குக் கொடுக்கப்பட்ட திரு. ஞானசேகரன் அவர்களுடைய தீர்மானமும், திருவண்ணாமலை மாவட்டம் முழுவதிலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது; தண்ணீர் கிடைக்கவில்லை என்று கோரிக்கை வைத்த மாண்புமிகு ராசேந்திரன் அவர்களுடைய கோரிக்கையையும், இரண்டையும் ஒன்றாக இணைத்து சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தாங்கள் உத்தரவிட்டதையொட்டி, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதிலே ஒரேயொரு சிறு விளக்கத்தை மட்டும் நான் ஆரம்பத்தில் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஞானசேகரன் அவர்கள், ஆய்வு நடத்தலாம், அதற்கு இவ்வளவு செலவாகலாம் என ஒரு உத்தேச மதிப்பீடு இடப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் வந்த செய்தியையும், இந்த அவையில் தெரிவித்ததையும், உத்தரவாக, திட்டங்கள் வெளியிட்டதாகவும் முதலிலே அறிவித்திருக்கிறார்கள். அதைச் சற்று மாற்றிக் கொள்ளவேண்டும். பாலாறு, பொன்னையாறு இப்படிப்பட்ட ஆறுகளில் இருக்கிற தண்ணீர் அசுத்தம் அடைந்துவிட்டது என்பது ஏற்கெனவே எடுத்துக்கொண்ட ஆய்வின்போது கிடைக்காத தகவல். அப்போது நீர் இருந்தது உண்மை. சுத்தமாக இருந்தது உண்மை. பரிசீலித்ததும் உண்மை. எடுத்துக்கொள்ளலாம் என்று இருந்ததும் உண்மை. ஆனால், உத்தேச மதிப்பீடு மாறி, உண்மையான மதிப்பீடு போடுகிற நிலை வருகிறபோது, மறுஆய்வில் தண்ணீர் அசுத்தப்பட்டுவிட்டது; அந்தத் தண்ணீர் தேவையில்லை, அதை வேறு





இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற முடிவைக் குடிநீர் வடிகால் வாரியம் எடுத்ததும் உண்மை. அதனுடைய அடிப்படையிலேதான், அந்த ஆய்வுகள் முடிந்து, அடுத்த ஆய்விற்குப் போகிறபோதுதான், ஒரு பிரச்சினை இடையிலே வந்தது. அதற்கு என்ன செலவாகும் என்ற தோராய மதிப்பீடும் அப்போது வந்தது.

*முற்பகல் 11-05*

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன்கூட ஆரம்பத்திலே ஒன்று சொன்னார். அதை நான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஒரு நகராட்சியில், ஒரு தனி மனிதருக்கு, ஒரு நாளைக்கு 40 லிட்டராவது தண்ணீர் வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது என்று சொன்னார். அது இல்லை. 90 லிட்டர் கொடுக்கவேண்டுமென்ற நியதியே இருக்கிறது. 40 லிட்டர் என்பது கிராமங்களுக்குத்தான். இந்த 90 லிட்டர் கொடுக்கவேண்டும் என்புதை நான் ஒத்துக்கொள்கிறேன். அப்படி அவர் 40 லிட்டர் கொடுக்கவேண்டும் என்பது நியதி என்றால் இப்போது 50 லிட்டர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 3 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்கின்ற தண்ணீரின் அளவு 7 நாள் என்கிறார். அவர் சொன்ன பத்திரிகைகளில் எல்லாம்கூட 6 பத்திரிகைகளை இங்கே நான் வைத்திருக்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர் 4 நாட்களாக பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து எடுத்த நடவடிக்கையை உறுதிப்படுத்தி பத்திரிகைகளிளெல்லாம் அந்தச் செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. அந்தப் பத்திரிகை—ஏற்கெனவே தட்டுப்பாடு வந்துவிட்டது, தண்ணீரே கிடைக்கவில்லை என்று எழுதிய தினமலர் பத்திரிகையிலேயும், 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. இங்கே இருக்கிறது. இங்கே எடுத்து வரச்சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலம் காட்டுகிறேன். எது எப்படியிருந்தாலும், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது என்பது குடிநீர் வடிகால் வாரியத்தாலேயோ, நகராட்சியாலேயோ நிச்சயமாக இல்லை. அது ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், அந்த இரண்டு மாவட்டங்களிலேயும், தமிழ்நாட்டில் இல்லாத பெருவறட்சி ஏற்பட்டிருக்கிறது. அங்கு தொடர்ந்து 2½ ஆண்டு காலமாக மழையே இல்லை. அதனால் ஏற்பட்ட விளைவுதான் இப்போது நிலத்தடி நீர் பாதித்து ஆழ்குழாய்க் கிணறுகள் வற்றி, தண்ணீர் கிடைக்காத அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. ஒரு சிறு குறிப்பை நான் உங்களுக்குப் படிக்கலாம் என்று கருதுகிறேன். குடிநீர் அளவு ஒரு நாளைக்கு 180 இலட்சம் லிட்டர் ஆரம்பத்தில் கிடைத்தது. ஆனால். தற்போது அது மாறி தற்போது இருக்கிற சூழ்நிலையில் 60 இலட்சம் லிட்டர்தான் கிடைக்கிறது. பாதிக்குமேல் போய்விட்டது. ஆகையினால், மூன்று நாளைக்கு

ஒரு முறை 100 லிட்டர், 80 லிட்டர் என்ற அடிப்படையில் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இதையும் ஏன் தினசரி பகுத்துக் கொடுக்கலாம் என்ற ஒரு நிலை வருமா, என்று பார்த்தோம். அதையும் பரிசீலித்தபோது கடைசிவரை போய் அதில் சேரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஐந்தே ஐந்து நிலையங்களில்தான் தண்ணீரைத் தேக்கி வைக்கிற தொட்டிகள் இருக்கின்றன. ஆகவே சராசரியாக தினசரி கொடுக்கிற சூழ்நிலை இல்லை. ஆனால் இவற்றையெல்லாம் மாற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்வதற்கு முன்னாலேயே சுமார் ரூ. 44,00,000-க்கு ஒரு இடைக்கால ஏற்பாடாக தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து, அதற்குப் பிறகு நிரந்தரப் பரிகாரம் செய்யலாம் என்ற முயற்சியை மேற்கொண்டு, 3 மாத காலம் முயற்சித்து அதிலே சத்துவாச்சாரியையும் உள்ளடக்கி அதைச் செய்து கொடுக்கலாம் என்ற நிலைக்கு வந்து, 31-12-1999 வரை 96 இலட்சம் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டது மாற்றப்பட்டு 65 இலட்சம் லிட்டருக்கு வந்துவிட்டது. அந்த நிலையில் இப்போது 2 ஆழ்குழாய்க் கிணறுகள் போர்க்கால அடிப்படையில் அங்கே அமைக்கப்பட்டு, அதன் மூலம் சுமார் 5 இலட்சம் லிட்டர் கூடுதல் குடிநீர் பெறப்பட்டு, அல்லாபுரம் பேரூராட்சிக்கு 5 இலட்சம் லிட்டர் குடிநீரும், வேலூர் நகரத்திற்கு 60 இலட்சம் லிட்டர் குடிநீரும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அது 65 இலட்சமாக சற்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைத்தாண்டி 1-3-2000 முதல் 3 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகிறது. 5 நாளாக இருந்தது உண்மை. 7 நாள், ஒரு நாள் கூட இல்லை. அதற்குப் பிறகு 25 நாட்களுக்குள்ளாக 3 நாட்களுக்கு ஒரு முறை என்று வகுக்கப்பட்டு, இப்போது கொடுத்துக்கொண்டு வருகிறது. 44,67,000 ரூபாய் என்ற அந்தத் தற்காலிக மதிப்பீடுகூட, உண்மையான மதிப்பீடு. இப்போது சுமார் 40 இலட்சம் ரூபாயில் அந்தப் பணிகளை விரைவாக முடித்துவிடலாம். இந்த மாதம் 13 ஆம் தேதிக்குள் அநேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விடலாம். 14 ஆம் தேதியில் இருந்து தண்ணீரைத் தொடர்ந்து தரலாம் என்ற ஒரு நிலை வந்திருக்கிறது. அப்படிக் கொடுத்தால் கிட்டத்தட்ட கணக்கிட்டுப் பார்க்கும்போது, இரண்டையும் சேர்த்து, 4 நீர் உறிஞ்சி கிணறுகள் பம்பு செட்டுகள் பொருத்தியும், குழாய் பதித்தும், தற்போது நீர் சேகரிப்புக் கிணற்றில் கொண்டு சென்று, அங்கிருந்து வேலூர் நகராட்சிக்கு ஏற்கெனவே குடிநீர் பயன்படுத்தும் திட்டத்தில் குழாய்கள் மூலமே கொடுக்கப்பட்டு, இந்தத் தண்ணீரை 14 ஆம் தேதி வரை கொடுத்துவிடலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்து இருக்கிறோம். அப்படிக் கொடுத்தால் தற்போது நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் 65 இலட்சம் லிட்டர் குடிநீர், 40 இலட்சம்



லிட்டர் குடிநீரும் சேர்ந்து மொத்தம் 105 இலட்சம் லிட்டர் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிக் கிடைத்துவிட்டால். நிச்சயமாக ஒரு நாளைக்கு 50 இலட்சம் லிட்டர் கொடுக்கக்கூடிய தைரியத்தில், இந்த இடைக்காலத் திட்டத்தால் நிச்சயமாகப் பயன்பெறும் என்று நம்பிக்கை இருக்கிற காரணத்தால் ஒரு நாளைக்கு மறுநாள் மாற்றிக் கொடுத்தால்தான் அந்தத் தண்ணீர் போய்ச் சேரும். இல்லாவிட்டால் கடைப்பகுதிகளுக்குப் போய் சேராது என்பதற்காகத்தான் வைத்திருக்கிறோம். ஒரு நாளைக்கு 50 இலட்சம் லிட்டர் கொடுக்கக்கூடிய அளவுக்கு வாய்ப்புண்டு. ஆனால், கொடுக்கிற வாய்ப்பில், தொட்டி இல்லாத காரணத்தால், கடைக்கோடிப் பகுதிக்குப் போகாது என்பதற்காக, ஒன்றுவிட்டு ஒரு நாள், ஒரு நாள் நிறுத்தி மறுநாள் கொடுக்கலாம் என்று இருக்கிறோம். நிச்சயமாகத் தண்ணீர் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு 14 ஆம் தேதி அன்றைய தினம் தீர்வு செய்துவிடுவோம்.

முற்பகல் 11-10

அதற்குப் பிறகு, நிரந்தரப் பரிகாரத்தைத் தேடுவதற்கு, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, ஏற்கெனவே அவர் தெரிவித்ததன் அடிப்படையில், 14 கோடி ரூபாய்க்குத் தோராய மதிப்பீடாக ஒரு திட்டம் தயாரிக்கப்படுகிறது. அநேகமாக 90 லிட்டர் தண்ணீர், இன்றைக்கு இருக்கிற மக்கள் தொகையின்படி, அவர் குறிப்பிட்டதைப்போல—அது நாங்கள் சொன்ன விவரம்தான்—அதை மட்டும்தான் இப்போது அவர் பிரதிபலித்திருக்கிறார்—2006 வரையில், நிச்சயமாக, என்ன வறட்சி ஏற்பட்டாலும், அவர்களுக்கு 90 லிட்டர் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமையை, அதாவது அந்த 14 கோடி ரூபாய் உச்ச மதிப்பீட்டிலே இருக்கிற நிலையைக் கணக்குப் பார்த்து, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் செய்தால், நிறைவேற்றி முடிக்கலாம். இரண்டாண்டுகள் ஆகுமென்று சொல்லியிருக்கிறார்கள். 18 மாதத்திற்குள் திட்டத்தை முடிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்காக 10 ஆம் தேதி அன்றைய தினம் நாங்கள் பேசவிருக்கிறோம். அதிலே முடிவெடுத்து ஒரு நல்ல நிலைமை உருவாகலாம் என்று கருதுகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம்.

அதோடுகூட, திருவண்ணாமலையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் ஆழ்துளை போடும் கருவி இல்லாத காரணத்தால், தட்டுப்பாட்டால், பணிகள் அங்கு சரியாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். எல்லா இடங்களிலும் அந்தப் பணி

நடந்துகொண்டிருப்பதால், ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில், அவற்றை முடித்துவிட்டு வரலாம் என்று தெரிவித்திருக்கிறேன். அநேகமாக, 10 ஆம் தேதி அன்றைய தினம், அவர்கள் விருப்பப்படி—முன்பு என்னிடத்திலே கூட கேட்டார்—3 ஆழ்துளை போடுகின்ற கருவிகளை அனுப்பி வைக்கலாம் என்று இருக்கிறேன். நிச்சயமாக 10 நாட்களுக்குள்ளாக அந்தப் பணிகள் தொடங்கி, விரைவாக நடைபெறும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன், ஏராளமான திட்டங்கள் அறிவித்திருக்கிறோம். அவற்றிலே 4 ஆண்டுகளில் மட்டும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருவண்ணாமலை மாவட்டத்தில், மொத்தம் 18 ஊராட்சி ஒன்றியங்களில், 857 ஊராட்சிகள் இருக்கின்றன. 3,238 குடியிருப்புகள் இருக்கின்றன, கடந்த 4 ஆண்டுகளில் 1,056 குடியிருப்புகளுக்கு மட்டும் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குடிநீர் வடிகால் வாரியம் வேலையே செய்யவில்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஒழுங்காக வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். சரியாகவும் வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். சரியாக வேலை செய்யவில்லை என்றால், இவ்வளவு—ஏறத்தாழ 1,056 குடியிருப்புகளுக்கு, அவை நிறைவுபெறுகிற அளவுக்கு, 40 லிட்டர் ஒரு தனி மனிதனுக்குக் கிடைக்கிற அளவுக்கு 3 ஆண்டுகளுக்குள் முடித்திருக்கிறோம் என்றால், என்னைப் பொறுத்தவரையில், பணி செய்கிறவர்களைப் பாராட்டாவிட்டாலும்கூட, அதிகமான குறைகளைச் சுமத்துவது தவறு என்று கருதுகிறவன் நான். அவர்கள்மீது குறைபட்டது உண்மை. குறையைச் சொன்னது உண்மை. ஆனால், நிறைவு பெற்றிருக்கிற காரணத்தால் சொல்கிறேன்; இப்போது 2,182 குடியிருப்புகளுக்குப் பகுதிப் பகுதியாக 25 லிட்டர், 30 லிட்டர், 15 லிட்டர் என்ற நிலையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கும் ஒரு நல்ல திட்டத்தின்மூலம், 15 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த வேண்டும். பாக்கி இருப்பது 381 பணிகள்தான். எல்லாப் பணிகளையும் எடுத்துக்கொண்டோம். எடுத்துக் கொண்டு நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிப்பதற்கான திட்டம் இருக்கிறது. அவை தனித் திட்டமாக இருப்பதால் கூடிய விரைவில் முடிக்கலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, நிச்சயமாக குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கையைத் துரிதமாக எடுத்து முடிக்கும் இந்த அரசு என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.



## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை

### குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொடுக்கப்படும் சத்துமாவு வழங்கும் அனுமதி ஏற்கெனவே உள்ள விநியோகதாரருக்கே தொடர்ந்து அளிக்கப்படுவது பற்றி மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத்துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ். அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள், அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள், 31-3-2000 அன்று, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகையில், தமிழ்நாட்டில், குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் வழங்கப்பட்டுவரும் சத்துமாவு சம்பந்தமாக, ஒப்பந்தக் காலம் முடிந்த பிறகும், மறு tender கோராமல் முதலில் விநியோகித்து வந்தவருக்கே கால நீட்டிப்பு வழங்கியது குறித்து இங்கே பிரச்சினை எழுப்பினார். இதுகுறித்து, துறையின் சார்பில், சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த விளக்கத்தை அளிக்கிறேன்.

தமிழ்நாட்டில், மொத்தம் 431 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 113 I.C.D.S. திட்டங்கள், சமூக நல இயக்ககத்தின் கீழும், 318 உலக வங்கி உதவிபெறும் மூன்றாவது I.C.D.S. திட்டங்கள், திட்ட ஒருங்கிணைப்பாளரின்கீழும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 113 திட்டங்களில், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச் சத்துணவு, சமூக நலத் துறையின் கீழுள்ள 26 மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தயாரிக்கப்பட்டு, நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. 318 உலக வங்கி உதவிபெறும் I.C.D.S. திட்டங்களில், தாய்மார்களுக்கும் மற்றும் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் amylase செயல்பாடுள்ள ஊட்டச் சத்து மாவு, திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி மூலமாக, தொழில்நுட்பத் தகுதி மற்றும் தரச் சான்று தகுதி என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, குறைந்த விலை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட தனியார் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்படுகிறது.

முற்பகல் 11-15

இந்த இருவிதமான I.C.D.S. திட்டங்களிலே வழங்கப்படும் ஊட்டச்சத்து மாவில் உட்பொருள், ஊட்டச்சத்து, தரம் ஆகியவற்றிலும், கொள்முதல் செய்யப்படும் முறையிலும் வேறுபாடுகள் உள்ளன. உலக வங்கித் திட்டத்தின்கீழ், கொள்முதல் செய்யப்படும் 100 கிராம் மாவில் புரதம் 15 கிராமும், கலோரி 380-ம் வைட்டமின் உயிர்ச்சத்து, calcium மற்றும் இரும்புச் சத்து ஆகியவை அதிக அளவில் செறியூட்டப்பட்டுள்ளது. சமூக நல இயக்ககத்தின் மூலம் செயல்படுத்தப்படும் I.C.D.S. திட்டத்திற்கான மாவில் பொதுவாக இந்தச் சத்துகள் குறைவாக உள்ளன. எனவே, 431 திட்டங்களிலும் ஒரே மாதிரியான தரம் மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த அமிலேஸ் செயல்பாடு உடைய சத்து மாவை ஒரே மாதிரியாகக் கொள்முதல் செய்து, இரு துறைகளின் திட்டங்களுக்கு இடையே ஊட்டச்சத்து மாவு வழங்குவதில் எந்தவித வித்தியாசமும் இல்லாமல் அமைந்திடும் வகையில், மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் மாவின் தரத்தை உலக வங்கித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாவின் தரத்திற்கு இணையாக உயர்த்தி வழங்குவதற்கு ஏதுவாக ஊட்டச்சத்து கொள்முதல் கொள்கையை மாற்றி வகுத்திடும் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து வந்தது.

இதற்கிடையில், உலக வங்கியின் 318 திட்டங்களில், ஊட்டச்சத்து மாவு வழங்க திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்தினுடைய ஒப்பந்தக் காலம் 1999 ஆகஸ்ட் மாதத்தில் முடிவுக்கு வந்தது. ஆயினும், முன்னர் குறிப்பிட்ட ஒருமித்த கொள்முதல் கொள்கையை அரசு பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டியிருந்ததாலும், 1999 செப்டம்பர் மற்றும் அக்டோபரில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டதையொட்டி, தேர்தல் விதிமுறையின்படி, புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரி விளம்பரம் செய்யத் தடை செய்யப்பட்டிருந்ததாலும், ஏற்கெனவே அமுலில் இருந்து வந்த ஒப்பந்தம் 1999 நவம்பர் வரை, நிதித் துறையின் ஒப்புதலுடன் முதல் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

ஒருமித்த கொள்முதல் கொள்கை குறித்த முடிவு பற்றிய கருத்துரு தொடர்பாக, தக்க விவரங்களைத் திரட்ட ஒருங்கிணைப் பாளர்களிடமிருந்தும், சமூகநல ஆணையரிடமிருந்தும் பெற்று, அவற்றை நிதித் துறையுடன் கலந்து விரிவாக பரிசீலிக்க வேண்டியிருந்தது. மேலும், 113 I.C.D.S. திட்டங்களுக்கு மாவு வழங்கிட மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒப்பந்தம் 31-3-2000-ல் முடிவடைய இருந்தது. ஒருமித்த



கொள்முதல் கொள்கைக்கான கருத்துருவை, நிதித் துறை மற்றும் சட்டத் துறையுடன் கலந்து 431 திட்டங்களுக்கும், பொதுவான கொள்முதல் கொள்கையை வகுத்து, இறுதி ஆணை பிறப்பித்திட மேலும் கால அவகாசம் தேவை என்கின்ற காரணத்தினாலும், 2000 மார்ச் வரையிலான காலத்திற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் கேட்டுக்கொண்டபடி, தற்போதைய ஒப்பந்தக்காரரிடமே உலக வங்கித் திட்டத்திற்கான ஊட்டச் சத்து மாவை பழைய விலையிலேயே பெறுவதற்கு நிதித் துறையின் ஒப்புதலுடன் அரசு அனுமதி அளித்தது. ஒருமித்த கொள்முதல் கொள்கைக்கான ஆணை வெளியிட்டு, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, ஒப்பந்தப்புள்ளி கோரி, புதிய ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்ய மேலும் அவகாசம் தேவைப்படுகிறது. எனினும், தற்போதைய ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தக் காலத்தை மேலும் 3 மாதத்திற்கு மேல் நீட்டிக்காமல், 3 மாத காலத்திற்கு 1-4-2000 முதல் 30-6-2000 வரை மாவு வழங்க குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று புதிய ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்ய ஆணையிடப்பட்டு, திட்ட ஒருங்கிணைப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். எனவே, உலக வங்கி உதவி பெறும் 318 I.C.D.S. திட்டங்களிலும் வழங்கப்படும் அமிலேஸ் (Amylase) செயல்பாடு உடைய ஊட்டச் சத்து மாவு, விதிமுறைகளைப் பின்பற்றி திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவே முற்றிலும் தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர் மூலமாகவே வழங்கப்படுகிறது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் மாவின் தரத்தை உலக வங்கி உதவி திட்டத்தில் வழங்கப்படும் மாவின் தரத்திற்கு இணையாக உயர்த்தி, விநியோகிப்பதற்கு ஏற்ப, புதிய ஒருமித்த கொள்முதல் கொள்கை செயலாக்கப்படுவதை எதிர்நோக்கி, இடைப்பட்ட காலத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தைத் தடையில்லாமல் செயல்படுத்துவதற்காக, ஏற்கெனவே ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் நிர்ணயித்த விலையில் ஊட்டச்சத்து மாவை தொடர்ந்து தொய்வின்றி வழங்குவதற்கான ஒப்பந்தம் 31-3-2000 வரை நீட்டிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பில் உள்ள எந்த விதியும் மீறப்படவில்லை என்றும், அனைத்தும் அரசு விதிகளுக்கு உட்பட்டு நடைபெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே discussion allow பண்ணுவதில்லை. என்னிடம் Chamber-ல் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கை வைக்கப்படும்போது discussion allow பண்ணமுடியாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பிரச்சினையின் தன்மை கருதி, குழந்தைகளின் நலன் கருதி, 10 கோடி ரூபாய்க்கான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 கோடி ரூபாய் பிரச்சினையாக இருந்தாலும் கூட discussion-க்கு அனுமதி கிடையாது (குறுக்கீடு). நீங்கள் என் அறைக்கு வந்து என்னைப் பார்த்துக் கேளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 40 இலட்சம் பச்சிளங் குழந்தைகளுக்கு சத்துமாவு கொடுக்கின்ற பிரச்சினை. இதிலே குற்றச்சாட்டு சொன்னது நான். நான் நிரூபிக்கிறேன். இதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் கடைசியாக பதில் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் பதில் சொல்கிறேன். பொது விவாதத்திற்குப் பதில் சொல்வது, முதலமைச்சர். இது, அந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும், விதி 110-ன்கீழ் அமைச்சர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அதற்குப் பிறகு என்ன விளக்கம் வேண்டுமானாலும், முதலமைச்சர் பதில் கொடுத்த பிறகு பேசுங்கள்.

*முற்பகல் 11-20*

## 6. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம் —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம், திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கையிலே, வருவாய்க் கணக்கிலே வரவு ரூ. 18,406.17 கோடியாகவும், செலவு ரூ.21,564.87 கோடியாகவும் உள்ளது. அதில் நிகரப் பற்றாக்குறையாக ரூ. 667.96 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த 667.96 கோடி ரூபாயை எப்படி ஈடுகட்ட முயற்சிக்கிறோம் என்பதைப் பற்றி, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவரமாக எதுவும்



குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல, இந்த பட்ஜெட், ஒரு வரியில்லாத பட்ஜெட் வரி இல்லாத பட்ஜெட் என்று சொன்னாலும்கூட, ஏற்கெனவே, மத்திய அரசு ஏழையெளியவர்கள் உபயோகிக்கின்ற கிருஷ்ணாயிலுக்கு அதிகமான விலையை உயர்த்திவிட்டார்கள். Gas-க்கு விலையை உயர்த்திவிட்டார்கள். மண்ணெண்ணெய்க்கும், Gas-க்கும் விலையை உயர்த்தியதைப் போன்றே, மத்திய அரசு அரிசிக்கும் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். கோதுமைக்கும் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி, நடுத்தர மக்களை, ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கின்ற வகையிலே, மத்திய அரசு அதிகமான விலையை உயர்த்தியிருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய அரசு, இதிலே வரி போட்டு, இன்னும் தன்னை வருத்திக்கொள்வதற்கு விரும்பவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

தமிழகத்தை எடுத்துக்கொண்டால், அகில இந்திய அளவிலே, வறுமைக் கோட்டிற்கு கீழேயிருக்கின்ற மக்கள் தொகையை எடுத்துக்கொண்டால், பஞ்சாப் மாநிலத்திலே 11.77 சதவிகிதமாகவும், கோவா மாநிலத்திலே, 14.92 சதவிகிதமாகவும், ஆந்திரா மாநிலத்திலே 22.19 சதவிகிதமாகவும், குஜராத் மாநிலத்திலே 24.21 சதவிகிதமாகவும், ஹரியானாவிலே 25.5 சதவிகிதமாகவும், ஜம்மு-காஷ்மீரிலே 25.17 சதவிகிதமாகவும், கேரளாவிலே 25.43 சதவிகிதமாகவும், இமாச்சல பிரதேசத்திலே 28.44 சதவிகிதமாகவும், கர்நாடகத்திலே 33.14 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டிலே மட்டும் 35.5 சதவிகிதமாகவும் இருக்கிறது என்று, சில தினங்களுக்கு முன்னாலே, ஹிந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. Manorama Year Book-2000 என்ற புத்தகத்திலே, பக்கம் 509-இலே விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே 35.5 சதவிகித மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த 35.5 சதவிகித மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஏதும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

அதுமட்டுமல்ல, இந்தத் தமிழகத்திலே 6 கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த 6 கோடி மக்களிலே, 2-1/2 கோடி மக்கள் 20 வயதிலேயிருந்து 40 வயது வரை இருக்கின்ற மக்கள். அதிலே, படித்த மக்கள் 1 கோடி மக்கள். அந்த 1 கோடி மக்களிலே, வேலைக்காக பதிவு செய்து இருப்பவர்கள், 43 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருக்கிறார்கள். இதிலே M.A., M.Sc., M.Com. படித்தவர்கள் 1,80,000 பேர். பட்டதாரி பொறியியல் வல்லுநர்கள் 45,000 பேர் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் 1,05,000 பேர், மருத்துவத் துறையிலே 6,000 பேர் வேலை இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு

வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை முதலமைச்சர் பதில் உரையிலே அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

இப்போது ரூ. 18,000 கோடி அளவுக்கு வருவாய்க் கணக்கிலே இருந்தாலும்கூட, நமக்கு அந்த 18,000 கோடி ரூபாயிலே 12,000 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்குச் சம்பளமாகப் போய்விடுகிறது. சுமார் 1,300 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு மானியமாகக் கொடுத்து விடுகிறோம். ஏழைகளுக்கு கொடுக்கின்ற ரேஷன் அரிசிக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2,000 கோடி ரூபாயை மானியமாக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். போக்குவரத்துத் துறையிலே சுமார் 500 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்திலே 600 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பாலுக்கு 30 கோடி ரூபாய் மானியம். இலவச வேஷ்டி சேலை கொடுப்பதிலே 100 கோடி ரூபாய் மானியம். அதுமட்டுமல்ல, அரசு இவை அத்தனையையும் மீறி அரசு வாங்கிய கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் போனால், வளர்ச்சித் திட்டங்களுக்கென்று இந்த அரசு ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவான தொகையே. இந்தக் குறைவான தொகையை வைத்துக் கொண்டு வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற 35.5 சதவிகிதம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், 43 இலட்சம் மக்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை முதல்வர் அவர்களின் பதில் உரையிலே அறிய விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகளுடைய பிரச்சினை. விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சியிலே இருக்கிற நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று வேதனைப்பட்டார்கள். ஆனால், சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த, கட்சி பாகுபாடு இல்லாத, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன், விவசாயிகள் யாரும் இப்போது நிம்மதியாக இல்லை. ஏன் என்று சொன்னால், ஒரு பக்கத்திலே யூரியா விலை உயர்ந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே விலைவாசி உயர்ந்துகொண்டே போய்க்கொண்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு மிகவும் ஒரு கஷ்டமான நிலை. உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்கு அளவுகூட மிஞ்சாது என்று சொல்வார்கள். அந்த நிலைமையில்தான் இப்போது விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மத்திய அரசின் தவறான கொள்கையின் காரணமாக இப்போது அவர்கள் எவ்வளவு தூரம் துன்பப்படுகிறார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்பட்டே ஆக வேண்டும்.



கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்னை சாகுபடி செய்கின்ற விவசாயிகள். தென்னையின் கொப்பரை விலை மிகவும் மோசமாகிவிட்டது. தென்னை மரங்களுக்கு மருந்தடிப்பதிலே அரசு முழு கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு இப்போது இருந்து வருகிறது. அந்தக் குற்றச்சாட்டின் பயனாக விளைந்திருக்கின்ற தேங்காயை வாங்குவதற்குக்கூட ஆள் இல்லை என்று வட ஆற்காடு மாவட்டத்திலே இருப்பவர்களும், மற்றவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி விவசாயிகள் இன்னல் படுகின்ற ஒரு நிலையிருக்கிறது. அதைப் போக்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் துறை. தொழில் துறையிலே முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக ஹூண்டாய் தொழிற்சாலை வந்திருக்கிறது, பாராட்டுகிறோம். ஃபோர்டு தொழிற்சாலை வந்திருக்கிறது, பாராட்டுகிறோம். ஆனால், அதே நேரத்திலே மூடிக்கிடக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகள்—அது பி.அண்டு சி. மில்லாக இருக்கட்டும் அல்லது ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையாக இருக்கட்டும்; அது மட்டுமல்லாமல், கூட்டுறவு நூற்பாலைகள் பல மூடிக் கிடக்கின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. எண்ணூரிலே இருக்கின்ற பல்வேறு சிறுசிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அம்பத்தூரிலே இருக்கின்ற தொழிற்பேட்டையிலே பாதி தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. கிண்டியிலே இருக்கின்ற தொழிற்பேட்டையில் பாதி தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை ஆராய்ந்து முதலமைச்சர் ஆவன செய்வார் என்று நம்புகிறேன்.

இப்போது 667.96 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொன்னார்களே, அதை நீக்குவதற்கு அரசு என்ன முயற்சி எடுக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு மட்டும் அல்லாமல், நாங்களும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்திலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை தனியார்கள் கைப்பற்றிவற்றை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த அரசு புறம்போக்கு நிலங்களை யார், யார் கைப்பற்றி

வைத்திருக்கிறார்களோ அதை அவர்களுக்கே—வறுமைக் கோட்டின் கீழே இருப்பவர்களுக்கு 3 சென்ட் என்று பட்டா கொடுப்பதிலே தவறு இல்லை. ஆனால் அதிகமான அளவு 2 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை பல தனியார்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த நிலத்தைக் கைப்பற்றி அல்லது அவர்களுக்கே ஒரு விலை போட்டு விற்று விட்டால் கூட ஒரு புள்ளிவிவரத்தின்படி அரசுக்கு சுமார் 3,000 கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்குமா என்று முதலமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அதுபோன்று, 2,000 கோடி ரூபாய் அரசு ஆண்டு ஒன்றுக்கு மானியமாக கொடுத்து, ரேஷன் அரிசி போடச் சொல்கிறார்கள். ரேஷன் அரிசி போடுகின்றபோது அதிலே மிகப் பெரிய கோளாறு. 5 கிலோ அரிசி வழங்கினால், அது 4 கிலோதான் இருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்கினால் அதிலே அளவு குறைவாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அந்த அரிசியை 5 கிலோ, 10 கிலோ பாக்கெட்டுகளாகத் தயார் செய்து பாக்கெட்டுகளின் மூலம் விநியோகம் செய்தால் இந்தக் குறைகள் இல்லாமல் செய்ய முடியும். ஏழைகள்தான் இந்த மண்ணெண்ணெயை உபயோகிக்கின்றார்கள். இப்போது ரொம்பவும் சாதாரண ஏழைகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள்தான் மண்ணெண்ணெயை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அரிசியின் விலையை எவ்வளவு உயர்த்தினாலும், அரிசியின் விலையை நாங்கள் உயர்த்தமாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அறிவித்தார்களே, அதேபோல் மண்ணெண்ணெய்க்கும் விலையை உயர்த்தமாட்டோம், அதற்கும் நாங்கள் மானியமாகக் கொடுக்கிறோம் என்ற உறுதிமொழியை முதல்வர் அவர்கள் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதுமட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே (மணியடிக்கப்பெற்றது) என்னப்பா இது, இரண்டு நிமிடம்கூட நான் பேசவில்லை. (சிரிப்பு) ஒவ்வொன்றாகச் சொல்லிவிடுகிறேன்பா. (சிரிப்பு)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்குள்ள நட்பை அவையிலே பரிமாறிக்கொள்வது நல்லதா, அல்லது வெளியிலே பரிமாறிக்கொள்வது நல்லதா என்று தெரியவில்லை. வாப்பா, போப்பா என்கிறார்கள். (சிரிப்பு)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் அரசாங்கத்தைக் கடுமையாகத் தாக்கிப்



பேசுகிறபோதெல்லாம் முதலமைச்சர் அவரைப் பார்த்து சிரித்துக்கொண்டேயிருக்கிறார். (சிரிப்பு) இது ஏதோ mesmerism பண்ணுகிற மாதிரி இருக்கிறது. (சிரிப்பு) எனவே, முதலமைச்சர் சிரிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. டி. சுதர்சனம்:** 2000 கோடி ரூபாய் மானியம் கொடுத்து ரேஷனில் அரிசி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த அரிசிக் கடத்தல் ஒரு தொடர் கதையாக நடந்துகொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட காலையிலே பத்திரிகையிலே பார்த்தோம். கோவில்பட்டியிலே ஒரு godown-லேயிருந்து சுமார் ரூ. 11 இலட்சம் பெறுமானமுள்ள ரேஷன் அரிசி 1,667 மூட்டைகள் பறிமுதல் செய்திருக்கிறார்கள். இந்த 1,667 மூட்டைகள் அரிசி கோவில்பட்டியிலே பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலேயிருந்து ஒரு வேகன் மூலமாக ஏற்றப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நம்முடைய அரசு கண்டுபிடித்திருக்கிறது. ஆனால், இதற்கு மூல காரணம் என்ன? எப்படி ரேஷன் அரிசி வெளியே போகிறது? இவ்வளவு அதிகமான அளவு போகக்கூடிய நிலைமை எப்படி ஏற்படுகிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரூ.2,000 கோடி மக்களுடைய வரிப் பணத்திலேயிருந்து மானியமாகக் கொடுத்து, ஏழை எளிய மக்களுக்கு, சமுதாயத்தில் பின்தங்கி வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று நினைக்கின்ற இந்த அரசு, இப்படி கோடி கோடியாகக் கொள்ளையடிக்கின்ற ஒரு கும்பல் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சுதந்திர தினப் பொன்விழாவை முன்னிட்டு மரம் நட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தது. மரம் நடவேண்டுமென்று சொல்லி, அதிலே மிகப் பெரிய முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த முறைகேடுகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக சுதந்திர தினப் பொன்விழாவையொட்டி எல்லா நகராட்சிகளிலும், நகரமன்றங்களிலும் மரக் கன்றுகள் நட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையின்படி பல்வேறு இடங்களில் அரசு மரக் கன்றுகளை நட்டது. இல்லையென்று சொல்லவில்லை. அதிலே 80 சதவீதம் மரக் கன்றுகளே நடப்படவில்லை. திருநெல்வேலியிலே இருக்கின்ற மாநகராட்சி, அங்கே மரக் கன்றுகளை நடுவதாக முயற்சி செய்து, வனத் துறையிடத்திலே ஒப்படைத்தது. வனத் துறையும் அதிலே பணத்தைப் பெற்றுக்கொண்டு, மரம் நடுவதாக அறிவித்தது. ஜவஹர்புரம் என்ற இடத்திலே 23 மரங்கள். பிறகு நீதிமன்ற வளாகத்தில் 30 மரங்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே 352 மரங்கள். இப்படி 5,000 மரங்களை நடுவதற்கு அங்கேயிருக்கின்ற மாநகராட்சி வனத் துறையிடத்திலே பணத்தைக் கொடுத்துவிட்டது. வனத்துறையிலே பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகள் மரக்கன்றுகளை நட்டார்களா என்று பார்த்தால் மரக் கன்றுகளை நடவில்லை. அதற்குப் பதிலாக மரக் கன்றுகளை நட்டதாகக் கணக்கெழுதி அதிலே, மிகப் பெரிய முறைகேடுகள் நடந்திருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள், அதற்கு ஒரு தனி நீதி விசாரணை நடத்தி, அந்த முறைகேடுகளைக் கண்டுபிடித்து, அந்த முறைகேடுகளைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் இன்றைக்கு
(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-35

ஒரே நிமிஷம். இந்த மாநகராட்சியிலே மரம் நடுவதிலே வனத்துறையிலே மிகப்பெரிய முறைகேடுகள். இதுமட்டுமல்ல. இதை ஒரு குறிப்புக்காகச் சொல்லியிருக்கிறேன். மிகப்பெரிய முறைகேடுகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அந்த முறைகேடுகள் தமிழகம் பூராவும் நடந்திருக்கின்றன. முதலமைச்சருக்கு வேண்டிய ஓர் அரசு அதிகாரியையோ அல்லது நீதிபதியையோ வைத்து விசாரணை நடத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பூவிருந்தவல்லியிலே பேருந்து நிலையம் இருக்கிறது. பக்கத்திலே கோயிலுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. நான் 9 ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கிறேன். இந்த மன்றத்திலே 9 ஆண்டுகளாக நானும் பேசிக்கொண்டிருக்கிறேன். அந்த நிலத்தை கையகப்படுத்தி அரசு மிகப்பெரிய பேருந்து நிலையம் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது இன்னமும் முடியவில்லை. உடனடியாக அரசு அந்தக் கோயில் நிலத்தைக் கைப்பற்றி மிகப் பெரிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

ஆவடி நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை இந்த ஆண்டு தொடங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆவடியில் இருக்கின்ற திருமுல்லைவாயில் பகுதியிலே புதிய காவல் நிலையம் ஒன்று தொடங்க வேண்டும் என்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, ஜெய்ஹிந்த்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

எனையீன்ற தாய்க்கும், தந்தைக்கும் மக்கள்

இனம் ஈன்ற தமிழ் நாடு தனக்கும்—என்னால்,

தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்

அதற்காகத் தன்னை அர்ப்பணிப்பதையே

தன் வாழ்க்கை நெறியாகக் கொண்டு,

போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித்

தூற்றுவோர் தூற்றட்டும், தொடர்ந்து

பணி செய்து கிடப்பேன்—

என நாளும் தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் உழைத்து வரும் தமிழினக் காவலர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகின்றேன்.

இந்த மாமன்றத்தில் என் கன்னிப்பேச்சினைத் தொடங்குவதற்கு முன்னால் என்னை இந்தச் சிறப்பிற்கு ஆளாக்கிய என்றும் எங்கள் குடும்பத்தின்பால் நீங்காத அன்புகொண்டுள்ள எங்கள் ஞானத்தந்தை தானைத் தலைவர் முதல்வர் அவர்களுக்கும், இளைஞர்களின் எழு ஞாயிறு என்னுடைய மூத்த அண்ணன் மாண்புமிகு சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய திருச்சிராப்பள்ளி இரண்டாவது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்—ஏன்? எங்கள் தொகுதி வாக்காளர் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தான் சார்ந்த கொள்கையையும், ஏற்றுக் கொண்ட தலைவனையும் எக்காலத்தும் மாற்றிக் கொள்ளாது, தானைத் தலைவர் கலைஞரின் காவல் அரணாக தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்து, இம்மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சராகவும், பலமுறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய என்னுடைய தந்தையார், அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் 'அன்பில்' என்று அழைக்கப்பட்ட அன்பில் தர்மலிங்கம் அவர்களின் பணியை நான் சார்ந்த இயக்கத்திற்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் தொடர்ந்து செய்வேன்.

புன்னகை மன்னனாக, பிறர் மனம் புண்படாது பேசும் பாங்கு கொண்ட இளைஞர்களின் ஏந்தலாக இருந்து, சில்லென்று பூத்த சிறுநெருஞ்சி காட்டினிலே எங்களை நில்லென்றுக் கூறி, நிறுத்திவிட்டு, நெடுந்தூரம் சென்றுவிட்ட, என்னுடைய ஆருயிர் அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்கள் விட்ட பணியையும் தொடர்ந்து செய்வேன் என்று இம்மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அய்யன் திருவள்ளுவர் வழியில் நாட்டை நடத்திச் செல்லும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 13-வது நிதிநிலை அறிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொள்வதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். வரியில்லா நிதிநிலை அறிக்கையை அளித்த முதல்வர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்கள்தான் நாட்டின் அடிப்படை அமைப்பாகும். சென்ற நிதியாண்டில் மாநில அரசின் வரி வருவாயிலிருந்து ரூ. 845 கோடி வழங்கப்பட்டதை வரும் நிதியாண்டில் ரூ.1,036 கோடியாக உயர்த்தியுள்ளீர்கள். மற்ற இனங்களையும் சேர்த்து வரும் நிதியாண்டில் மொத்தம் ரூ. 2,401 கோடியாக உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் தலைமையில் மாவட்டத் திட்டக் குழுக்கள் செயல்படும் என்று அறிவித்துள்ளது நமக்கு நாமே திட்டமிட்டுக்கொள்ள வழி செய்யும் சீரிய திட்டமாகும்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்னும் பழமொழியை என்னுடைய தந்தையார் அடிக்கடி மேற்கோள் காட்டுவார். ஆனால், அந்தப் பழமொழியைப் பொய்யாக்கி, உழுதவன் இலாபக் கணக்குப் பார்க்கச் செய்து உழவர் சந்தைகள் அமைத்துள்ளீர்கள். என்னுடைய தொகுதியில் தென்னூரில் ஓர் உழவர் சந்தை அமைந்துள்ளது. ஏராளமான பொதுமக்கள் பயன்பெறுகின்றனர். ஆனால், என் தொகுதியின் மறுமுனையில் உள்ளவர்கள் வந்து சேர்வதற்கு முன்னால் காய்கறிகள் விற்பனையாகி விடுகின்றன. எனவே, இந்த ஆண்டு சிந்தாமணிப் பகுதியிலும் ஓர் உழவர் சந்தை அமைக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

'உழவர் உலகத்தார்க்கு ஆணி' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும், உழவும் உழவர்களும் பாராட்டப்பட்டாலும் அவர்கள் உயர்ந்தவர்களாகப் பாராட்டப்படவில்லை. எத்துறையிலும் முத்திரை பதிக்கும் நீங்கள்தான், தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களின் கருத்துகளைக் கேட்டு நிதிநிலை அறிக்கை தயாரித்துள்ளீர்கள்.



முற்பகல் 11-40

திருச்சிராப்பள்ளி நகரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் மீண்டும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு குடமுருட்டி ஆறு காவிரியுடன் கலக்குமிடத்தில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு, குடமுருட்டி, அரியாறு மற்றும் கோரையாறு, கொடிக்கால் வடிகால் ஆகியவை அகலப்படுத்தப்படும், உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரைகள் பலப்படுத்தப்படும் என்று அறிவித்து, வெள்ளத் தடுப்புத் திட்டத்திற்கு ரூ.50 கோடி ஒதுக்கியுள்ளமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த குடிகளின் மொழி தமிழ் மொழி. உலகத்தின் மூத்த மொழிகளில் முதல் தாய்மொழி தமிழ். அந்தத் தமிழ் மொழி மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் முழங்கியது 'வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற உங்கள் உறுதியைக் காட்டுகிறது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நாட்டில் 'சங்கப் பலகை' தோற்றுவித்து, மைய அரசால் வழங்கப்படும் 'ஞானபீட' விருதிற்கு இணையாக 'குறள் பீட விருது' வழங்கப்படும் என்று அறிவித்து முதல்கட்டமாக ரூ.20 இலட்சமும் ஒதுக்கியுள்ளீர்கள். தமிழாய்ந்த தமிழனாகிய தாங்கள் தமிழ்ச் சங்கப் பலகையின் குறள் பீடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளதைத் தமிழ் கூறும் நல்லுலகமே பாராட்டுகிறது.

பெண் கல்வி வளர வேண்டும் என்று பலர் சொல்லலாம். அதை நிறைவேற்றும் தலைவர் நீங்கள்தான் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலும் நிரூபித்திருக்கிறீர்கள்.

பெண் கல்வியும் வளர வேண்டும், அதே நேரத்தில் கல்வியில் பாதியிலேயே விட்டுச் செல்கிற நிலைமையும் மாற்ற வேண்டும் என்று எண்ணி 5 ஆம் வகுப்புவரை படிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 60,000 மாணவிகளுக்கு ஒரு வருடத்திற்கு தலா ரூ. 500 என்றும், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் 30,000 மாணவிகளுக்கு மாதம் தலா ரூ.100 எனவும் வழங்க அறிவித்திருப்பது இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக அறிவித்து, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழ வைத்திருப்பது—பாராட்டிற்குரியதாகும்.

வரும் நிதியாண்டில், 60 வயது அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கி வந்த காப்பீட்டுத் தொகையை, ரூ.40,000-த்திலிருந்து ரூ.50,000-ஆக உயர்த்தியமைக்கும்,

60 வயதைத் தாண்டிய நெசவாளர்களுக்கு வழங்கிய மாத ஓய்வூதியத் தொகை ரூ. 150 என்பதை ரூ. 200 ஆக உயர்த்தியமைக்கும் என் தொகுதியில் வாழ்கின்ற நெசவாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஆலந்தூர் மாடல்" நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றிட எத்தனை நகராட்சிகள், பேரூராட்சிகள், முன் வந்தாலும் அங்கெல்லாம் பாதாளச் சாக்கடை வசதி செய்து தர தமிழக அரசு முன்வரும் என்ற அறிவிப்பை முழுமனதோடு வரவேற்று இந்த வசதியை திருச்சிராப்பள்ளி போன்ற மாநகராட்சிகளுக்கும் வழங்கிட வேண்டுமென்ற என் வேண்டுகோளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அளவில் உள்ள வருமுன் காப்போம் என்ற திட்டத்தினை மாநகரப் பகுதிகளிலும் தொடங்க வேண்டும் என்று முதல்வர் அவர்களை வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை நன்கு உணர்வேன் என்பதை என் தொகுதி மக்களுக்கும், அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, இங்கே அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீதும், அந்த நிதிநிலை அறிக்கையை அளித்து முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பட்ஜெட் உரையின் மீதும் ஒருசில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக அள்ளித் தெளித்த சில அறிவிப்புகளும், தமிழ் ஆய்ந்த தமிழனின் நல்ல அற்புதத் தமிழ் நடையும், வழக்கம்போல திருக்குறளும் கொண்ட இந்த பட்ஜெட், ஒரு நகாசு பட்ஜெட்டாக இருக்கிறதே தவிர, மாநிலத்தின் எரிகிற பிரச்சினைகளை, அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வை வழங்குவதற்குரிய தன்னுடைய பொறுப்பைச் செய்யவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படியொரு நிலை ஏற்படுவதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டின் எரிகிற பிரச்சினைகளைப் பார்ப்பதற்குரிய நிலையில் இந்த மாநிலத்தை ஆளுகிற கட்சி இல்லையா, அதை வழி நடத்துகிற முதலமைச்சரிடம் அந்தத் திறமை இல்லையா என்று கேட்டால், இவற்றையெல்லாம் பார்க்கிற, இவற்றிற்கு, பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கிற தகுதியும், திறமையும் உள்ள



முதலமைச்சர்தான் என்றாலும், இந்த மாநிலத்தை ஆளுகிற கட்சி, வழி தவறிய சிந்தனைகளால் வழி நடத்தப்படுகிற காரணத்தால் மாநிலத்தின் எரிகிற பிரச்சினைக்கு வழிகாட்ட வேண்டிய கடமைப் பொறுப்பிலேயிருந்து அது தடம் புரண்டுவிட்டது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, தொலைக்காட்சியின் வண்ண ஒளிக்கற்றைகளில் இங்கே முன்வைக்கப்பட்ட பட்ஜெட் தமிழ்நாட்டின் இருண்ட சில பிரச்சினைகளைப் பார்க்கத் தவறிவிட்டது. அந்த இருண்ட பிரச்சினைகளின்பால் விவாதத்தை மடை மாற்றித் திருப்பிவிட வேண்டும் என்பதற்காகவே நான் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 11-45

முதலில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள், விவசாயிகள் பிரச்சினை பற்றி. விவசாயம் என்பது ஒரு கட்டுப்படியற்ற தொழில். எனவே, அவர்களால் வாங்கிய கடனைக் கட்டுவதற்குரிய வழியில்லை என்று நான் அல்ல, எங்களைக் காட்டிலும் மிகச் சிறப்பான முறையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, விவசாயிகளின் துயரங்களை மிக அற்புதமாக, அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயம் என்பது ஒரு கட்டுப்படியற்ற தொழில். விவசாயம் கட்டுப்படியற்றிருக்கிற காரணத்தால் அவர்களால் வாங்கிய கடனைக் கட்ட இயலவில்லை; கட்டமாட்டோம் என்று விவசாயிகள் சொல்லவில்லை. அவர்களால் கட்ட இயலாத ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவர்கள் வாங்கிய கடனையும், வட்டியையும் இரத்து செய்ய வேண்டும் என்கின்ற ஒரு நியாயமான கோரிக்கையை பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, நானும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, மத்திய அரசு சமீபத்திலே அறிவித்திருக்கின்ற பொருளாதார survey ஒரு அபாயகரமான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. இந்தியாவினுடைய உணவு உற்பத்தியில் 40 இலட்சம் டன் குறைந்திருக்கிறது. 40 இலட்சம் டன் உணவு உற்பத்தி குறைந்திருப்பது என்பது ஒரு அசாதாரணமான சம்பவம். அதற்குக் காரணம் என்னவென்றால் மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்கிற உலகமயம், தாராளமயம், தனியார்மயக் கொள்கைகளின் நேரடி தீய விளைவுகள்தான் விவசாயத்தை இப்போது பாதித்திருக்கிறது.

இங்கே தமிழகத்தினுடைய பட்ஜெட்டை அளித்து உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள்கூட மிகுந்த பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டிலே உணவு உற்பத்தி அதிகரிப்பது குறித்து 94 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தியாக இருந்தது இன்று 103 இலட்சம் டன்களாக

உயரும் என்று பெருமைப்படுகிறார். அப்படிப் பெருமைப்பட்டுக்கொள்வதில் பொருள் ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இயல்பாக இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தி எந்த எல்லையைத் தொட்டிருக்க வேண்டுமோ அந்த எல்லையைத் தொடவில்லை என்பது அந்தப் பெருமிதத்தால் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு காரணம் இன்றைய பொருளாதாரக் கொள்கைதான். இந்தப் பொருளாதாரக் கொள்கைதான் இத்தகைய நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது, குதிரை குப்புறத் தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்தது என்று சொல்வார்கள். அதுபோல இப்போது மத்திய அரசாங்கத்தின் கொள்கைகள் மூலம் எப்படி இந்திய நாடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல தமிழ்நாட்டு விவசாயிகளின் அடிப்படைப் பொருளாதாரமும் தகர்ந்திருக்கிறது. விவசாய உற்பத்தி எதிர்காலத்தில் மேலும் கடுமையாக பாதிக்கும். இந்த அபாயத்தை எதிர்காலத்தில் நம்முடைய தமிழ் மாநிலம் சந்திக்க இருக்கிறது என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

யூரியா விலை உயர்த்தப்பட்டுவிட்டது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியில்லை என்பது ஒரு விஷயம். அவர்களுடைய இடுபொருட்கள் முழுவதும் விலை ஏற்றப்பட்டுவிடுகிறது. நடைமுறையில் என்ன பொருள் என்றால் இந்திய விவசாயிகள் விவசாயத்தைச் செய்ய முடியாதவாறு ஒரு நெருக்கடியை இந்திய அரசாங்கமே செய்ய வேண்டுமென்று WTO நிர்பந்திக்கிறது. World Bank நிர்பந்திக்கிறது. அந்த நிர்பந்தத்திற்கு அடிபணிந்து இந்திய விவசாயத்தைத் தகர்க்கிற வேலையை, இந்திய விவசாயப் பொருளாதாரத்தைத் தகர்க்கின்ற வேலையை மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றன. இதனுடைய தீய விளைவுகள் விரைவில் நம்முடைய மாநிலத்தையும் பாதிக்க இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து பார்த்தீர்களானால் கைத்தறி பிரச்சினை. ஏன் கைத்தறித் துறையில் இந்த மாநில அரசு மௌனம் சாதிக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்த மாநில அரசு மத்திய அரசைக் கை காட்டிவிட்டுத் தப்பிக்கவே முடியாது. ஏனென்றால் மத்தியில் நாடாளுகிற கட்சியின் ஆட்சிதான் இந்த ஆட்சியும். திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுகின்ற கட்சிகளில் ஒன்றுதான். எனவே, பிரச்சினைகளில் நழுவிப் போகமுடியாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு இந்த மாநிலத்தை ஆளுகின்ற கட்சிக்கு உண்டு. சத்தியம் குழு என்ன பரிந்துரை கொடுத்திருக்கிறது? சத்தியம் குழு பரிந்துரையின்படி கைத்தறி ஒழிக்கப்பட்டுவிடும். சத்தியம் குழு பரிந்துரையின்படி கைத்தறியாளர்களுக்கு



வழங்கப்படுகிற சலுகைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிடும். காலப்போக்கில் கைத்தறி....

[(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,....

**திரு. கே. சுப்பராயன்:** நான் இந்தக் குறுக்கீட்டிற்கு இரையாக விரும்பவில்லை. எனக்கு நேரமில்லாமல் போய்விடும். அமைச்சர் அவர்கள் பதிலளிக்க விரும்பினால் பிறகு அளிக்கட்டும். எனக்கு அதிகமாக நேரம் கொடுப்பதாக இருந்தால் குறுக்கீட்டை நான் அனுமதிக்கிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** எல்லோருக்கும் 10 நிமிடங்கள்தான், அதேபோல உங்களுக்கும் 10 நிமிடங்கள்தான். இரண்டாவது, அமைச்சர் விளக்கம் சொல்கிற நேரத்திலே சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** சத்தியம் குழு பரிந்துரை கைத்தறி....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது அவர்களைப் பேச அனுமதித்துவிட்டு, பின்பு என்னை மணியடித்து உட்கார வைத்துவிடுவீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** தயவுசெய்து மன்னிக்க வேண்டும். குறுக்கீடு அல்ல. சத்தியம் குழுவைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்கள் பற்றிய Reservation Policy-யை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை; மாநில அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. சத்தியம் குழு வேண்டுமானால் பரிந்துரை செய்திருக்கிறதேயொழிய மாநில அரசோ, மத்திய அரசோ அதை முற்றிலும் ஏற்கமுடியாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் கொடுத்த இதேமாதிரி விளக்கங்கள் பலவற்றை மத்திய அரசாங்கத்தினுடைய மந்திரிமார்கள் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள்.

டீசல் விலை உயர்த்தப்பட்டவுடன், டீசல் விலை ஏன் தேர்தலுக்கு முன்னரேயே உயர்த்தப்படவில்லை என்று இந்திய அரசாங்கத்தினுடைய நிதியமைச்சர் யஷ்வந் சின்ஹாவை பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். அப்போது அந்த சத்தியசீலர் யஷ்வந் சின்ஹா என்ன சொன்னார் தெரியுமா? 'சத்தியமேவ ஜெயதே' என்று முழக்கமிடுகிற மத்திய அரசு தேர்தலுக்கு முன்னரேயே டீசல் விலையை உயர்த்தியிருந்தால் நாட்டுமக்கள் எங்களுக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள். எனவேதான் தேர்தலுக்குப் பின்னர் உயர்த்தினோம் என்று சொல்லியிருக்கிறார். எனவே, இப்போதும் இப்படித்தான் சொல்லக்கூடும். ஆனால், பின்னர் சத்தியம் குழு அறிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள பெரிதும் வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் நான் அறிந்தவரை எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களாகும். அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் பகிரங்கமாக மத்திய அரசு அறிவித்துவிட வேண்டும். அப்படியொரு பகிரங்க அறிவிப்பை மத்திய அரசின் ஜவுளித் துறை இதுவரையிலும் அறிவிக்கவில்லை. எனவே, சத்தியம் குழு அறிக்கை நிராகரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவிக்குமா? அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்தியம் குழுவினுடைய அறிக்கை மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுப்படையாக, கைத்தறி நெசவாளர்கள் பற்றிய பிரச்சினையில் reservation என்பது ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். அதை நீக்கமுடியாது என்ற அறிவிப்புதான் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. முழு பரிசீலனையும், சத்தியம் குழுவினுடைய பரிந்துரைக்குப் பின்புதான், நாம் அதைப்பற்றி முழுமையாகச் சொல்ல இயலும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து, ஒரு மிக முக்கியமான பிரச்சினைக்கு நான் வருகிறேன். தமிழ்நாட்டில் இந்த பட்ஜெட்டிலும் சரி, பட்ஜெட் உரையிலும் சரி, கவனிக்காத ஒரு பகுதி சிறுதொழில், குறுந்தொழில் ஆகும். பட்ஜெட்டுக்கு முன்னரேகூட விவசாயிகள் அழைத்துப் பேசப்பட்டிருக்கிறார்கள். வணிகர்கள் அழைத்துப் பேசப்பட்டிருக்கிறார்கள். ஆனால், குறுந்தொழில், சிறுதொழில் அதிபர்கள் அழைத்துப் பேசப்படவில்லை. நான் ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், தமிழ்நாட்டில் 3½ இலட்சம் சிறுதொழில், குறுந்தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பதிவு செய்யப்படாமல் 3½, 4 இலட்சம் Unit-கள் இருக்கும். கிட்டத்தட்ட 6½, 7 இலட்சம் சிறுதொழில், குறுந்தொழில் கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்கிக்கொண்டிருந்தன. இவற்றில் ஒரு



தொழிற்சாலைக்கு 5 பேர் என்று கணக்குப் போட்டால், கிட்டத்தட்ட 3.5 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறுதொழில், குறுந்தொழிலுக்கென்றே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கென்றே ஒரு Board அமைத்து, அதன் கூட்டம் இரண்டுமுறை நடத்தப்பட்டு, அதிலே அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார்களோ, அவற்றிலே பெரும்பான்மையான கோரிக்கைகள் ஏற்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறுதொழில், குறுந்தொழில்கள் வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட சிட்கோ இயங்கிக் கொண்டிருக்கிறதா? அல்லது இறந்துவிட்டதா? தமிழ்நாட்டில் அது இயங்கிக் கொண்டிருக்குமானால் சிறுதொழில், குறுந்தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகள் குறித்து சிட்கோ பரிசீலித்திருக்க வேண்டுமா இல்லையா? இல்லை. ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது கசப்பானதுதான். ஆனால், உண்மையானது. இந்த மாநிலத்தில் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் சிறுதொழில், குறுந்தொழில் வளர்ச்சிக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சிறுதொழில், குறுந்தொழில் வளர்ச்சி குறித்து எந்தவொரு தொழிற்பேட்டையும் உருவாக்கப்படவில்லை. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் இராமநாதபுரத்தில், பரமக்குடியில், இராஜபாளையத்தில், கரூரில் உருவாக்கப்பட்ட சிட்கோ தொழில் கூடங்களில்கூட தொழில் முனைவோர்கள் தொழிற்கூடங்களைப் பெறுவதற்குக்கூட தயாராக இல்லாத அளவிற்கு நெருக்கடி அந்தத் தொழிலிலே நிலவுகிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை, இப்போதுகூட அறிவிக்கப்பட்டிருக்கிற இறக்குமதி கொள்கை என்பது, சிறுதொழில், குறுந்தொழிலை அழித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலத்தில், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட சில சலுகைகள்கூட இந்த ஆட்சியில் கைவிடப்பட்டுவிட்டன என்பதுதான் வருந்தத்தக்க உண்மையாகும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகாலத்திலே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் சிறுதொழில்கள் தொடங்கப்பட்டன. கடந்த காலத்திலே, அதாவது 1991-லேயிருந்து 1996 வரை ஆங்காங்கே கேட்பாரற்றுக் கிடக்கின்ற இடங்களிலேயெல்லாம் அரசாங்கத்தினுடைய பணத்தை வீண்விரயமாக்கி தொழிற்கூடங்களை அமைத்த ஒரே காரணத்தினாலே அவை இப்போது

பல இடங்களிலே விற்பனையாகாமல் இருக்கின்றன. 400 தொழிற்கூடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நடவடிக்கை எடுத்து இப்போது அவை இலாபத்தில் இருக்கின்றன. பல்வேறு வகைகளில் இப்போது தொழிற்கூடங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. நடவடிக்கைகள் எடுத்ததற்கான ஆதாரங்களை நான் தரத் தயாராக இருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, விற்காத இடங்களில் எங்கும் தொழிற்கூடங்கள் கட்டவில்லை. இப்போது தேவையான 17 இடங்களில் அதற்குரிய நிலங்கள் எடுக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு, தொழிற்கூடங்கள் கட்டுகின்ற பணி தொடங்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 11-55

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் எழுப்பிய விஷயத்திற்கு சம்பந்தம் இல்லாத பதிலைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் கேட்க விரும்புவது, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட திட்டத்தை நீங்கள் கைவிட்டிருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு என்ன காரணம்? இதே சென்னையை அடுத்த ஆவடிக்கு அருகில் உள்ள திருமுல்லைவாயிலில் 1,000 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட, ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில் முடிவு செய்யப்பட்ட தொழிற்பேட்டை ஏன் கைவிடப்பட்டது? சென்னையை அடுத்த வேளச்சேரியில்.....

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 1,000 ஏக்கர் என்று அறிவிக்கப்பட்டது, பத்திரிகையில்தான் செய்தியாக வந்தது. பெண்கள் தொழில் செய்ய, தொழிற்கூடம் அமைப்பதற்காக 1,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியதாக பத்திரிகைகளில்தான் விளம்பரம் வந்தது, எடுத்திருக்கிறார்கள் என்று செய்தி வந்தது,. ஆனால் ஒரு செண்ட் நிலம் கூட கையகப்படுத்தப்படவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறிவித்திருக்கின்றார்கள் என்றால், அந்த அறிவிப்பை முழு வடிவத்தில் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை இந்த மாநில ஆட்சி எடுத்திருக்கலாம். அதேபோல, சென்னையை அடுத்த வேளச்சேரியில், 50 ஏக்கர் நிலம், அதில் பெண்களுக்கான தொழிற்பேட்டை அமைப்பது என்ற அந்த முடிவும் கைவிடப்பட்டிருக்கிறது. இப்படிப் பல விஷயங்கள் அவர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்ட சில விஷயங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன.



இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறுதொழில், குறுந்தொழிலுக்கு, ஜெயலலிதா அவர்களின் காலத்தில் வழங்கப்பட்ட சலுகைகள் இந்த ஆட்சியில் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதனால் இந்த மாநிலத்தின் பொருளாதாரம் பாதிப்புக்கு ஆளாகாதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்ன அறிவிப்புகள்? அவர்கள் என்ன சலுகைகள் அறிவித்தார்கள் என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** விளக்குகிறேன். மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தென் மாநிலங்களிலேயே கேரளத்தில், ஆந்திரத்தில், கர்நாடகாவில் கொடுக்கப்படுகின்ற சலுகைகள், தமிழ்நாட்டில் நிதித் துறையின் 75 ஆம் எண் அரசு ஆணையின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது. என்னவென்றால், குறிப்பிட்ட சில இனங்கள், சிறு, குறு தொழில்கள் மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேமாதிரி, சில குறிப்பிட்ட பொருட்கள், சிறு தொழிலில்தான் purchase செய்ய வேண்டுமென்ற ஒதுக்கீடும், முன்னுரிமையும் இருந்தது. அதேபோல், சிறுதொழில், குறுந்தொழிலில் விலைச் சலுகையும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகைகளையெல்லாம் நீங்கள் இரத்துச் செய்தீர்களா இல்லையா என்று நேரடியாக அமைச்சரைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரசு, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இத்தகைய சிறு தொழில்களுக்காக வழங்கப்பட்ட purchase preference அதாவது வாங்குவதற்கான ஒதுக்கீடு SSI-ல்தான் வாங்கவேண்டும்; தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிறுதொழில் கூடங்களில்தான் வாங்கவேண்டும் என்று அரசாணை 75-ல் இருந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் பல தவறுகள் நடந்திருக்கின்றன. பல கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய இழப்பைத் தவிர்க்கவேண்டும். உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்றால், மின்துறையை எடுத்துக்கொண்டால், conductors வாங்குவதில், முந்தைய ஆட்சிக் காலத்தில், SSI-ல்தான் வாங்க வேண்டுமென்று சொன்னாலும், அதிக விலைக்குத்தான் வாங்கப்பட்டிருக்கின்றன. இது ஒன்று. அதேபோல, போக்குவரத்துத் துறைக்கு வாங்கப்பட்ட உதிரி பாகங்கள், மிக அதிக

விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றன. இதனால் எல்லாம் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இது. 50 சதவீதம் கண்டிப்பாக வாங்கியாக வேண்டும். முழுமையாக எடுக்கவில்லை. நிச்சயமாக இந்த அரசு முழுமையாக எடுக்கவில்லை. போட்டி போட வேண்டும். குறைந்த விலைப்புள்ளியை யார் quote செய்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். யார் வேண்டுமானாலும் போட்டி போட்டு வரலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மூட்டைப் பூச்சியை ஒழிக்கச் சொன்னால், வீட்டையே கொளுத்தச் சொல்கிறார் அமைச்சர் அவர்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, ஊழல் இருந்தால் ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுங்கள். ஊழல் புரிந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுங்கள்..

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு, சிறு விளக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கின்றேன். நம்முடைய சிறுதொழில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டது, மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை போன்ற துறைகளில், சிறு தொழில்கள் என்ற பெயரால், அவர்கள் சில சலுகைகளை அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். அதனுடைய விளைவு, மின்சார இலாகாவும் பாதிக்கப்பட்டது. அதைப்போலவே போக்குவரத்துத் துறையும் பாதிக்கப்பட்டது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். conductors-ஐ வாங்க வேண்டுமென்று சொன்னால், வெளியார், வெளி மாநிலத்தில் இருக்கக்கூடிய இதே சிறுதொழில் அதிபர்கள் 60 கோடி ரூபாய் conductors-ஐ 50 கோடி ரூபாய்க்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் சிறுதொழில்கள் என்று வைத்துக்கொண்டு நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய சிறுதொழில் அதிபர்கள் 60 கோடி ரூபாய் மட்டுமல்ல, அதற்கு மேலும் 15 சதவிகிதம் கூடுதலாகக் கேட்கிறார்கள். இந்த நிலையிலேதான் அவர்கள் வெளி market-லே இருக்கக்கூடிய அந்த விலையோடு போட்டி போட வேண்டும். அதேநேரத்திலே குறைந்தபட்சம் 50 சதவிகிதம் சிறுதொழில் முதலீட்டாளர்கள் இங்கே supply செய்யலாம். ஆனால், அதேநேரத்திலே, அந்த விலையைப் பொறுத்தவரையிலே அது competitive price-ஆக இருக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

நண்பகல் *12-00*



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுப்பராயன், நேரம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாற்றுத் தலைவரவர்களே, ஒரு clarification...

**திரு. கே. சுப்பராயன்:** நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இதே அவையில் எங்களுக்கு அடுத்த கட்சிகளுக்கு அரை மணி நேரத்திற்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் பேசத் தொடங்கியவுடன் தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். பேச வேண்டாம் என்றால் நாங்கள் நிறுத்தி விடுகிறோம். பேசாமலேயே ஒரு வரியில் முடித்துக்கொள்ளலாம். ஆனால் பேசுவதற்கு உரிய நேரம் வேண்டும். நாங்கள் ஒன்றும் அதிகப்பிரசங்கித்தனமாகவோ அல்லது அவசியமற்றோ நேரத்தை எடுத்துக்கொள்பவர்கள் அல்ல. பேச வேண்டாம் என்று நீங்கள் தொடக்கத்திலேயே சொல்லியிருந்தால் நாங்கள் பேசாமல் விட்டிருப்போம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** குறுக்கீடுகளை எல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** இது ஒரு வகையான mental torture. இது தேவையில்லாத வேலை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதிலே அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் உறுதிபட குற்றஞ்சாட்டுகிறேன். இந்த மாநில ஆட்சியின் கொள்கையால் சிறு தொழில், குறுந்தொழில் அழிந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 7 இலட்சம் சிறுதொழில், குறுந்தொழில்கள் இருக்கின்றன. ஒரு தொழிலுக்கு 5 பேர் என்றால், 35, இலட்சம் பேர் சம்பந்தப்பட்ட விஷயமாகும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** ஒரேயொரு விளக்கத்தைக் கொடுத்து விடுகிறேன், எப்படி அழிந்தது என்று. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு சிறிய விளக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறுதொழில் அழிந்துபோய்விட்டது, கடந்த ஆட்சிக் காலத்தைவிட, இந்த ஆட்சிக் காலத்தில் என்று சொல்கிறார். 1992-93-ல், கடந்த ஆட்சிக் காலத்தில் ஓர் ஆண்டுக்குக் கொடுக்கப்பட்ட மூலதன

மானியம் மொத்தமே 800 இலட்சம் ரூபாய்தான். இப்போது கழக அரசு, தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் 1996-97-ல் கொடுக்கப்பட்ட மானியம் கிட்டத்தட்ட 1,638 நிறுவனங்களுக்கு ரூ. 2,550 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) 800 இலட்சம் ரூபாய் எங்கே? இந்த ஆட்சியில் ரூ.2,550 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1997-98-க்கு ரூ. 2,303 இலட்சம்; 1998-99-க்கு ரூ. 2,003 இலட்சம். இதுதான் அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம் — 800 இலட்சம்தான் — 1992-93 - ரூ. 800 இலட்சம்; 1993-94 - ரூ. 900 இலட்சம்; 1994-95 - ரூ.700 இலட்சம்; 1995-96 - ரூ. 1,100 இலட்சம். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், ரூ. 2,500 இலட்சத்தைத் தாண்டியிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவரவர்களே, இந்தப் புள்ளிகள் எல்லாம் வாழ்க்கைக்கு உதவாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (சிரிப்பு) இப்போதும் சொல்கிறேன், எப்போதும் சொல்கிறேன். இந்த அரசு தன் நிலையில் உறுதியாக இருக்குமானால் இந்த மாநிலத்தின் சிறு தொழில், குறுந்தொழில் குறித்து ஒரு white paper-ஐ இந்த அவையிலே place செய்து விவாதிக்கத் தயாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படி விவாதம் நடத்தப்படுமானால், Treasury Benches-லிருந்து சிரித்த சிரிப்பு பொருளற்றது, பொறுப்பற்றது என்பதை நான் நிரூபிக்கத் தயார். நமது மாநில அரசு தயாரா? white paper place பண்ணத் தயாரா? வெள்ளை அறிக்கை place பண்ணவே முடியாத அளவிற்கு, தொழில் நெருக்கடியில் சிக்கிச் செத்துக் கொண்டிருக்கிறது.

இன்னும் தெளிவாகச் சொல்கிறேன், இரண்டொரு வருடங்களில் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பற்ற கூட்டம் என்று இந்தச் சிறுதொழில் குறுந்தொழில் மூடப்படுகின்ற காரணத்தால் இலட்சக்கணக்கானவர்கள் தெருவிலே தள்ளப்பட இருக்கின்றார்கள். W.T.O.-வினுடைய தொடர் நிர்ப்பந்தத்தால், புதிய பொருளாதாரக் கொள்கையின் நிர்ப்பந்தத்தால் நடக்கப் போகிறது என்பதை மட்டும் நான் இந்தச் சிறுதொழில், குறுந்தொழில் விஷயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒரு வெள்ளை அறிக்கை place செய்கிறபோது அதனுடைய முழு விஷயம் தெரிய வரும். ஆந்திராவில் என்ன சலுகை? நூற்றுக்கு நூறு சதம் கொள்முதல் சலுகை. வணிகவரி வேறு மாநிலத்திற்குப் போகக்கூடாது என்று ஆணை போட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிராவில் என்ன நிலை? 85 சதவிகிதம் சிறுதொழில், குறுந்தொழில்களிலேதான் அரசு கூட்டுறவு, இன்னபிற தொழில்கள் தங்கள் தேவைக்கு வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கர்நாடகாவிலே நிலைமை அதுதான், கேரளாவிலே நிலைமை அதுதான். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சுதேசி கப்பல் ஓட்டினார் விதேசிக்கு எதிராக. ஆனால், தமிழ்நாட்டில் விதேசிகள் வளர்வதற்காக சுதேசி ஒடுக்கப்படுகிறது. ஹூண்டாய் கம்பெனி வளர்கிறது, ஃபோர்டு கம்பெனி செழிக்கிறது; ஆனால், இதே சென்னை மண்ணில் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி செத்துக் கொண்டிருக்கிறது. சொந்தக் கம்பெனி செத்து அழிந்துவிட்டது.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, purchase policy குறித்து, ரங்கநாதன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்கள். கடந்த காலங்களிலே நடைபெற்ற ஊழலைத் தடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சுப்பராயன் அவர்கள் சொன்னார். ஆனால் ஊழலுக்குக் காரணமாக இருக்கிற சட்டத்தை அகற்ற வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த முயற்சியை எடுத்தார்கள். இது எல்லோருக்கும் ஒரு monopoly மாதிரி, சிறுதொழில் செய்கின்றவர்கள் எல்லாம் வாங்கலாம் என்று சொன்னவுடன் இங்கே இருக்கிறவர்கள் பூராவும் ஒரு lobby அமைத்துக்கொண்டு கடந்தகால ஊழலுக்கு வித்திட்டவர்களே அவர்கள்தான். தொழிலே இல்லாமல், எதுவுமே இல்லாமல் இதே போக்குவரத்துக் கழகங்களில் பலர் சிறுதொழில் என்ற பெயரில் வைத்து இருந்தார்கள். அவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

*பிற்பகல் 12-05*

Open tender என்று சொல்கிறோம். திறந்தவெளிக் கொள்கை என்று சொல்கிறோம். அதையும் நாம் வரவேற்கிறோம். இதை எப்படி மறுக்க முடியும்? திறந்தவெளிக் கொள்கை என்ற காரணத்தால், இந்தியா முழுவதும் அதிலே tender வரவேற்கப்பட்டு, குறைந்த விலையில் மற்ற மாநிலத்துக்காரர் சொன்னால் அதே விலைக்கு அவர் கொடுக்கிறபோது, தமிழகத்தில் இருக்கிற சிறுதொழில் ஏன் கொடுக்கக் கூடாது? அப்படி அந்த விலைக்குக் கொடுப்பவரிடமிருந்து 50 சதவீதம் பெற்றுக் கொள்வதற்கும் முதலமைச்சர் அவர்கள் வழிவகுத்துதான் இந்த சிறுதொழில் வளர்ப்புக்கு வழிவகை செய்திருக்கிறாரே தவிர, முழுவதுமாக வாங்க வேண்டுமென்று சொல்கிறபோது இங்கிருக்கிற சிறுதொழில் செய்பவர்கள் ஒரு lobby வைத்துக்கொண்டு, அரசியல் தலைவர்களெல்லாம் கொள்ளையடித்தார்கள் என்பதை சுப்பராயன் அவர்கள் மறுக்கிறாரா? அதற்கு மின்வாரியத்திலும், போக்குவரத்துத் துறையிலும் இருந்து எவ்வளவு ஆதாரங்கள் வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். பலபேர் செய்திருக்கிறார்கள். சிலபேர் உண்மையாக நடந்திருக்கலாம்.

இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் சிறுதொழில் வளர்ச்சி என்ற பெயரில் அரசாங்கத்தின் ஊழலுக்குக் காரணமாக இருந்ததைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் open tender திறந்தவெளி ஒப்பந்தத்தில் அந்த மாநிலங்கள் கோரவேண்டுமென்ற உணர்வோடு செய்ததுதான், இந்தத் திருத்தமே தவிர, இதனால் சிறுதொழில் நசிந்துவிட்டது என்பது பொய்யான வாதம். உண்மையிலேயே சிறுதொழில் வளர்ச்சிக்கு இது வித்திட்டு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார் செத்துப் போனதற்கு, அந்தத் தொழில் நலிந்து போனதற்கு தி.மு.க. அரசும், கலைஞரும் காரணம்? அது நல்லபடியாக நடப்பதற்கு நிதியுதவி செய்தார். அது நலிந்துபோனதற்கு அதனுடைய தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் உங்களோடு சேரவிருக்கின்ற தா. பாண்டியன் உட்பட ஒப்புக்கொண்டு High Court liquidation-க்குப் போய்விட்டது. இதுபற்றி பகிரங்கமான விசாரணைக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முழுமையாகத் தெரிந்துகொண்டு சொல்வது நல்லது. அவசரத்தில் சொல்லக்கூடாது. நான் என்ன சொன்னேன் என்பதை முழுமையாக வாங்கிக்கொண்டு பதில் அளிப்பது நல்லது. வாங்காமல் பதில் அளிப்பது நல்லதல்ல. நான் என்ன குறிப்பிட்டேன் என்றால், தமிழ்நாட்டில் நம்முடைய சொந்தத் தொழில் அழிந்து, வேறு தொழில்கள் செழிப்பது பெருமைப்படுவதற்குரியதல்ல என்று குறிப்பிட்டேனே தவிர, திராவிட முன்னேற்ற கழக ஆட்சிதான் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மூடுவதற்குக் காரணம் என்று நான் எந்த இடத்திலேயும் குறிப்பிடவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம். அது அவசியமும் இல்லை. நான் நிறைவாகக் குறிப்பிட விரும்புவது....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** கோவையில் குண்டு வெடிப்பு நடந்தது. குண்டு வெடிப்புச் சம்பவத்தைப்பற்றி இரண்டே இரண்டு விஷயங்களைமட்டும் சொல்லி, மற்ற விஷயத்திற்குள் போக விரும்பவில்லை. கோகுலகிருஷ்ணன் Commission அறிக்கை மாநில அரசுக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஏறக்குறைய 66 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து பாதிக்கப்ப்ட்டிருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டியிருக்கிறது. கோகுலகிருஷ்ணன் Commission Report அரசிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், பாதிக்கப்பட்டிருக்கின்ற அவர்களுக்கு எப்பொழுது நஷ்டஈடு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை இந்த விவாதத்தின் மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திருப்பூரில் ஒரு இணை நகரம் உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கடந்த முறையும் குறிப்பிட்டிருக்கிறேன். கடந்த முறை திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்ட நிலையில், ஒரு இணை நகரம் அறிவிக்கப்படும் என்பது ஒரு குறிப்பிட்ட அதிகாரியினுடைய சொந்த நலனுக்காக அது பலியிடப்பட்டது. அந்த அதிகாரியின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் அரசாங்கமே முழு பொறுப்பேற்றுக்கொண்டு, வேண்டுகோளை ஏற்று ஒரு புதிய இணை நகரம் அமைக்கப்படும் என்று அறிவித்ததற்காக நான் என்னுடைய முழு மன நிறைவான நன்றியை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில் முன்னரேயே ஒப்புக்கொள்ளப்பட்டு, Real Estate போடுகிற சில சுயநலமிகளின் நிர்ப்பந்தத்திற்கும் சக்திமிக்க செல்வாக்குக்கும் அடிபணிந்த அத்தகைய அதிகாரிகள் எப்படி மக்கள் நலத் திட்டங்களை அரசாங்கத்தினுடைய நோக்கத்திற்கு தக்கபடி நிறைவேற்றுவார்கள்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கு அரசியல் ரீதியாகவும் எதிர்ப்பு இருந்தது என்று நண்பர் சுப்பராயனுக்குத் தெரியும். அந்தக் கட்சியினுடைய பெயரை அவர் இப்பொழுதுள்ள நட்பைக் கருதி சொல்லமாட்டார் என்று கருதுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அதுவும் உண்மைதான். எதிர்ப்பு இருக்கிறது என்றாலும், அத்தகைய நிலைமைகளுக்கு இடையிலேயும், அந்த எதிர்ப்பு பொருளற்றதாகவும், நடைமுறையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகவும் இருந்திருக்கிறது என்பதை மட்டும் சொல்லி, நிறைவாக இந்த இணை நகரம் என்பதை முன்னர் அறிவிக்கப்பட்ட அதே இடத்திலேயே உருவாக்குவதற்கு நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, மூடப்பட்டிருக்கிற ஆலைத் தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் என்பதை நிச்சயமாக 1,000 ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றி மாநில அரசு ஒன்றுமே சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி 50 இலட்சம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது கைவிடப்பட்டுவிட்டதா? பேரவைத் தலைவர் அவர்கள்கூட கடந்த முறை குறிப்பிட்டார்கள். ஒரு கோடி ரூபாயாக அறிவிக்கப்படும் என்று. எனவே ஒரு கோடி ரூபாயாக அறிவிக்கப்படுவதுதான் பொருத்தம். அப்படி அறிவிக்க மாநில அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அடுத்து, திரு. பெ.சு. திருவேங்கடம்.

*பிற்பகல் 12-10*

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரூபாய் 75 கோடிக்கு வரி விலக்கும், புதிய வரிகள் இல்லாத வகையில் தாக்கல் செய்திருக்கிறார்கள். வணிகர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், நல்லவர்கள் எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை நம்முடைய மாநிலத்தினுடைய நிதிக்கேற்ப திறமையான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நல்லோர்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். நானும் இதை வரவேற்று, தமிழக மக்களுக்கு முக்கனியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய உறுப்பினர்கள் இங்கே பேசியவர்கள், இது தேர்தலுக்காக போடப்பட்ட பட்ஜெட் என்று சொன்னார்கள். ஆளும் கட்சியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கேகூட வருத்தம்தான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதுமே தேர்தலை மனதிலே வைத்து அவர்கள் இந்த 13 முறை பட்ஜெட் போட்ட காலத்திலே அவர்கள் அதற்காக போட்டதில்லை. அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல் தமிழகத்தினுடைய அடுத்த தலைமுறையைப்பற்றிச் சிந்திக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஒப்பற்ற தலைவர் என்பதை நான் இந்த நேரத்திலே இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னொன்று சொல்கிறார்கள், இதிலே தொலைநோக்கான திட்டங்கள் இல்லை என்று. நான் இந்த அவையிலே பேசிய உறுப்பினர்களைக் கேட்க விரும்புகிறேன், வேளாண்மைக் கொள்கை வகுக்க அவருடைய தலைமையிலே ஒரு குழு, விவசாயிகள் வாங்கிய கடனுக்கு வட்டித் தள்ளுபடி, உழவர் சந்தையைப் போன்று மீனவர் அங்காடி, மகளிர் நலத் திட்டம், புறம்போக்கு நிலமாக இருந்தால் 10 ஆண்டுகாலம் அனுபவித்திருந்தால் அவர்களுக்கு பட்டா வழங்குகின்ற திட்டம், இட ஒதுக்கீட்டிலே வெள்ளை அறிக்கை, மழைநீர்...

***திரு. லா. சந்தானம்:** Point of clarification. மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் பேசுகின்றபோது விவசாயிகளுக்கு வட்டித் தள்ளுபடி என்று குறிப்பிட்டாரே (குறுக்கீடு) அவர் குறிப்பிட்டது, வட்டித் தள்ளுபடி என்று குறிப்பிட்ட காரணத்தினால், ஒருவேளை அப்படி இருக்கலாமோ என்று நான் நினைத்தேன்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** நன்றி, கூடுதல் வட்டித் தள்ளுபடி. அதேபோன்று, மழைக் காலங்களில்—பெரும்பாலும் தமிழகத்திலே நிலத்தடி நீரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக அந்த நீரைச் சேர்க்கின்ற திட்டம். இந்த ஆண்டு மட்டும் 10 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு. பழங்குடியினருக்கு தனியாக ஒரு இயக்குநர் அலுவலகம். நானே எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்தில், என்னுடைய தொகுதியிலேகூட ஜவ்வாது மலை இருக்கிறது, அவர்கள் எல்லாம் சொல்லி, பல நேரங்களில் இந்த அவையிலேகூட நான் பேசியிருக்கின்றேன், இப்போது, அந்தக் கனவு நினைவாகியிருக்கிறது. அதேபோல, மாணவர்களுக்கு கணினி மையம். இவையெல்லாம் தொலைநோக்கு திட்டங்கள் அல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று, அவர்கள் நான்காவது முறையாக இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களை கொஞ்சம் பின்னோக்கி அழைத்துச் செல்ல விரும்புகிறேன். 1947-லே நாம் சுதந்திரம் பெற்றோம். 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. 1967-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக நம்முடைய மாநிலத்தினுடைய நிலைமையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றையதினம் சாதாரணமாக, ஒரு திருமண நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்று

சொன்னால்கூட, உணவு அளிப்பதற்கு அதிகாரிகளுடைய அனுமதியைப் பெற்று உணவு அளிக்க வேண்டும். தவறி அதிகமாக அழைத்துவிட்டார்கள் என்கிற ஒரு நிலை ஏற்படுமானால், சாப்பிட்ட இலையைக்கூட கணக்கிட்டு நடவடிக்கை எடுத்த காலம் ஒன்று உண்டு. அதேபோல, வாரத்தில் இரண்டு நாட்கள் உணவகத்திலே உணவு தயாரிக்க வேண்டாம் என்று சொன்ன காலம் எல்லாம் உண்டு. அதுமட்டுமல்ல, கிராமங்களிலே இன்றையதினம் விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கிறார்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. வீடு வீடாக, வீதி வீதியாக, வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகள், தாசில்தார்கள், R.D.O.-க்கள் லெவி கொள்முதல் என்கிற பெயராலே விவசாயிகளைக் கொடுமைப்படுத்திய நிலைமையெல்லாம் 1967-க்கு முன்னால் நடைபெறவில்லையா? 1967-ல் அண்ணா அவர்களும், 1969-ல் இன்றைய மாண்புமிகு முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களும் பொறுப்பேற்றார்கள். இந்த மாநிலத்திலே நீர்வளம் இருக்கிறது, நிலவளம் இருக்கிறது, உழைப்பதற்கு நல்ல உழைப்பாளிகள் இருக்கின்றார்கள், ஆனாலும் இன்னும் ஏன் இங்கே உணவுப் பற்றாக்குறை என்று ஒரு தொலைநோக்கோடு அவர்கள் பார்த்தார்கள். பிறகு ஏராளமான பாசனக் கிணறுகள், அதற்கு மின் இணைப்புகள், ஆயில் எஞ்சின்கள், விவசாயிகள் பயிரிடுவதற்கு வேண்டிய கடன்கள், இவை எல்லாம் வழங்கிய காரணத்தாலே ஏறக்குறைய 1970-லேயிருந்து இந்த 2000 ஆண்டு வரையில் இந்த மாநிலம் மிகப் பெரிய அளவுக்கு, உணவே இல்லை என்கிற நிலையை அடையா வண்ணம் காப்பாற்றுகிறது என்று சொன்னால், கலைஞர் 1969-லே போட்ட ஒரு தொலைநோக்குத் திட்டம் அல்லவா என்று நான் கேட்க விரும்புகின்றேன். அதுபோன்று பல்வேறு திட்டங்கள். அன்றைய தினம் ஏற்படுத்தப்பட்ட அந்தப் பசுமைப் புரட்சியினால்தான் இன்றையதினம்கூட மாநிலத்தில் உணவுப் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது.

பிற்பகல் 12-15

அதுமட்டுமல்ல, அவர்கள் முதல்வராக இருந்த அந்த நேரத்தில் பல வடமாநிலங்களிலிருந்து முதல்வர்கள் நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். "ஐயா, எங்களுக்குக் கொஞ்சம் அரிசி தாருங்கள், நெல் தாருங்கள்" என்றார்கள். தந்தார்கள், உபரியாக இருந்த நெல்லை. அப்போது பிரதமராக இருந்த மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் உடனே அதைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. டெல்லியிலே நாம் இருக்கிறோம். சென்னையிலே இருக்கிற ஒரு முதல்வரை வடக்கே இருக்கிற இந்த மாநில முதல்வர்கள் பார்த்து நெல்லோ, அரிசியோ கேட்பதா என்று சொல்லி, அன்றையதினம் அந்தச் சட்டத்தையேகூட மாற்றியமைத்தார்கள். இவையெல்லாம் ஒரு காலத்திலே நடைபெற்றன.



அதுபோல் கலைஞர் அவர்கள் எந்தக் காலத்திலுமே தொலைநோக்குடன் தான் தமிழக மக்களுடைய வாழ்வுக்குச் சாதகமான பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். அதுபோன்று அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் குடிநீர் வடிகால் வாரியம் கொண்டு வந்தார்கள். அது தொலைநோக்குத் திட்டம் அல்லவா? குடிசைமாற்று வாரியம், அதேபோல ஏரிகள், கால்வாய்களைத் தூர் எடுக்கின்ற பணிகள் தொகுப்பு வீடுகள், அது அவர் காலத்திலேதான் கொண்டு வரப்பட்டது. பிறகு வேண்டுமானால் அது இந்திரா குடியிருப்பு என்று மாற்றப்பட்டு இருக்கலாம்; பெயர் வைக்கப்பட்டிருக்கலாம். அதேபோல ஏராளமான பாலங்கள், அணைகள், அதுபோன்று விவசாயிகளுக்கு வேண்டிய பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்கோடு இந்த மாநிலத்திற்கு தமிழகத்திற்குச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகள் பிரச்சினை. இன்றையதினம் மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் அவர்கள்கூட இங்கே பேசினார்கள். எல்லோரும் கரும்புக்கு, டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கோரினார்கள். அதிலே. அரசினுடைய நிலை. திருவண்ணாமலையிலேகூட உழவர் சந்தையைத் திறக்கின்றபோது நம்முடைய முதல்வர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். "நான் என்றுமே விவசாயிகள் பக்கம் இருப்பவன். விவசாயிகளுடைய கஷ்டநஷ்டங்களிலே பங்கு கொண்டவன். இந்தியாவிலேயே மின்சாரத்தை இலவசமாகத் தந்து அவர்களைக் காப்பாற்றியவன் என்று சொன்னார்கள். அதேநேரத்திலே நீங்கள் horse power-ஐ அதிகமாக்க வேண்டுமென்று சொன்னால், 10 ஆயிரம் ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும் என்ற அந்த நிலையைக்கூட மாற்றி நீங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னவர்.

அதேபோல, இப்போது பல்வேறு நிலைகள். ஆனால், எங்களுடைய நோக்கில் விவசாயிகள் ஒரு கண் என்று சொன்னால் ஆலை அதிபர்களை இன்னொரு கண்ணாகத்தான் பாவிக்க வேண்டும். ஆலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன, மூடப்பட்டுவிட்டன என்று இங்கே சொன்னார்கள். அதையும் காப்பாற்ற வேண்டிய மிகப் பெரிய கடமை இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்காகவும், விவசாய மக்களுக்காகவும் அரசுக்கு இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள்கூட ஒன்று சொன்னார்கள். "இந்த அரசாங்கம் விவசாயிகளுடைய அரசாங்கமா அல்லது ஆலை அதிபர்களுடைய அரசாங்கமா? நீங்கள் சொல்லவேண்டும். நீங்கள் விவசாயிகளுடைய

அரசாங்கமாக இருந்தால், கரும்பைப் பூராவும் நீங்கள் கூட்டுறவு ஆலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். ஓர் ஆலை ஆண்டு ஒன்றுக்கு இத்தனை டன் கரும்புதான் அரைக்க முடியும் என்று இருக்கிறது. அது அதனுடைய அரைவைத் திறன். தமிழகத்திலே கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் நடத்துகின்ற ஆலைகள் இருக்கின்றன. அதேபோல தனியார் ஆலைகள் இருக்கின்றன. அவை கரும்பைப் பதிவு செய்து அரைக்கின்றபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழகிரியினுடைய கோரிக்கைப்படி அரசாங்கம் எல்லாக் கரும்பையும் நம்முடைய கூட்டுறவு ஆலைகளுக்கு ஒதுக்கினால் அவர்களால் விவசாயிகளுடைய கரும்பை அரைக்கவே முடியாது. அப்போதும் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளாகத்தான் இருக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளுடைய பிரச்சினை என்பது வேலி மேல் போட்ட வேட்டியினுடைய நிலைமை. அதை மிக ஜாக்கிரதையாக அரசாங்கம் கையாண்டால்தான் அந்த வேட்டி பாதிக்கப்படாமல் விவசாயிகள் பாதிக்கப்படாமல், இருக்க முடியும். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினைகளை கையாளவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது). முடித்துவிடப் போகிறேன்.

விவசாயிகளுக்கு என்னுடைய சிறிய ஆலோசனை. கரும்புக்கு விலையை உயர்த்த முடியுமோ, முடியாதோ - எனக்குத் தெரியாது. ஆனால், ஆலை அதிபர்களானாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களானாலும் சரி, ஒரு விவசாயி இன்று ஏப்ரல் மூன்றாம் தேதி என்று சொன்னால், இன்று கரும்பு தந்தால் ஒரு குறிப்பிட்ட 15 நாட்களோ அல்லது ஒரு மாதத்திற்குள்ளாகவோ அதனுடைய பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். தவறினால், அவர் வங்கியில் வாங்கியிருக்கின்ற அந்த வட்டி அல்லது அபராத வட்டி, இதுபோன்ற அந்த நிலையையும் அந்த ஆலைகள் ஏற்கின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அடுத்து, இன்னொன்று. இங்கே நம்முடைய அ.தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள்; ஏதோ கலைஞர் விவசாயிகளை எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டார்கள்; தடியடி நடத்திவிட்டார்கள் என்று



சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; திருநெல்வேலி மாவட்டத்திலே துப்பாக்கிப் பிரயோகம் செய்தது எந்த ஆட்சியிலே நடைபெற்றது? இரண்டு விவசாயிகள் உயிர் துறந்தார்களே; அது எந்த ஆட்சியில்? அது அ.தி.மு.க. ஆட்சியில் அல்லவா? (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அதேபோன்று நம்முடைய உசிலம்பட்டிப் பகுதியிலே அங்கே கட்டப்பட்டிருந்த விவசாயிகளுடைய கட்டடத்தை புல்டோசர் வைத்து இடித்துத் தள்ளினார்களே, அது எந்த ஆட்சியில்? திருச்சியிலே ஒரு பேரணி. அந்தப் பேரணிக்கு தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் பச்சைத் துண்டு அணிந்து சென்றார்கள். போராட்டம் என்னவோ திருச்சியிலே. ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற எல்லா இரயில் நிலையங்களிலும், எங்கே இரயில் ஏறினாலும், அத்தனை விவசாயிகளையும் போலீசை வைத்து அடித்து நொறுக்கினார்களே அது எந்த ஆட்சியில் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நான் முதலிலே சொல்லியபடி, இது தொலைநோக்குடைய பட்ஜெட்தான். இந்த பட்ஜெட்டை மரியாதைக்குரிய மூப்பனார் அவர்கள் வாழ்த்தினார்கள்; சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பாராட்டினார்கள்; அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் பாராட்டினார்கள்; வை.கோ. அவர்கள் பாராட்டினார்கள்; வாழப்பாடியார் பாராட்டினார். இன்னும் இந்த அவையிலே இருக்கின்ற பா.ஜ.க. உறுப்பினர்கள், பார்வர்டு பிளாக் உறுப்பினர்கள், புதிய தமிழகம் கட்சி உறுப்பினர், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. உறுப்பினர், ஏன் த.மா.கா.-விலே பல பேர், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் — இப்படி எல்லோரும் பாராட்டினார்கள். இன்னும் பாராட்ட வேண்டியவர்கள் யார் இருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் இன்னும் ஒன்றைச் சொல்லி நான் முடித்துவிடுகிறேன்.

இந்த பட்ஜெட்டை பார்த்தபோது சிலர் குறை கூறலாம். நான் படித்த ஒரு கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது. நான்கு பார்வையற்ற சகோதரர்கள் யானையைப் பார்க்கப் போனார்கள். ஒருவர் காலைத் தடவிப் பார்த்தார்; அவர் சொன்னார், அது உருளை போன்று இருக்கிறது என்று. தும்பிக்கையை ஒருவர் தடவிப் பார்த்தார்; அது உலக்கையைப் போன்று இருக்கிறது என்று சொன்னார்: ஒருவர் காதைத் தடவிப் பார்த்தார். அது

முறத்தைப் போன்று இருக்கிறது என்று சொன்னார். ஒருவர் வாலைத் தடவிப் பார்த்தார், அது துடைப்பத்தைப் போன்று இருக்கிறது என்று சொன்னார். இப்படி கருத்துப் பார்வையற்ற சில பேர் இந்த பட்ஜெட்டைப் புரிந்து கொள்ளாமல், ஏதேதோ சொல்லலாம். ஆனால், நல்லவர்கள், பெரியவர்கள், தமிழகத்திலே அரசியல் கட்சியில் உள்ள பெரும்பான்மையோர் பாராட்டி இருக்கிறார்கள். அடுத்த ஆண்டும், 14-வது பட்ஜெட்டையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எதிர்க்கட்சி சார்பிலே வந்து அந்த பட்ஜெட்டை அன்றும் வாழ்த்துங்கள்; வாழ்த்துங்கள் என்று நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த கதையிலே ஒன்றை விட்டுவிட்டார். ஒருவர் தடவிப் பார்த்துவிட்டுச் சென்று, நேற்று வந்த இரவிலே மிச்சம் சொச்சம் இப்போது வந்து இருக்கிறது என்று சொன்னார்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பேச அழைத்த தங்களை உளமாரப் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியவர்கள் 'உள்ளதை வைத்து நல்லதைச் செய்' என்று ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள். நம்முடைய முதல்வர் அதைப் பொன்மொழியாக ஏற்று மிகச் சிறப்பான முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையைக் கொடுத்து இருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் திட்டங்கள் தீட்டுவதிலே, எவரும் தொட முடியாத வான்! ஒவ்வொரு திட்டமும் ஏழையின் நெஞ்சுக்கு இனிக்கும் தேன்! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞரே, முதல்வரே, கலைஞரே, நிகரற்ற உங்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன் நான். இலட்சியம் இல்லாத வாழ்க்கை, ஒளி இல்லாத விளக்கைப் போன்றது. இங்கு எந்தவிதமான இலட்சியமுமே இல்லாமல் கட்சி நடத்தக்கூடிய ஒருசிலர் உடம்பிலே எலும்பு இல்லாமல் வரம்பு மீறிப் பேசுகிறார்கள். நாக்கிலே நரம்பு இல்லாமல், வரம்பு மீறிப்



பேசுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். கடந்த ஆட்சி 5 ஆண்டு காலமாக இந்த நாட்டிலே பட்ஜெட்டை போட்டு கோடி கோடியாக கொள்ளை அடித்து, இன்று நீதிமன்றப் படிக் கட்டிலே அதைச் செலவு செய்யக்கூடிய அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இது மலிவு பட்ஜெட் தான்; மலிவான நிதிநிலை அறிக்கைதான். ஒத்துக்கொள்கிறேன். அவர்களுடைய நிலையைப் பொறுத்தவரைக்கும், இந்தப் புத்தாயிரமாண்டில் நம்முடைய முதல்வர் திராவிட இயக்க வரலாற்றில் வேராகவும் விழுதாகவும் இருக்கக்கூடிய ஒரு மாபெரும் வீர புருஷன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நாடு ஒத்துக்கொள்கிறது. அடித்தட்டு மக்களின் அன்றாட அவல நிலையை உணர்ந்து, உழைக்கக்கூடிய மக்களுடைய பிரச்சினைகளைத் தெரிந்து நம்முடைய முதல்வர் அவர்கள் 13-வது நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால், இந்த நிதிநிலை அறிக்கை, முதல்வரே, என்னைப் பொறுத்தவரையில் சர்க்கரைப் பந்தலிலே தேன் மாரிப் பொழிந்ததை போல (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

இந்த நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பாக உள்ளது. ஏழைகள் உள்ளமெல்லாம் குளிரக்கூடிய வகையில் உள்ளது இந்த நிதிநிலை அறிக்கை. பத்திரிகைகளெல்லாம் ஏகோபித்த பாராட்டு. நாட்டிலே இருக்கக்கூடிய 6 கோடி மக்களும், நல்லவர்கள், வல்லவர்கள், நல்ல இதயம் படைத்தவர்கள், அத்தனை பேர்களும் துணிந்து பாராட்டக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையை பலர் பலவிதமான கோணங்களிலே-அண்ணன் திருவேங்கடம் அவர்கள் சொன்னதுபோல-இங்கே விமர்சித்து உள்ளார்கள். விமர்சியுங்கள். ஆனால், பாட்டாளி வர்க்கத்தினுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லக்கூடிய, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி, எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் உளமார இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்து பாடிய ஒரு பாட்டு என்னுடைய நினைவுக்கு வருகிறது.

"நீங்க நல்லா இருக்கணும், நாடு முன்னேற (மேசையைத் தட்டும் ஒலி)
நாட்டு மக்கள் வாழ்விலே இன்பம் கொழிக்க

என்பது அந்தப் பாட்டு. அதைப்போல

இன்பம் உண்டாக நீங்கள் நல்லா இருக்கணும், முதல்வரே, என்று நான் உளமாரப் பாராட்டுகிறேன். முதல்வர் அவர்கள் 100 ஆண்டு காலம் வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நோய்நொடி இல்லாமல் வாழ வேண்டும். சில மலிவுகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு முதல்வர் அவர்களே, திருவாரூரில்தான் பஞ்சமுக வாத்தியம் என்று 5 முகம் கொண்ட இசைக் கருவி தியாகராஜர் கோயிலிலே உள்ளதாகக் கூறுவார்கள். 5 முகத்தில் அடி வாங்கும்போதும்கூட, தாளம், நாதம், தப்பாமல் இனிமையாக ஒலிக்குமாம். அதுபோல, இங்கு எத்தனை முகங்கள் உங்களைத் தட்டினாலும் முதல்வரே, 5-வது முறையாக ஆட்சிக் கட்டிலிலே, இந்த இடத்திலே அமரப் போவது, முரசொலிக்கப் போவது நீங்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) உறுதி, உறுதி, உறுதி என்று சொல்லி உங்களை வாழ்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே முதல்வரை ஏதோ சொல்ல வேண்டும், எப்படியோ சொல்ல வேண்டும் என்பதற்காக, நான் சட்டமன்றத்திலே ஏற்கெனவே இங்கு கடந்த ஆண்டு பேசியதை என்னுடைய அருமை நண்பர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் முதல்வர் மீது குறை சொல்ல வேண்டுமென்பதற்காக சொன்னார். சேலம் நகரிலே, நகராட்சி வங்கியிலே பல இலட்சம் ஊழல் நடக்கிறது, சொன்னவன் நான், சேலம் மாவட்டம் பூராவும் ஊழலாக இருக்கிறது என்று சொன்னவன் நான். அதை சபாநாயகர் அறையிலே முதல்வர் இடத்திலே சொல்லும்போது, ஐயா, இரண்டு பேர் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கிறார்கள்; ஒருவர் என்னுடைய உறவினர், இன்னொருவர் என்னுடைய கட்சிக்காரர்; இரண்டு பேர்களுக்கும் நீங்கள் அவசியம் போட வேண்டும்; இதில் நீதி கிடைக்காது, நியாயம் கிடைக்காது என்று சொன்னவன் நான். நான் அப்படிச் சொன்னவுடன் முதல்வர் என்னிடத்திலே கேட்டார், 'இருவரிலே யாரையாவது ஒருவரைச் சொல், போட முடியுமா என்று முயற்சி எடுக்கிறேன்' என்று சபாநாயகர் அறையிலே என்னிடம் முதல்வர் கேட்டார். அதையே, எங்கே இவரைப் போடப்போகிறார் என்று அல்ல, என்னுடைய மனதிலே தோன்றுவதை அப்படியே கொட்டுவதுதான் இந்த கணேசனுடைய வேலை. எனக்கு மறைத்து வைத்துப் பேசத் தெரியாது, பழக்கப்படவில்லை. அப்படி என்னை யாரும் வளர்க்கவில்லை. ஆகையாலே இந்த அவையிலே பேசும்போது சேலம் மாவட்டத்தைப் பற்றி முழுமையாகப் பேசிக்கொண்டு வந்ததை இந்த அவை அறியும். அப்போதுதான், நம்முடைய முதல்வர் அவர்கள், லஞ்சம் லஞ்சம் என்று பேசும்போது நம்முடைய முதல்வர் அவர்கள், குறுக்கிட்டுச் சொன்னார்.



கணேசா, 2 சீட்டு கொடுத்தாயே, நான் உன்னிடத்தில் லஞ்சம் கேட்டேனா, தயவுசெய்து சொல் என்று கேட்டார். நான் சொன்னேன் நண்பர்களுக்கு, இதே அவையிலே, பத்திரிகைகள் அனைத்தும் எழுதின கட்டம் கட்டி. முதல்வர் அவர்களே, உங்களைப் பற்றித் தவறாகச் சொன்னால் 'நா அழுகிவிடும்' என்று சொன்னேன். அதைத் திரித்து, அதை அப்படியே அடிக்கக்கூடிய வகையிலே இங்கே பேசியிருக்கிறார்கள். பாவம், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல மறப்போம், மன்னிப்போம்.

பிற்பகல் 12.30

இந்த நிதிநிலை அறிக்கையை தொடங்கி வைத்துப் பேசிய அருமை நண்பர், என் பாசத்திற்குரிய நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் 4-3-1966 ஆண்டிலே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இடத்திலே அண்ணன் சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் அமர்ந்திருக்கும் அதே இடத்திலே முதல்வர் பேசிய பழைய record-களை எடுத்து, அதைப் படித்துக் காட்டினார்கள். அதையேதான் என்னுடைய அருமை அண்ணன் திருவேங்கடம் அவர்கள் சொல்லும்போது சொன்னார், நான் நினைத்தேன் அதைச் சொல்ல வேண்டுமென்று அவர் சொல்லிவிட்டார். இருந்தாலும் ஒன்றே ஒன்றை நான் சொல்கிறேன்.

அன்று அரிசிப் பஞ்சம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளியவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆளக்கூடிய காங்கிரஸ்காரர்களைப் பார்த்து, எங்களுக்கு அரிசி கொடுங்கள் என்று கேட்ட நேரத்திலே, அருமை நண்பர்களே என்ன சொன்னார்கள், ஆணவத்தோடு, இறுமாப்போடு பருத்திக் கொட்டையை சாப்பிடுங்கள், புண்ணாக்கைச் சாப்பிடுங்கள், எலிக் கறியைச் சாப்பிடுங்கள் பன்றியைச் சாப்பிடுங்கள் என்று சொல்லவில்லையா? இது காங்கிரஸ் ஆட்சியினுடைய நிலை அல்லவா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் இந்த அவையில் இல்லாத வார்த்தைகளையெல்லாம் சொல்லி ஒரு கட்சியினுடைய பெயரைக் கெடுக்கின்ற வகையில் பேசிக்கொண்டிருக்கிறார். இதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தீர்ப்பை நீங்கள் சொல்லிவிட்டு, அவர்களைப் பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அவர் பொதுவான கருத்தைத்தான் சொல்கிறார்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காக மட்டும் நான் இடையிட்டு இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறேன். 1965-66 ஆம் ஆண்டுகளில் இருந்தச் சூழ்நிலையில், 1967-ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு சற்று முன்னர் நாட்டிலுள்ள உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க முடியாத நேரத்திலே உணவுப் பஞ்சத்தை நேரிரடியாக உணவைத் தந்து தீர்க்கமுடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டபோது, பசிக்கிற மக்கள் வேறு வழி இல்லாவிட்டால் புண்ணாக்குகூட சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். எலிக் கறிகூடச் சாப்பிடலாம் என்று மத்திய அமைச்சர் ஒருவர் பேசி, நாடெல்லாம் அந்தப் பேச்சு குறித்து record-களில் இருக்கிறது. அவர் பேசியது சாப்பிடுங்கள் என்று கட்டாயப்படுத்தி அல்ல. வேறு வழி இல்லாவிட்டால் எதையாவது தின்று பிழைத்துக் கொள்ளுங்கள் என்று.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. கணேசன் அவர்கள் பேசுகிறபோது, 4-3-1966 ஆம் ஆண்டு இன்றைய முதலமைச்சர் அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்கள் சொன்ன வார்த்தை பற்றி நான் சொன்னேன். அதிலே ஏதாவது மாறுபாடு இருக்கிறதா என்று நீங்கள் சொல்ல வேண்டும். அன்று இந்த தர்மவான் ஆட்சியிலே தண்ணீர் இல்லை என்று சொன்னார். இன்றும் கிருஷ்ணா நதிநீர் வரவில்லை. தண்ணீர்ப் பிரச்சினை சென்னையிலே இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டினேன். அதை மறுக்கிறீர்களா? அல்லது வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்கிறபோது ஏற்கெனவே இருக்கிற வரியெல்லாம் போட்டுத் தீர்த்துவிட்டீர்கள். பிறகு ஒன்றும் போடுவதற்கு இல்லை என்று சொல்கிறபோதுதான் அதைச் சொல்லி நீங்கள் ஏமாற்றுகின்ற ஒரு தந்திரமான பட்ஜெட் என்று சொன்னேன். அதை மறுக்கிறீர்களா? நீங்கள் அதை விட்டுவிட்டு ஏதேதோ subject-க்குப் போய்க்கொண்டு என்னுடைய வார்த்தையிலே நான் பேசியபோது கலைஞர் அவர்கள் பேசியதை....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் பூராவும் சொல்ல முடியாது. நீங்கள் பேசியதை பூராவும் அவர்கள் refer பண்ண முடியாது. ஒரு particular point மட்டும் எடுத்துச் சொன்னார்கள். எனவே, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள், அவ்வளவுதான் சொல்ல முடியும்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் யாருடைய மனமும் புண்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும்போது இதையும் புரட்டிப் பாருங்கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.

அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டம் வந்தபோது மாணவர்கள் பள்ளியிலே இந்தியை நுழையவிடக்கூடாது என்று சொன்ன ஒரே காரணத்திற்காக நடுரோட்டிலே நூற்றுக்கணக்கான மாணவர்களை குருவி, காக்கா சுடுவதுபோல சுட்டுத்தள்ளவில்லையா? இதை நாடு மறந்துவிடுமா? நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தவறான தகவலைச் சொல்கிறார். அந்த நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று சொல்கிறார், ஒரு பெயரையாவது சொல்லுங்கள் பார்க்கலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** டாக்டர் குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்று நிகழ்ச்சி எல்லா record-களிலேயும் இருக்கிறது. இந்த அவையிலும் பேசப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சியில் மட்டும் 250 பேருக்குமேல் சவக் குழிக்குப் போக நேரிட்டது. பொள்ளாச்சியில் ஒரு ஊரில் மட்டும். அந்தப் போராட்டம் நியாயமா அல்லவா என்பதும், கொள்கை மாறுபாடும் வேறு. ஒரு கலவரச் சூழ்நிலை எப்படியோ ஏற்பட்டு கலவரத்தை அடக்குவதற்கு இராணுவமே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. எத்தனை பேர் இறந்தார்கள் என்கிற பட்டியல் எல்லாம், ஏற்கெனவே இருக்கின்ற பட்டியல்தான். புதிதாகச் சொல்லவில்லை. வன்முறை வளர்ந்த சூழ்நிலையில் அப்படி ஏற்பட்டது என்று வேண்டுமானால் நீங்கள் விளக்கம் சொல்லலாமே தவிர, நிகழ்ந்த நிகழ்ச்சியை அடியோடு மறந்துவிட முடியாது. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஐ. கணேசன் பேசுங்கள். குறுக்கீடுகள் தேவையில்லை. (குறுக்கீடு) அவர் பேசலாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி சார்பாக உறுப்பினர் அடுத்துப் பேசுகிறார். அவர் பதில் சொல்லட்டும், நீங்கள் உட்காருங்கள். அவருடைய நேரத்தை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. கணேசன் பேசட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இங்கே எடுத்துச் சொன்னது பழைய வரலாறு தானே ஒழிய இது யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அரிசிப் பஞ்சம் இருந்ததுகூட, 38 ஆண்டுகளுக்குப் பிறகு பக்கத்திலே, இன்றும் காங்கிரஸ் ஆட்சி நடத்தக்கூடிய கர்நாடகத்திலே, இன்றைய அரிசி விலை ரூ.6.40 ஆனால் நம்முடைய முதலமைச்சர்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு .சிடி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஐ. கணேசன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய தாய்மார்களுடைய உள்ளங்கள் எல்லாம் குளிர அவர்களுக்குச் சுமை கொடுக்காமல் ரூ.1,700 கோடி சுமையைத் தாங்கி இருக்கிறார்கள். அந்தப் புண்ணியவானை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய அன்றாடம் காய்ச்சிகள் சொல்கிறார்கள். என்மீது கோபப்பட்டு என்ன பண்ணுவது? (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இங்கே கிருஷ்ணா நதிநீரைப் பற்றி மிகப் பிரமாதமாகப் பேசாதவர்களே இல்லை. இந்தத் திட்டம் அன்னை இந்திராகாந்தி அவர்கள் முன்னிலையிலே 1983-லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்., ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். அவர்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அன்று மீனம்பாக்கத்தில் இருந்து இன்றுள்ள நேரு ஸ்டேடியம் வரை எத்தனை வளைவுகள், எத்தனை cut out-கள் அத்தனையும் அமைத்து, இந்தத் திட்டத்திலே பரிமாறிக்கொண்டார்கள். அப்போதே நம்முடைய முதல்வர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் போது ஒரு கருத்தைச் சொன்னார். என்ன சொன்னார்? இந்தத் திட்டம் நிறைவேற்றுவது மிக மிகக் கடினம். அண்ணன் ஏமாந்து கொண்டிருக்கிறான். தம்பி முழித்துக்கொண்டான் என்று கட்டுரையெல்லாம் அப்போது எழுதினார். இதை நிறைவேற்றுவது அவ்வளவு கஷ்டமான திட்டம் கூட. இடையில் வந்த அந்த ஆட்சி மறந்தபோது கூட நம்முடைய முதல்வர் எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீரவேண்டும் என்பதற்காக, விடாப்பிடியாக பல்வேறு கோணங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்ற அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அன்று பேசினார்கள், என்னவென்று? 'எம்.ஜி.ஆர். சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதை கருணாநிதி எதிர்க்கிறார், இது [illegible]மா? என்று, எத்தனை பேர், எத்தனை சந்து பொந்துகளிலே பேசிய வரலாறு எல்லாம் இன்று நாம் திரும்பிப் பார்க்க வேண்டாமா? அதேபோலத்தான் நம்முடைய மேயர் அவர்கள் (குறுக்கீடு) ஒரே ஒரு விஷயம் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் நீங்கள் பேசுங்கள்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** இல்லை, இல்லை பேசுகின்ற உறுப்பினர் yield-ஆனால்தான் நீங்கள் Point of order எழுப்பலாம். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, Point of order-ஓர், உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது ஆட்சேபகரமான வார்த்தை இருந்தால் Point of order-ஐக் கேட்டு, யார் வேண்டுமானாலும் பேசலாம். அப்போது சபாநாயகரைப் பார்த்து அதற்கான அனுமதியைப் பெறலாம். இல்லாவிட்டால், அதற்கு இடையிலே பேசவேண்டுமேயானால், பேசிக் கொண்டிருக்கிற அந்த உறுப்பினருடைய சம்மதத்தைப் பெற்றுப் பேசலாம். இந்த இரண்டு முறையிலே உங்களுக்கு எது நல்ல முறையோ, அதைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** Point of order. 1983-ல் திரு. கணேசன் எந்தக் கட்சியில் இருந்தார்?

பிற்பகல் 12.40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்போது எந்தக் கட்சியில் இருந்தார் என்று கேட்பது Point of order ஆகுமா? அது எப்படி Point of order ஆகும்? ஒரு சபையை நடத்துகிற நாம், ஒரு சபையில் இருக்கிற நாம் Parliamentarian-ஆக நடந்துகொள்ள வேண்டும். அதற்கு பழகிக்கொள்ள வேண்டும். ஏனென்றால், விரைவிலே [illegible]யாக ஆகவேண்டும் என்ற ஆசையோடு இருக்கின்றவர்கள் அந்த Parliamentary முறையை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதைத் தெரிந்து கொள்ளாமல் Point of order என்று சொல்லிவிட்டு, அப்போது அவர் எந்தக் கட்சியில் இருந்தார் என்று கேட்பது எப்படி Point of order ஆகமுடியும் ?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1977-லே புரட்சித் தலைவர் எம்ஜிர் அவர்களுடைய ஆட்சியிலே நான் சட்டமன்ற உறுப்பினராக 1984-வரை இருந்தவன் இந்த கணேசன் என்று 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். அதற்கான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன். அன்று தூங்கிவிட்டு, இன்று வந்து கேட்பதைப் பார்க்கும்போது வெட்கமாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** [illegible]கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இன்னும் ஒன்று. இந்த சபையிலே பேசப்பட்ட அறிக்கை சம்பந்தப்பட்ட விஷயம், மேயர், அன்புத் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்களைப் பற்றி இங்கே பேசினார்கள். இதற்கு, பழம்பெரும் காங்கிரஸ் தியாகி இராஜாஜி இடத்திலே அரசியல் பயின்ற சி. சுப்பிரமணியன் அவர்கள் எவ்வளவு தெளிவான ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். "மாநகராட்சி பட்ஜெட் வெளியாகவில்லை, இன்னும் தம்பி மேயரை நாங்கள் பாராட்ட வேண்டும். அன்று சென்னையிலே கல்விக் கூடங்களை எல்லாம் என்ன என்று சொல்வார்கள்? 15 முறை மத்திய, மாநிலத்திலே நான் பட்ஜெட் சமர்ப்பித்தவன், சென்னையிலே எந்த சந்து, பொந்துகளில் இருக்கக்கூடிய பள்ளிகளும் தீண்டுவார் இல்லாமல் கிடந்தன. ஆனால், தம்பி ஸ்டாலின் அவர்கள், மேயர் பொறுப்பை ஏற்றவுடன் சென்னையிலே இருக்கக்கூடிய அவ்வளவு கல்வி நிலையங்களும், கல்விக் கூடங்களும் நவீனமயமாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) பின்னால் வரக்கூடிய சந்ததிகளுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய கணினிமயமாக்கப்பட்ட பள்ளிகள் நடத்தப்படுகின்றன. மேலை நாடுகளுக்கெல்லாம் சவால் விடக்கூடிய அளவுக்கு கல்வி இருக்கிறது" என்று பாராட்டினாரே இதைவிட ஒரு பாராட்டு தம்பி ஸ்டாலினுக்குத் தேவையா, இந்த ஆட்சிக்குத் தேவையா என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்களுக்கு ஓரிரண்டு கோரிக்கைகளை மட்டும் வைக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு—நான் ஒரு விவசாயி—அபராத வட்டியைத் தள்ளியிருக்கிறீர்கள். அது போதுமானதாக இல்லை, இந்த ஒரு முறை நீங்கள் எப்படியாவது வட்டி முழுவதையும் தள்ள வேண்டும். இடமிருந்தால் அசலைக்கூட கொஞ்சம் தள்ள நீங்கள் ஆவன செய்யவேண்டும்.

அதேபோல எங்களுடைய இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** போதும், விரைவாகப் பேசி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இன்று நேற்றல்ல. 1927-ல் சேலம் காங்கிரஸ் மாநாட்டில் தலைமை தாங்கிய கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்காக பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஈரோட்டு சிங்கம், வெண்தாடி வேந்தன், பகுத்தறிவுப் பகலவன் ஈ.வெ.ரா. அவர்கள் இட ஒதுக்கீடு தேவை என்று கூறி பல புள்ளிவிவரங்களை எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் இட ஒதுக்கீடு ஏன் தேவை என்பதைப் பற்றிக் கூறிய பல குறிப்புகள் என்னிடத்தில் இருக்கின்றன. இதையெல்லாம் சொல்ல வேண்டுமானால், இங்கே மணிக்கணக்காகும். ஆகவே, முதல்வர் அவர்களே, நீங்கள்தான் இட ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உங்களைத் தவிர, இந்த இட ஒதுக்கீட்டைப் பெற்று வழங்க எந்த மனிதனும் இந்தத் தமிழ்நாட்டிலே பிறக்கவில்லை; இனி பிறக்கப் போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இட ஒதுக்கீட்டை நிச்சயமாகப் பெற்றுக் கொடுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு, மகுடஞ்சாவடியில் இரயில்வே மேம்பாலம்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது உரையை முடியுங்கள். ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடம் போதும், என்னுடைய தொகுதியிலே மகுடஞ்சாவடியிலே இரயில்வே மேம்பாலம் வரும் என்று அறிவித்தார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றி சொல்லிக்கொள்கிறேன். தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுத்த இந்த உள்ளாட்சித் துறை அமைச்சரை அன்று அத்தனைப் பேர்களும் பாராட்டினார்கள். ஆனால், இன்று ஏனோ மாற்றுக் கட்சிக்குச் சென்றதால் எதிர்க்கிறார்கள். என்னுடைய எடப்பாடி தொகுதியில், பல பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிட கிட்டத்தட்ட 56 கோடி ரூபாயிலே திட்டங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உரையை முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து, திரு. டி. அமரமூர்த்தி.

பிற்பகல் 12.45

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுந்தரம் நேரமாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறு கருத்துகள் . . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, point of clarification. ஒரு point of clarification.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை. உறுப்பினர் அமரமூர்த்தி பேச ஆரம்பித்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். திரு. கணேசன் பேசி முடித்தாகிவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of clarification.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** Clarification கிடையாது. நீங்கள் உட்காருங்கள். திரு. அமரமூர்த்தி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சுந்தரம், உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. கணேசன் பேசியதில் இல்லை. நீங்கள் Point of Clarification அனுமதி கொடுத்தே ஆகவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அப்படியொன்றும் கட்டாயம் கிடையாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Point of clarification என்று நினைத்தபோதெல்லாம் நினைத்தவர்கள் கேட்க உரிமையே கிடையாது. point of order ஒன்றுதான் யாரும், எப்பொழுதும் எழுப்ப நியாயமுண்டு. அது நியாயமாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படலாம். Point of clarification கேட்பதற்கு



அவையிலேயுள்ள அனைவருக்கும் வாய்ப்போ, உரிமையோ கிடையாது. எதிர்க்கட்சித் தலைவருக்கு மட்டும்தான் அந்த வாய்ப்பை வழங்குவது, இதுவரையில் சட்டமன்ற மரபாக பல காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களுக்கு விதியை நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு மட்டும்தான் என்பதல்ல. எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்களும் Point of Clarification கேட்கலாம். அதுதான் விதியிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பாக ஒரு பிரதிநிதித்துவ உரிமை ஒன்றுண்டு. அவர்கள் கேட்பார்களேயானால், அதற்கு ஒரு தனி இடம் உண்டு. யார் பேசிய பேச்சிலேயும் clarification நாம் கேட்டுக்கொண்டு இருக்கலாம். நம்முடைய சார்பாக, யார் என்ன பேசினாலும் கேட்கலாம். இன்னும் சொல்லப்போனால், சொன்னதையே சொல்லி, இதை அப்படித்தான் சொன்னாரா என்றுகூடக் கேட்கலாம். ஆகவே, clarification என்ற பெயரிலே அவையினுடைய நேரத்தை மாண்புமிகு உறுப்பினர்களோ, இன்னும் சொல்லப்போனால், கட்சித் தலைவர்கள்கூட அந்த முறையில் அவை நேரத்தைப் பயன்படுத்துவது அவ்வளவு நியாயமல்ல; அது மரபும் அல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஐ. கணேசன் அவர்களுக்கு நீங்கள் அனுமதித்த நேரம், எத்தனை மணிக்கு ஆரம்பித்தார், எத்தனை மணிக்கு முடித்தார், எத்தனை நிமிடங்கள் அவருக்கு வழங்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன். தயவுசெய்து சொல்லுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் Chair-ஐயே question பண்ணுவது மாதிரி இருக்கிறது. (குறுக்கீடு) அது விவாதத்தைப் பொறுத்தது. எவ்வளவு நேரம் அனுமதிப்பது என்பது Chair-னுடைய right. அதை நீங்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஒதுக்குங்கள். எனக்கு ஆட்சேபணை கிடையாது. இதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கேட்கிற முறை, அவையினுடைய தலைவர் அனுமதி வழங்கிய நிலையைக் கேள்வி கேட்பதாக அமைகிறது. அந்த நேரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நாளையதினம்-இந்த அவையின் செயலாளர் குறிப்பை வைத்திருக்கிறார்—அந்த நேரம் தெரிவிக்கப்படமுடியும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்முன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளை அழைத்துப் பேசினார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், ஆலை அதிபர்களை அழைத்துப்பேசுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் *12- 50*

கடந்த வருடம், எனது தொகுதியிலுள்ள கரும்பு மொத்தம் 4 இலட்சம் டன், கோத்தாரி சர்க்கரை ஆலையின் அரைவைக்குக் கொண்டு சென்று அங்கு அரைக்கப்பட்டது. அந்தச் சர்க்கரை ஆலை, இதுவரைக்கும், விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை, கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்; இது கடந்த ஆண்டு. அதற்குப் பின்னாலே, நவம்பர் மாதத்திலேயிருந்து அந்த ஆலை அரைவை தொடங்கி, இன்றுவரை கரும்பை அரைவை செய்து கொண்டிருக்கிறது. நவம்பருக்குப் பிறகு, அந்த ஆலை விவசாயிகளுக்குக் கொடுத்த தொகை டன் ஒன்றுக்கு வெறும் *150* ரூபாய்தான். கடந்த ஆண்டு பாக்கி ஒரு கோடி ரூபாய்; இப்போது *150* ரூபாய்தான். *6* மாதங்கள் ஆகிவிட்டன. கேட்டால், எப்போது வரும், எப்போது கொடுப்போம் என்று அந்த ஆலை ஒழுங்காகப் பதில் சொல்லவில்லை. விவசாயிகள் எல்லாம், 'ஏண்டா கரும்பு பயிர்செய்தோம்' என்று மிகவும் பரிதாபமான சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எல்லோரும் என்ன சொல்கிறார்கள் என்றால், 'இந்தக் கரும்பைப் பயிரிடுவதைவிட, வேலிக்கருவை போட்டோம் என்றால், டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விற்கலாம்; அதற்கு உரம் தேவையில்லை, தண்ணீர் பாய்ச்சுகிற அவசியம் இல்லை; கூலி தேவையில்லை; ஆகவே, கரும்பு, நெல் பயிரிடுவதைவிட, வேலிக்கருவை பயிரிடலாம்' என்ற முடிவுக்கு வந்து, வேறு வழியில்லாமல், இப்போது குடும்பம் குடும்பமாகக் கேரளாவுக்குப் பிழைப்புத் தேடி போய்க் கொண்டிருக்கிறார்கள். கேரளாவுக்குப் போனால், மூன்று வேளை சாப்பாடு போட்டு *100* ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், ஆலையில் *150* ரூபாய்தான் டன்னுக்குக் கிடைக்கிறது. கடந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் பாக்கி. விவசாயி வாங்கிய கடனைக் கட்டவில்லை என்று சங்கத்தினர் ஜப்தி செய்கிறார்கள். ஒரு பக்கம் ஜப்தி. ஒரு பக்கம், விவசாயிகளின் பயிர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. விவசாயி, எப்படிக் கடனைக் கட்ட முடியும்? நெல்லுக்கு *50* ரூபாய் முன்பணம் என்று சொல்கிறார்கள். இப்போது அதற்கு திடீரென்று *15* ரூபாய் பிடிக்கிறார்கள். உர விலை அத்தனையும் ஏறிவிட்டது. டன் மூட்டைக்கு *30* ரூபாய் வீதம், அத்தனை உரத்தின் விலையும் இப்போது ஏறிப்போயிருக்கிறது. விலை ஏறாத உரமே இல்லை. அவர்கள் பனியிலே கிடந்து, வெயிலிலே கிடந்து, மழையிலே நனைந்து, ஒவ்வொரு தூராகப் பார்த்து, கொஞ்சம் சங்காயத்தை உரித்து விட்டால், *2* டன் கூட வருமே; அதை வைத்து நம்முடைய பிள்ளைகளைப் படிக்க வைக்கலாமே; மேல்படிப்பிற்கு அனுப்பி வைக்கலாமே; வயதுவந்த பிள்ளையை, *2* பவுன் கூடுதலாகப் போட்டு கல்யாணம் செய்து கொடுக்கலாமே என்கிற எண்ணத்திலே இருக்கிற விவசாயிகளுடைய வயிற்றிலே இந்த அரசு மண் விழச் செய்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



ஒரு வருடம் ஆகிவிட்டது; அந்த ஆலை ஏன் பாக்கியைக் கொடுக்கவில்லை என்று கேட்க இந்த அரசு தயாராக இல்லை. அதற்குப் பின்னாலே, எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. அது என்னவென்றால் — அது உண்மையாகக்கூட இருக்கலாம்—** (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கருத்தைச் சொல்வதைப் பற்றியும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ** அதற்கு என்ன ஆதாரம்? இப்படிப் பேசுவது நியாயமா என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். குற்றச்சாட்டு சொல்வதைப்பற்றி நாங்கள் கொஞ்சம்கூட அஞ்சவில்லை; ஆனால், ஆதாரபூர்வமாக இருக்க வேண்டும்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்கிற நேரத்தில் (குறுக்கீடு) இல்லை, அது தவறு. ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நீங்கள், உங்களிடத்தில் ஆதாரம் இல்லாமல் எந்தவொரு குற்றச்சாட்டையும் சொல்லக்கூடாது. அது முறையல்ல.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு) எனக்கு வந்த செய்தியைத்தான் நான் சொன்னேன். உண்மை என்று நான் சொல்லவில்லை. எனக்கு வந்த ...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, செய்தி என்கிற பெயரால், நான்கூட நண்பர் அமரமூர்த்தியைப் பற்றி இப்படி சொல்லிவிடலாமா? ** என்று சொல்லலாமா? செய்திதான். எனவே, இதை இரண்டையும் எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவைக்குறிப்பிலேயிருந்து, அவர் சொன்னதையும், நான் சொன்னதையும் எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** இந்தச் செய்தி விவசாயிகளிடமிருந்து பரவலாகப் பரவி வந்து, எல்லோருமே கேட்கிறார்கள். (குறுக்கீடு) ஆகவே, உடனடியாக இந்த அரசு விவசாயிகளுக்கு...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் சொன்னதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. டி. அமரமூர்த்தி:** அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு உடனடியாக விவசாயிகளுடைய பிரச்சினையிலே தலையிட வேண்டும். உடனடியாகத் தலையிட்டு, சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை உடனே வாங்கிக் கொடுக்கவேண்டும். இப்போது, பெரம்பலூரிலே ஒரு பொதுத் துறை நிறுவனம் இருக்கிறது. ஜனவரி 15 ஆம் தேதிவரைக்கும் மத்திய அரசு விலை நிர்ணயித்த அந்தப் பணத்தைக் கொடுத்தார்கள். அதற்குப் பின்னாலே, எந்தப் பணமும் அங்கு பட்டுவாடா செய்யப்படவில்லை. எப்படி விவசாயிகள் பிழைப்பார்கள்? எப்படி கடனை வாங்கி

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடைப்பார்கள்? வசிஷ்டபுரம் என்ற ஊரிலே விவசாயி ஒருவர் கடனைக் கட்டவில்லை என்று சொல்லி, அவர் வீட்டில் உள்ள சட்டி, பானை போன்றவற்றையெல்லாம் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

பிற்பகல் 12-55

ஒரு பக்கம் விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு பணம் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. மறுபக்கம் நீ கடனைக் கட்டித்தான் ஆக வேண்டுமென்று சொல்லி விவசாயியைப் போய் நெருக்கினால், எப்படி விவசாயி கடனைக் கட்ட முடியும்? இந்த அரசு விரைவாக தலையிட்டு, ஆலை முதலாளிகளை அழைத்துப் பேசுவது போன்ற எத்தனையோ வழிகள் இருக்கின்றன. உடனடியாக விவசாயிகளுக்குச் சேர வேண்டிய பணத்தை வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுத் துறை நிறுவனங்கள் இப்போது நலிவடைந்து கொண்டுவருகின்றன. என்னுடைய தொகுதியிலேகூட, ஒரு சிமெண்ட் ஆலை இருக்கிறது. அந்த சிமெண்ட் ஆலையைத் தனியாருக்கு விற்கப் போகிறார்கள் என்ற செய்தி எல்லோருடைய மத்தியிலேயும் பரவி, தொழிலாளர்கள் மத்தியிலே பெரிய போராட்டங்கள் நடக்கின்றன. அந்த சிமெண்ட் ஆலை எப்படி உருவாயிற்று என்றால், அந்த விவசாயிகள் எல்லாம் 20,000, 30,000 ரூபாய்க்குத் தங்களுடைய நிலத்தைக் கொடுத்தார்கள். அது மிகப்பெரிய தரம்வாய்ந்த சுண்ணாம்புக்கல் நிறைந்த பூமி. அந்த factory இங்கு வந்தால், நம்முடைய பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும், அதைக்கொண்டு நம்முடைய குடும்பம் பிழைக்கும் என்று நினைத்து, 20 ஆயிரத்திற்கும், 30 ஆயிரத்திற்கும் கொடுத்தார்கள். ஆனால் தனியார் ஆலைகள் அந்த நிலத்தை 4 இலட்சம், 5 இலட்சம் என்று வாங்குகிறார்கள். அப்படி விவசாயிகள் கொடுத்த நிலத்திற்காக, இப்போது தனியார்கள் அந்த ஆலையை வாங்குவதற்கு பெரிய முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இதே அவையில் இந்தக் கருத்து டாக்டர் குப்புசாமி அவர்களாலே எடுத்துச் சொல்லப்பட்டு, முன்பிருந்த அரசாங்கம்தான் அந்த ஆலையை விற்பதற்கான ஏற்பாடுகள் செய்ததே தவிர, அதற்காக நீதிமன்றத்திலே போய் இடைக்கால தடையை வாங்கி வந்து நிறுத்தினேன் என்றும், இந்த அரசாங்கத்திலே அப்படி அரசுக்குச் சொந்தமான சிமெண்ட் ஆலையை விற்கக்கூடிய எந்தவிதமான

கருத்துருகூட இல்லையென்பதையும் விளக்கிச் சொன்னேன். மறுபடியும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொல்வது முறையல்ல.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்ன ஐயப்பாடு என்றால், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இப்போதைக்கு அது இல்லை என்று statement கொடுத்திருந்தார்கள். கடைசியாக சொன்னது, இப்போதைக்கு அந்த அரசு ஆலை விற்கப்படாது என்ற ஒரு statement இருந்ததினாலே, பொது மக்கள் மத்தியிலேயும் சரி, தொழிலாளர்கள் மத்தியிலேயும் சரி, மிகப் பெரிய..

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதைக்கு நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட கருத்துரு இல்லையென்று சொன்னேன். இன்னும் *100* ஆண்டு காலத்திற்கு அப்படிப்பட்ட ஒரு கருத்துரு இல்லை என்று சொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ?

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாட்டிலே *8,9* சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் அந்தச் சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கு எந்த அடிப்படை நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உதாரணமாக, அந்த *8,9* ஆலைகளுக்கு Factory அமைப்பதற்கான நிலம்கூட வாங்கவில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள். இப்போது என்னுடைய பகுதியிலேயே ஒரு சர்க்கரை ஆலை இருந்தால் இந்த பிரச்சினையே இல்லை. எல்லா விவசாயிகளும் நிம்மதியாக இருப்பார்கள். நான்கு ஆண்டுகளாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் முதலிலே பேசியதற்கு மாறாக இப்போது பேசக் கூடாது. இருக்கிற ஒரு ஆலையிலேயே ஏற்கெனவே கொடுக்க வேண்டிய *1* கோடி ரூபாயைத் தரவில்லை. இந்த ஆண்டும் டன்னுக்கு இவ்வளவு விலை என்ற அடிப்படையில் விலைப்பணம் தரவில்லை. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லிவிட்டு, புதியதாக வருகிற ஆலைக்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லும்போது, இருக்கிற ஆலையிலேயே விவசாயிகளுக்கு இவ்வளவு கஷ்டம் என்றால் அப்புறம் இன்னும் ஏன் ஆலை?



**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு ஆலையும் கொடுக்கவில்லை என்றால் கரும்பை நாங்கள் எங்கே கொண்டு போவது? புதியதாக ஆலை திறந்தால் அவர்களாவது ஒழுங்காகக் கொடுப்பார்கள் என்றுதான் புதியதாக ஆலை கேட்டோம். ஆலை.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயிகள் அப்படித் தங்களுடைய கஷ்டத்தாலே கரும்பை எடுத்துக் கொண்டு வந்து கொட்டுகிற காரணத்தினால்தான், முதலாளிகள் அதைப்பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்ளாத ஒரு சூழ்நிலை நாட்டில் பொதுவாக உருவாகிறது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, புதியதாக ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும்.... (மணி யடிக்கப்பெற்றது). இப்போதுதான் எல்லோரும் குறுக்கிட்டார்கள். மற்றவர்களுக்கெல்லாம் எவ்வளவு நேரம் கொடுத்தீர்கள்? கொஞ்சம் பொறுங்கள். நான் தொகுதியைப் பற்றி சொல்ல வேண்டுமல்லவா? *5* நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். நீங்கள் subject-ஐ இவ்வளவுதான் சொல்ல வேண்டுமென்று பழகிக்கொள்ள வேண்டும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதாவது, புதிதாக தண்ணீருக்கு pipeline வேண்டுமென்று கேட்டால் *1,000* ரூபாய் முன்வைப்புத் தொகையும், மாதம் ரூ.*30*/- அவசியம் வாங்க வேண்டுமென்றும், அதேபோல பேரூராட்சிப் பகுதிகளுக்கு முன்வைப்புத் தொகை ரூ.*1,000* இருந்ததை மாற்றி ரூ.*5,000* கட்ட வேண்டுமென்றும், மாதம் ரூ.*30*/-க்கு பதிலாக ரூ.*60*/- வாங்க வேண்டுமென்றும் சொன்னார்கள். திடீரென்று நான்கு மடங்கு உயர்த்தினால், கிராமத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் எங்கே போவார்கள்

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திடீரென்று நான்கு மடங்கு, ஐந்து மடங்கு உயர்த்தினால் என்று பொத்தாம்பொதுவாகப் பேசக்கூடாது. ஏற்கெனவே இருந்தது எவ்வளவு, இப்பொழுது உயர்த்தியிருப்பது எவ்வளவு? அது எந்தப் பேரூராட்சி, எந்த நகராட்சி, அவர்கள் தீர்மானம்

நிறைவேற்றியிருக்கிறார்களா, தானாக உயர்த்தியிருக்கிறார்களா, அரசாங்கம் அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறதா, இதையெல்லாம் சொல்ல வேண்டுமா, வேண்டாமா?

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உதாரணமாக, அரியலூரிலே 1,000 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அரியலூரிலே பேரூராட்சியிலே, 1,000 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது 5,000 ரூபாய் கேட்கிறார்கள், முன்வைப்புத் தொகை. போய் line-ஐ cut செய்கிறார்கள், பணம் கட்டவில்லையென்றால், உடனடியாக. அதிலே என்னவென்றால், வேண்டியவர் என்றால், விட்டுவிடுகிறார்கள். வேண்டாதவன் என்றால், போய் முதலிலே cut செய்கிறார்கள். அது மாதிரி கிராமத்திலே எல்லாம், G.O வந்துவிட்டது. நீ கட்டு என்று சொல்லி எல்லா இணைப்புகளையும் துண்டிக்கிறார்கள். தண்ணீர் line, pipe line பூராவும் துண்டிக்கிறார்கள். கிராமத்திலே 200 ரூபாய் ஏற்கெனவே, கிராமத்திலே...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எந்தவிதமான பணமும், நேரடியாக, ரசீது மூலமாக வாங்காமல் ஏற்கெனவே இணைப்பு வாங்கப்பட்ட பல குழாய்கள், illegal-ஆக சட்டப்படியில்லாமல் தனியாகவே கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் இப்போது கணக்குப் பார்த்து, பணம் கொடுத்திருக்கிறதா, கொடுக்கவில்லையா, முன்பு கொடுத்ததா, உத்தரவு போட்டபிறகு கொடுத்ததா, இந்தக் கொள்கை வகுத்த பிறகு கொடுத்ததா என்பதைப் பரிசீலித்து, அப்படிப்பட்ட நிலையிருந்தால், அதை இரத்து செய்யச் சொல்லி, அரசாங்கம் தெரிவித்துவிட்டது. அதைத் தவிர, தன்னிச்சையாக, அவர்கள் Cut பண்ணியிருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** இதுவரைக்கும் அந்த மாதிரி போகும்போது...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் சொல்வது அத்தனையும், தெருக்குழாய், பொதுக்குழாய் அல்ல. அவரவர்கள் இஷ்டப்பட்டு வீட்டுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டுக்குள்ளேயே தண்ணீர் பிடிக்கவேண்டுமென்று சொல்கிறவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினையே தவிர, ஏழையெளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினையே இல்லை.



**திரு. டி. அமரமூர்த்தி:** வீட்டிற்குள்ளே இணைப்பு கேட்பவர்களுக்குத் தான் திடீரென்று 200 ரூபாய், 500 ரூபாய், 1,000 ரூபாய் கேட்கிறார்கள். அதே போல....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** விருப்பம் இருந்தால் கொடுக்கப் போகிறார்கள். இல்லையென்றால், இல்லை. நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? தண்ணீருக்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்வது? எங்கேயிருந்து எப்படி கடனை அடைப்பான்? அந்த ஊராட்சி மன்றத்திலே எங்கே அடைப்பான்? ஒரு திட்டம் என்றாலே, 5 இலட்சத்திற்கு குறைவில்லை. ஆறு, ஏழு இணைப்பு கொடுக்கிற, ஒரு பொதுத் தெருவிலே, ஒரு திட்டம் தீட்டினால், 6 இலட்சம், 7 இலட்சம் செலவாகிறது. அதைப் பஞ்சாயத்தாலே கட்டமுடியுமா?

**திரு. டி. அமரமூர்த்தி:** அதாவது, அரசாங்கம் வருவது, நல்லது செய்வதற்காகத்தான் வருவது. இதுவரைக்கும் அந்த சௌகரியத்தை அவர்கள் அனுபவித்துவிட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே 15 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். 200 ரூபாய் முன்வைப்புத் தொகை கொடுத்திருக்கிறார்கள். இந்த முன்வைப்புத் தொகை....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரியலூரைப் பொறுத்தவரையில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கும், அரியலூர் பேரூராட்சிக்கும் கருத்து வேறுபாடு இருப்பதை நான் அறிவேன். அதிலே நான் தலையிட்டிருக்கிறேன். நிச்சயமாக, நியாயம் யார் பக்கத்திலே இருந்தாலும், அதைத் தீர்த்து வைப்பேன். இந்தப் பிரச்சினையைக் குறித்து நேரத்தை வளர்க்க வேண்டாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல அப்படி ஒன்றும் இல்லை. எல்லோர்கிட்டேயும் சகஜமாக, நண்பராகத்தான் பழகுவேன். அந்தமாதிரி கருத்து வேறுபாடு எல்லாம் எனக்குக் கிடையாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** இப்போது 100 கிராமங்களுக்குப் போனேன். 100 கிராமங்களிலேயும் இந்தப் புகாரைச் சொல்கிறார்கள். திடீரென்று 1,000 ரூபாய் கேட்கிறார்கள் என்று 100 கிராமங்களிலேயும் சொல்கிறார்கள். அதேபோல மந்திரிகிட்டே எப்படி வந்து சொல்லமுடியும்? எங்களை மறிக்கிறார்களே?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மொத்தமாக தமிழ்நாட்டில் 12,617 ஊராட்சிகள் இருக்கின்றன. இதிலே ஏறத்தாழ, 30,000 சொச்சம் உள்கிராமங்கள் இருக்கின்றன. இதிலே, ஒன்றே ஒன்று, இரண்டு என்றால், அதைப் போய் எப்படி குற்றச்சாட்டாக சொல்ல முடியும்.?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி)** : நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். ஒரே ஒரு நிமிடம்தான்.

**திரு. டி. அமரமூர்த்தி:** சரி. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தண்ணீர் கொடுக்கிறார்கள். ஒரு லிட்டருக்கு, 2.50 ரூபாய். அரசு கேட்கிறது. அப்படி, ஒரு நாளைக்கு ஒரு கிராமத்திலே, கிட்டத்தட்ட 50,000 லிட்டர் ஆகும். அப்படியென்றால், மாதத்திற்கு எவ்வளவு ஆகும் என்று கணக்கு போட்டுக்கொள்ளுங்கள். ஒரு மாதத்திற்கு 15,000 ரூபாய் குடிநீருக்காக, அந்தக் கிராம ஊராட்சி கட்டவேண்டும். ஏற்கெனவே, அந்த ஊராட்சி தலைவர்கள் எல்லாம் Current bill-க்கு, தெரு விளக்குக்குப் பணம் கட்டமுடியாமல் அல்லாடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவரே, இப்பொழுது பழையபடி தன்னுடைய நிலைக்கு வந்துவிட்டார். ஏற்கெனவே கட்டணம் வாங்குவது தவறு என்று சொன்னார். இப்போது, ஊராட்சி மன்றத் தலைவர் எப்படி கட்டுவார் என்கிறார்.

அதைக் கணக்கிட்டு, ஒரு லிட்டருக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, அதற்கு எவ்வளவு திட்டச்-செலவாகிறது என்பதை யூகித்து, அதன் அடிப்படையிலேதான், அந்தப் பிரச்சினை வருகிறது. அதனால், ஒன்றுமேயில்லை, Current bill கட்டாமல் இல்லை. இப்போது அதற்கு அரசாங்கமே பொறுப்பு எடுத்துக்கொள்கிறது. உள்ளபடியே, உண்மையாகச் செலவழித்து, ஊராட்சி மன்றம் சரியாக நடந்து, அவர்களுக்கு மின் கட்டணம் செலுத்த முடியவில்லை என்றால், அரசாங்கம் செலுத்தியிருக்கிறது, செலுத்தும்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதனால், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து முதல்வரிடம் சொல்லி, Road போட்டார்கள். Road போட்டதிலே metal மட்டுமே நிற்கிறது. 5, 6 மாதங்களாக தார் போடாமல், போட்ட Road அத்தனையும் பெயர்த்துக்கொண்டு போய்விட்டது. அப்படி என்றால், அதனால் இந்த ஆட்சிக்குத்தானே கெட்ட பெயர் வரும்? இதைச் சொன்னால், குற்றச்சாட்டு என்று சொல்கிறீர்கள். இது ஆட்சிக்குத்தான் கெட்ட பெயர். அதுவே மந்திரி தொகுதி வரைக்கும் தார் வந்துவிட்டது. என்னுடைய தொகுதிக்கு..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** போதும், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 1-05

**திரு. டி. அமரமூர்த்தி:** அடுத்து ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்திலே ஏரி தூர் வாரினார்கள். இப்போழுது அது இல்லை. இரண்டு வருடங்களாக ஏரி தூர் வாருவதில்லை. கிராமங்களிலே ஏரி தூர் வாரவில்லை என்றால், அந்த ஜனங்கள் குளிப்பதற்கும், ஆடுமாடுகள் குளிப்பதற்கும் மிகப் பெரிய கஷ்டமாக இருக்கும். ஆகவே, இந்த. . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் உரையை முடித்தாகக் கருதுகிறேன். திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு மாற்றுப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துகளைச் சொல்ல அனுமதித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்கள், அவர்கள் என்றிலிருந்து நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பித்து வருகின்றாரோ, அன்றிலிருந்து அவருடைய நிதிநிலை அறிக்கையின்மீது பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன் நான். இந்த நிதிநிலை அறிக்கையில் பல நல்ல திட்டங்கள், நல்ல தமிழிலே,

அவருக்கே உரிய சொல் அலங்காரங்களோடு, அவர் இதைச் சமர்ப்பித்திருக்கிறார். எப்போதும் அவருடைய மொழி நயத்தை, அவருடைய எழுத்துப் பாங்கினை, எழுச்சியான திட்டங்களை நான் ரசிப்பது மட்டுமல்ல, அது நாட்டுக்குத் தேவை என்றும் கருதுபவன். இதிலே எங்கே குறையிருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்து, அதைப் பற்றி பேச வேண்டும் என்று நான் விரும்பாவிட்டாலும், சில குறைகளை முக்கியமான ஒரு குறையை—குடம் நிறைய பசும் பால் நிறைந்திருக்கிறது; தங்கக் குடத்தில் அதுவும் நிறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதில் ஒரு துளி கலந்து விட்டால் அதைக் குடிக்க முடியுமா என்பதும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. கலைஞர் அவர்களுடைய மனநலம், மொழிநலம் எனக்கு நன்றாகத் தெரியும். சரியோ, தவறோ இந்த நிறை குடத்தில், பசும்பால் நிறைந்திருக்கிற நிறை குடத்தில் எப்படியோ வந்து ஒரு துளி கலந்துவிட்ட காரணத்தினால், நான் அந்தக் குடத்திலிருந்து பாலைக் குடிக்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். கலைஞருடைய நீண்ட பாரம்பரியம், அவர் இந்த நாட்டுக்கும், வீட்டுக்கும் செய்திருக்கிற நிலையான நன்மைகள், நாடு போற்றும் அவருடைய பணி யார் மறைத்தாலும் அதை மறைக்க முடியாது. ஆனால், அவருடைய வரலாற்றில் எதிர்பாரா திருப்பம்- சில நேரங்களிலே எதிர்பாராத திருப்பங்களும் நம்முடைய விருப்பங்களுக்கு மாறான திருப்பங்களும் ஏற்படுகின்றன. அது அவருடைய விருப்பத்திற்கு ஏற்பட்ட திருப்பமா என்றால் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருடைய விருப்பத்திற்கு மாறான திருப்பம் ஒன்று ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், எங்களைப் போன்றவர்கள் கொஞ்சம் அந்த நிலையிலேயிருந்து மாறுபடக் கூடிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை — இன்றைக்கு நாடு முழுவதும் பற்றாக்குறை. Deficit Budget has become the order of the day, both in the Central as well as in all the States என்று சொல்லக் கூடிய அளவிற்கு பற்றாக்குறை பட்ஜெட். இதுவும் பற்றாக்குறை பட்ஜெட்தான். இந்த நிதிநிலையில் உங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை கடந்த நிதி ஆண்டில் ரூ.160 கோடி என்று சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டு இவ்வளவு குறைவான பற்றாக்குறை ஏற்பட்டதற்குக் காரணம், revenue-லே - There was perceptible revenue buoyance in the last financial year. The vigour of the deficit was not very much helpful. ஆனால் இந்த ஆண்டு நீங்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த பட்ஜெட்டில் இருக்கிற பற்றாக்குறை எப்படி தன்னுடைய தீய விளைவுகளை பொருளாதாரத்தில் நலிவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு, உடனடியாக அதனுடைய



விளைவுகளை இப்பொழுது நாம் காண முடியாது. இன்னும் 2,3 மாதங்களிலே அரசுக்கு பெரிய நிதிப்பற்றாக்குறை ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, அவற்றைத் தீர்ப்பது எப்படி என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை.

பிற்பகல் 1-10

Rice subsidy-அரிசிக்குக் கொடுக்கக்கூடிய மானியம். அது ஏற்கெனவே இந்த பட்ஜெட்படி கூட 1,700 கோடி ரூபாய் அதற்கு மானியம் வழங்கக்கூடிய சூழ்நிலை நமக்கு இப்போது இருக்கிறது. இந்த மானியத்தை எப்படி, எந்த வகையில்—financial resources என்ன? எந்த வகையிலே நீங்கள் இதைச் சரிக்கட்டப் போகிறீர்கள் என்பதற்கான தெளிவான விளக்கம் பட்ஜெட்டிலே இல்லை. அதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

Such an abnormal financial commitment of Rs.1,700 crores to the Government,. How are you going to adjust? What is your revenue receipt? What are the ways and means? How are you going to face this great challenge of deficit is the question. There is no answer to this in the budget. So, to that extent the budget is defective. இதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். Food subsidy-யைப் பொறுத்தவரையில்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு வரவு-செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு விஷயத்தையும், துண்டு விழுவதை அல்லது பற்றாக்குறை ஏற்படுவதை அல்லது செலவு ஏற்படுவதை எப்படி சரிக்கட்டுவது என்று ஒவ்வொன்றுக்கும் பட்ஜெட்டிலே போட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக வருகிற பற்றாக்குறையை எப்படி ஈடுகட்டுவது, எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்றுதான் சொல்வார்கள். அதுபோன்ற ஒரு நிலையை இந்த அரசு எடுத்துத்தான் இந்த பட்ஜெட்டைத் தயாரித்து இருக்கிறது. வேண்டுமானால் அதற்கான விளக்கத்தை நாளைய பதிலில் நான் சொல்கின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதல்வர் அவர்களுடைய இந்த விளக்கத்திற்கு நன்றி. இப்படித்தான் செய்ய முடியும் என்பதும் எனக்குத் தெரியும். பட்ஜெட்டில் எல்லா விவரங்களையும் கொடுக்க முடியாது. ஒரு பட்ஜெட்

உரையிலே பட்ஜெட் விளக்கங்களைத் தருவது சாத்தியம் அல்ல. அதை நானும் அறிவேன். ஆனால், சில குறிப்புகள் நமக்குத் தேவை. Indications. There should be some indications about the ways and means. How are you going to face and adjust this deficit? அதற்கான குறிப்புகள் இருந்திட வேண்டும். அது இல்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

அதோடு 868 கோடி ரூபாய் Power subsidy-க்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். அல்லது இந்த ஆண்டு ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. 1,700 கோடி ரூபாயில் இந்த மின்சாரத்திற்கு ரூ. 868 கோடி என்பது மட்டுமல்ல. Interest payment என்று சொல்லி வருகிறதே- வட்டி, அரசாங்கம் வட்டியிலே பிறந்து, வட்டியிலே வாழ்ந்து, எல்லோரையும் வட்டியால் அமுக்கிக் கொண்டிருக்கிற ஒரு நிலைமை நாட்டில் இருப்பது இருக்கிறதே, மாநிலத்திற்கு மட்டும் நான் சொல்லவில்லை. மாண்புமிகு பிரதமர் வாஜ்பாயி அவர்களும் சொல்லியிருக்கிறார். நம்முடைய பொது நிறுவனங்கள் இப்போது பெறுகிற வருமானத்திலே அல்லது நாட்டிற்குக் கிடைக்கின்ற தேசிய வருமானத்திலே மூன்றிலே ஒரு பங்கு வட்டி செலுத்திக் கொண்டிருக்கிறோம் என்கிற ஒரு அபாய அறிவிப்பை வாஜ்பாயி அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார். இது இப்படியே போய்க்கொண்டிருந்தால் எப்படி? இதோடு ஜனரஞ்சகமான நம்முடைய திட்டங்கள். சத்துணவுத் திட்டம், சமத்துவபுரம் என்ற இந்த மாதிரியான ஜனரஞ்சகமான திட்டங்களால் நாட்டில் ஏற்படுகிற நல்விளைவுகள் என்ன என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். அதனுடைய பொருளாதார நல்விளைவுகள் என்ன? ஒரு திட்டத்தின்மீது நீங்கள் செலவு செய்யும்போது நம்முடைய சர்க்கார் கஜானாவிலிருந்து பணம் circulation-க்குப் போகும்போது, செலாவணிக்குப் போகும்போது.... (மணியடிக்கப்பெற்றது) என்ன சார் இது? நான் பேசியே இருக்க மாட்டேன்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** 10 நிமிடங்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தயவுசெய்து 15 நிமிடங்கள் கொடுங்கள். என்ன இது? எனக்கு ஒன்றும் புரியவில்லை.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நாங்கள் ஒன்றும் எல்லாவற்றிலேயும் பேசுவதில்லை. See, I am not just whiling away my time. Please, கொடுங்கள். கொஞ்சம்தான் இருக்கிறது.

நான் உங்களைக் கேட்டுக்கொள்வது ஒட்டுமொத்தமான விளைவுகள். நங்கள் செலவு செய்யும்போது செலாவணிக்குப் போகும் பணம் உருவாக்குகிற நல்விளைவுகள் -பொருளாதார நல்விளைவுகள் என்ன? நீங்கள் வரி போட்டு மக்களிடத்திலேயிருந்து பணம் உங்களுடைய கஜானாவிற்கு வரும்போது ஏற்படுகிற பொருளாதார விளைவுகள் என்ன என்பதைப்பற்றி ஒரு தெளிவான கருத்து நம்முடைய அவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பது எல்லா வகையிலும் சிறந்தது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது இந்த வட்டிக்காக நீங்கள் சொல்லியிருப்பது ஏறக்குறைய 2,582 கோடி ரூபாய். நான் இந்தத் தெளிவான விளக்கங்களை, நீங்கள் விளக்கம் கொடுத்தீர்களே அதை ஒவ்வொன்றாகப் பார்த்தேன். யார் யாருக்கு எவ்வளவு வட்டி கொடுக்கிறீர்கள் என்று கணக்குப் பார்த்தால் 2,582 கோடி ரூபாய் வட்டிக்காகச் செலுத்துகிறீர்கள் என்பது நான் ஆய்வு செய்த அளவிற்கு எனக்குத் தெரிந்தது. அதற்குக் கூட இருக்கலாம். அல்லது குறைவாக இருக்கலாம். ஆனால் இவ்வளவு பெரிய வட்டியை நாம் செலுத்துகிறோம். தயவுசெய்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிதிநிலை அறிக்கையினுடைய வளாகத்திற்கு அப்பாற்பட்டு சில திட்டங்களை நீங்கள் வகுக்கும்போது பொருளாதாரத்தில் ஆரோக்கியமான விளைவுகள் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டு நாம் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஏனென்றால், வரவு-செலவுத் திட்டம் என்பது ஒரு பெரிய Technical matter. அதிலே முழு அதிகாரிகளும் ஈடுபடுகிறார்கள். மாநிலம் முழுவதும் அதிலே ஈடுபடுகிறார்கள். அவர்கள் எல்லாம் விவரங்களைச் சேகரிக்கின்றார்கள். ஏறக்குறைய 3, 4 மாதங்களுக்கு முன்பே எல்லா துறைகளுக்கும் அறிவிப்பு செய்து நீங்கள் விவரங்களைச் சேகரிக்கின்றீர்கள். ஒரு பெரிய படையே இதற்கு வேலை செய்கிறது. எல்லா துறைகளும் வேலை செய்கின்றன. இப்படிச் செய்யும்போது அரசு நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்காக, செலவு செய்கின்ற அந்தச் செலவு

பயனுள்ள செலவாக, நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய செலவாக இருக்க வேண்டுமே தவிர.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1,500 கோடி ரூபாய் மானியம் அளித்து அதன் காரணமாகத்தான் 20 கிலோ அரிசி தலா கிலோ 3½ ரூபாய் என்ற அளவிலே போடப்படுகிறது. அது நாட்டுக்கு, ஏழை மக்களுக்கு நன்மை பயக்கின்ற காரியமா, அல்லவா என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் விளக்க வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்தச் செலவினத்தினுடைய இன்றியமையாமையை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அது தேவை. ஆனால், தேவையாகச் செய்யப்படுகிற செலவினம், தேவையான நல்விளைவுகளைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையிலே அமைந்திட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர வேறு அல்ல. இப்பொழுது ஓய்வூதிய திட்டத்திற்காக புதியதாக அரசுத் துறையிலே வேலை செய்கின்றவர்களுக்கு சம்பள உயர்வு மற்ற வசதிகள் எல்லாம் செய்யப்படுவதற்கு எவ்வளவு நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பது தெளிவாகக் குறிப்பிடவில்லை. உங்களுடைய திட்டம் எவ்வளவு, அரசாங்கத்தினுடைய செலவினம் இதனாலே எவ்வளவு உயர்கிறது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகின்ற நேரத்தில் அது தொடர்பாக பெரிய, பெரிய புத்தகங்கள் உறுப்பினர்களுக்குத் தரப்படுகின்றன. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகின்ற எல்லா விவரங்களும் இருக்கின்றன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் அந்தப் புத்தகங்களை எல்லாம் புரட்டிப் புரட்டி பார்த்தேன். 8 நாளாக அதைப் படித்துப் பார்த்தேன். அதிலேயிருந்து சேகரித்த விவரங்களைத்தான் நான் சொல்கிறேன். அதிலே தெரியாத விவரம் எவ்வளவு உங்களுக்கு Additional commitment because of the increase in the salaries and Dearness Allowances and other benefits in the Government machinery - Bureaucracy. இதுதான் அதிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகின்றேன். அப்படி இருந்தது என்றால் சொல்லுங்கள். நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இவையெல்லாம் ஒரு நிறைவான பட்ஜெட்டுக்கு வழி வகுக்காது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதிலே முக்கியமான ஒன்று, நேரம் இல்லை, அரசு கொடுக்கிற சில வாக்குறுதிகள். அதைத்



தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, மாநிலத்திற்கு மட்டுமல்ல, என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் நான் செய்கிற நியாயம், கடமை என்று கருதுகிறேன்.

*பிற்பகல் 1-20*

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் பகுதியில், குறிப்பாக ஜவ்வாது மலைப் பகுதியில், வேலையில்லாத மக்கள், வேலை செய்வதற்கு வாய்ப்பில்லாத மக்கள், எந்தவிதமான ஒரு தொழிற்சாலையையும் ஏற்படுத்த முடியாது என்ற நிலையிலே, எங்கள் மலையிலேயே கிடைக்கிற சந்தன மரத்தை வைத்து வெளியூர்களிலேயெல்லாம் பிழைக்கிறார்கள்; குப்பத்திலே பிழைக்கிறார்கள்; வெளி மாநிலங்களிலே பிழைக்கிறார்கள். ஆனால், அதை வைத்து எங்கள் ஊரிலே ஒரு சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மிகப் பரிவோடு கவனித்து தேவையான நடவடிக்கை, அதிலே என்ன விளைவுகள் ஏற்படும் - நஷ்டம் ஏற்படுகிறதா அல்லது இலாபம் ஏற்படுகிறதா என்று எனக்குத் தெரியாது. நாங்கள் அங்கே சந்தன மரத் தொழிற்சாலையை ஏற்படுத்துவோம்; இந்த அரசு ஏற்படுத்தும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி தந்தார்கள். அன்று வனத்துறை அமைச்சராக இருந்தவர்கூட அதை வந்து பார்வையிட்டார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இரவிலே வந்தார்கள். அதனால் அவரை நான் பார்க்க முடியவில்லை. நான் இப்போது உங்களைக் கேட்டுக்கொள்வது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் வாக்குறுதி தந்தால் மீறமாட்டீர்கள். எங்கள் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் அந்த சந்தன மரத் தொழிற்சாலையை தயவுசெய்து அங்கே ஏற்படுத்தித் தாருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வேறு எதைச் சொல்வதற்கு....

**Hon. Chairman (Thiru C.T. Dhandapani):** Your time is over. Please control.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** என் பேச்சை விரைந்து முடித்துக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்ன அந்தத் திட்டத்தை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து குறைந்தபட்சம் இப்போது அவரே வனத் துறைக்கும் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கிறார்கள். எனவே, தயவுசெய்து அவர்கள் உடனடியாக அதிலே இருக்கிற தடைகளை நீக்கி அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, இப்போது ஒரு தேசிய பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையில் நீங்கள் யாருக்கும் சளைத்தவரும் அல்ல. இட ஒதுக்கீட்டைப்பற்றிப் பேசுகின்றவர்களுக்கெல்லாம் தலைமையேற்று நடத்தக்கூடிய பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர் நீங்கள் என்பதை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இப்போது அந்தப் பிரச்சினையில் மிகப் பெரிய பாரதூர விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கேரளாவிலே அதற்கான சட்டத்தை உருவாக்க அவர்கள் குழு ஒன்றை ஏற்படுத்தினார்கள். Creamy Layer என்றெல்லாம் பேசினார்கள். இப்போது அந்தப் பிரச்சினை மிகப் பூதாகாரமாக உருவெடுத்திருக்கிறது. இது உங்களுடைய பிரச்சினை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிரச்சினை, இது பெரியாருடைய பிரச்சினை, அண்ணாவினுடைய பிரச்சினை. இந்த மண்ணினுடைய பிரச்சினை. எனவே, இந்தப் பிரச்சினையில் நாம் எல்லாவிதமான தியாகங்களுக்கும் தயாராக இருக்கக்கூடிய அளவிற்கு தயவுசெய்து இந்த reservation பிரச்சினையில் ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னொன்று.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது. இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். 1-30 மணி வரைக்கும்தான் அவை நேரம் இருக்கிறது.

**Thiru M. Abdul Latheef:** I am sorry to disturb you.

**Hon. Chairman (Thiru C.T. Dhandapani):** I am not at all disturbed. (Interruption) இல்லை, இல்லை, இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும், நேரம் இல்லை.

**Thiru M. Abdul Latheef:** Just give me 5 more minutes.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை, இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். 5 நிமிடங்கள் எல்லாம் முடியாது. நீங்கள் அடுத்த தடவை பேசுங்கள். நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். ஏற்கெனவே, நீங்கள் 18 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். அதனால் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். திரு. கே.சி. கணேசன்.



**Thiru M. Abdul Latheef:** I will conclude my speech. Don't kill me in the midst of my journey. This is a very important thing. Please allow me.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இன்னும் அரை நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**Thiru M. Abdul Latheef:** I am controlling. Please allow me to conclude my speech.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். 15 நிமிடங்களுக்குமேல் நீங்கள் பேசிவிட்டீர்கள். Please finish your speech in half a minute. (Interruption)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஒரே நிமிடத்தில் பேச்சை முடிக்கிறேன். இட ஒதுக்கீட்டைப் பற்றி, முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று நீங்கள் பலமுறை வாக்குறுதி தந்திருக்கிறீர்கள். இப்போது நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்ன என்பதை நீங்கள் கொள்கை அளவிலாவது சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலாவது இதைச் சொல்ல வேண்டும். இந்தக் கூட்டத் தொடரிலேயே அல்லது நாளைக்கு உங்களுடைய பதிலுரையிலேயே தயவுசெய்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லீம்களுக்கு இந்த இட ஒதுக்கீட்டை நீங்கள் கொள்கை அளவிலாவது அறிவிக்க இருக்கிறீர்களா, இல்லையா என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள். உருது அகாடமி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள். நீண்ட நாட்கள் .....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அடுத்து திரு. கே.சி. கணேசன்.

*பிற்பகல் 1-25*

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையில் 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இந்த பட்ஜெட்டில் எதுவும் இல்லை என்று பேசினார்கள். கிராமத்திலே சொல்வார்கள். கண் இருந்தும் சில பேர் குருடர்களாக இருக்கிறார்கள். காதிருந்தும் சில பேர் செவிடர்களாக இருக்கிறார்கள். வாய் இருந்தும் சில பேர் ஊமைகளாக இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். அதைப்போல இதயம் இருந்தும் இதயம் இல்லாதவர்களைப்போல, யாரையோ திருப்திபடுத்துவதற்காக இந்த பட்ஜெட்டை குறை சொல்லி பலர் பேசியிருக்கிறார்கள். நான் மிகப் பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தலைவர், ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலேயும் ஏழை மக்களுக்காக, நாட்டு மக்களுக்காக, விவசாயிகளுக்காக, தொழிலாளிகளுக்காக நிறைய நல்ல பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சியிலே இருக்கிற நம்முடைய சகோதரர் சுந்தரம் அவர்கள் பேசுகிறபோது இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். பட்ஜெட் போடுகின்றபோது வெளியிலே இருக்கிற வியாபாரிகளும், விவசாயிகளும், மற்றவர்களும் ஏதாவது வரி போடப் போகிறார்களோ என்று அஞ்சுவார்கள், பேசுவார்கள். ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிற இந்த பட்ஜெட், வரி போடாத பட்ஜெட் மட்டுமல்லாமல், வரியைக் குறைத்திருக்கின்ற பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு வாரியம், தையல் தொழிலாளர்களுக்கு நல வாரியம், ஆட்டோ தொழிலாளர்களுக்கு நல வாரியம், விவசாயிகளுக்கு நல வாரியம், வாகன ஓட்டுநர்களுக்கு நல வாரியம் இப்படிப் பல வாரியங்களை அமைத்துத் தந்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், பட்ஜெட்டைத் தயாரிப்பதற்கு முன்னால், யாரும் இதுவரையிலே விவசாயிகளை அழைத்துப் பேசியது கிடையாது. வணிகர்களை அழைத்துப் பேசியது கிடையாது. நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் இந்த பட்ஜெட்டைத் தயாரிப்பதற்கு முன்பு விவசாயிகளை அழைத்துப் பேசியிருக்கிறார்கள், நம்முடைய வணிகர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அதையெல்லாம் பேசித்தான் விவசாயிகளுக்கு உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களை கேட்க விரும்புவது—எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, கல்வித்



துறையை எடுத்துக்கொண்டால் இப்போது *1* கிலோ மீட்டர் தூரம் இருந்தால் ஒரு ஆரம்பப் பாடசாலை அமைக்க வேண்டும் என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள். பல உயர்நிலைப் பள்ளிகளைத் தந்திருக்கிறார்கள். பல மேல்நிலைப் பள்ளிகளைத் தந்திருக்கிறார்கள்—சென்ற ஆட்சியில் இவையெல்லாம் நடைபெற்றிருக்கின்றனவா? இந்தத் திட்டம் எங்கே போனது?

அதைப்போல, உள்ளாட்சித் துறையை எடுத்துக் கொண்டால் இப்போது Bus stand எல்லாம் பார்த்தால் சிமெண்ட் சாலை. Bus Stand முழுவதும் சிமெண்ட் தரை அமைத்திருக்கிறார்கள். சிமெண்ட் சாலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தார்ச்சாலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இப்போது சொல்லில் அடங்காத அளவிற்கு எல்லா தார்ச்சாலைகளும் செப்பனிடப்படுகின்றன. பல்வேறு பாலங்கள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. பல்வேறு பாலங்கள் கட்டுவதற்கு நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பு தந்திருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால் விவசாயிகளுக்கு எதுவுமே இல்லை என்று சொல்கிறார்கள். சென்ற ஆட்சியில் விவசாயத்திற்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றுதான் கேட்டார்கள். மின்சாரக் கட்டணத்தை குறைக்கவில்லை. அதற்காக போராட்டமே நடத்தினார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயத்திற்கு மின்சாரம் இனாம் என்று அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்ல, இப்போது நம்முடைய அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அமரமூர்த்திகூட சொன்னார். கரும்புக்கு சரியானபடி பணம் கொடுக்கவில்லை என்று. அது உண்மைதான். அதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி, விவசாயிகளுக்கு உடனடியாக கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதுவும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைப்போல நம்முடைய சுந்தரம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரிசி விலை ஏறியிருக்கிறது. மாநில அரசு அதைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார். நம்முடைய நிதிநிலை

அறிக்கையிலே 12-வது பக்கத்தில் இரண்டாவது பத்தியிலே அழகாகச் சொல்லியிருக்கிறார் தலைவர் முதல்வர் அவர்கள். 'மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களுக்கு அளிக்கும் அரிசியின் விலை உயர்த்தப்பட்டிருப்பது கவலைக்குரியதாக உள்ளது. இந்த விலை உயர்வை இரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்' என்று அழகாக நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுந்தரம் உட்காருங்கள்.

**திரு. கே.சி. கணேசன்:** ஆனால், நம்முடைய சுந்தரம் அவர்கள் இதைக் கண்டிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன், நிதிநிலை அறிக்கையிலே கண்டித்து குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே.சி. கணேசன்:** அதைப்போல, இன்னும் சொல்லவேண்டும் என்றாலா நம்முடைய கூட்டுறவுத் துறையிலே இப்போது நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இரண்டு கிலோமீட்டர் தாண்டினால்தான் நியாயவிலைக் கடை இருக்கும்; மூன்று கிலோமீட்டர் தாண்டினால்தான் நியாயவிலைக் கடை இருக்கும். இப்போது இரண்டு கிலோமீட்டருக்கு ஒரு நியாயவிலைக் கடை, பகுதி நேர அங்காடிகள் இருக்கின்றன. அதைப்போலவே, ஆயிரம் அட்டைகள் இருந்தால்தான் ஏற்கெனவே தனிக்கடை. இப்போது 500 அட்டைகள் இருந்தாலே ஒரு தனிக்கடை; 200 அட்டைகள் இருந்தாலே பகுதி நேரக் கடை. இப்போது மகளிர் நியாயவிலைக் கடைகளிலே, 210 இடங்களிலே மகளிர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் வருகிற ஆண்டில் மகளிர் நிறைய - மகளிர் நல்லமுறையிலே நடத்துகின்ற காரணத்தாலே - நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி, கூட்டுறவுத் துறையாக இருந்தாலும், விவசாயத் துறையாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையாக இருந்தாலும் சரி, குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி இந்த ஆண்டு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



எங்களுடைய பகுதியிலே எல்லாம், சொல்லப்போனால் குடிப்பதற்கே தண்ணீர் கஷ்டம். இன்னும் சொல்லப்போனால் பெண் கொடுக்கமாட்டார்கள். வடக்குப் பகுதியிலே உள்ள அந்தத் தண்ணீரைப் பார்த்தாலே காடியாக இருக்கும், குடிப்பதற்கே அருகதையுள்ளதாக இருக்காது. குளிப்பதும் அதிலேதான், மாடு குளிப்பாட்டுவதும் அதிலேதான், மனிதர்கள் குளிப்பதும் அதிலேதான், குடிப்பதற்கும் அதுதான். இப்போது அந்த நிலைகள் எல்லாம் மாற்றப்பட்டு, எங்கு பார்த்தாலும் தண்ணீர்ப் பஞ்சமே இல்லை என்று சொல்கின்ற அளவிற்குக் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆங்காங்கே ஆழ்த்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. கொள்ளிடத்திலேயிருந்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், பெரம்பலூரானாலும், அரியலூர் ஆனாலும், ஜெயங்கொண்டம் ஆனாலும், ஆண்டிமடம் ஆனாலும் குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பு நாங்கள் தண்ணீரைப் பார்த்ததே கிடையாது. அதைப்போல அவ்வளவு நல்ல பல காரியங்களை, இந்த அரசு மூலமாக நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதைப்போலவே, 6,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். எவ்வளவோ ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 4, 5 ஆண்டு கால ஆட்சியிலே கணக்கற்ற அளவிலே ஆசிரியர்கள், அதைப்போலவே போலீஸ், சீருடைப் பணியாளர்கள், இன்னும் பல்வேறு துறைகளிலே, கூட்டுறவுத் துறையிலே வேலைவாய்ப்பு—என்ன செய்யவில்லை? நான் இங்கே இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், எதையும் செய்யாதவர்கள், எதையும் செய்யவில்லை என்று சொல்வதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது.

நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால்—எங்களுடைய தொகுதியைப் பற்றி ஒன்றை மட்டும் சொல்லி பேச்சை முடித்துக் கொள்கிறேன். இங்கே நம்முடைய பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கருப்பண்ண உடையார் அவர்கள்கூட பேசினார்கள். நீலத்தநல்லூர் - மதனத்தூர் பாலம். நாங்கள் ஆறு ஆண்டுகாலமாகக் கேட்டு வருகிறோம். இன்னும் சொல்லப்போனால் அணைக்கரைக்கு பக்கத்திலே ஒரு கிலோமீட்டர் தூரத்திலேதான் நான் இருக்கிறேன். அணைக்கரைப் பாலம் ஆட்டம் கண்டுவிட்டது. இடிந்துவிழுகிற சூழ்நிலை இருக்கிறது என்று பொதுப்பணித் துறையே certificate கொடுத்திருக்கிறது. அரசுக்கும் தெரிவித்திருக்கிறது. ஆக, மாற்றுப்பாலமாக நீலத்தநல்லூர் - மதனத்தூர் பாலத்தை

எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசிடம் proposal இருக்கிறது. அது நீண்டகாலமாக எடுக்க வேண்டிய ஒரு திட்டம் இருக்கிறது. அது, கும்பகோணம், என்னுடைய தொகுதி மக்கள் விரும்புகிற திட்டம்; சென்னை செல்பவர்களுக்கு 30 கிலோமீட்டர் தூரம் குறைவாக வருகிற திட்டம்; நானும், நம்முடைய திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம், அதைப்போலவே, குத்தாலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாணம், நம்முடைய கருப்பண்ண உடையார் போன்றவர்கள் எல்லாம் பேசியிருக்கிறோம். நீண்டகாலமாக, 1990-லேயிருந்து கேட்டேன். ஆகவே, அந்தப் பாலத்தை நீங்கள் அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டும என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேச்சை முடித்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே 10 ஆண்டுகளுக்கு முன்பே, 1990-லேயிருந்து ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்டு, 10 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம். 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்திருக்கிறோம். ஆனால் 10 ஆண்டுகள் ஆகிவிட்டன, இதுவரை கிடைக்கவில்லை. இடையிலே, 15 கிலோமீட்டர் தாண்டிதான் போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

127. 12-1-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 12-1-1998 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.அ.நி./(B-9)/98 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 29-3-2000 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)



128. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது விவர அட்டவணைகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 31-3-2000 ஆம் நாளிட்ட 60 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

129. வெளியிடப்பட்ட திரைப்படச் சுருள்களைப் பயன்படுத்தும் உரிமை குறித்து ஏதேனும் வணிகர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்தும், வணிகவரிகள் துறையில் 27-3-1999 ஆம் நாளன்று உருவாகி, 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ./40 (d-5)/99 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்தும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வணிகர், டிரான்ஸ்பார்மர் எண்ணெய் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் வரிவீதத்தை பதினாறு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் வணிகவரிகள் துறையின் 31-3-2000 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

130. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதத்தைப் பொறுத்தவரையில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் துறையின் 31-3-2000 ஆம் நாளிட்ட 62 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

131. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரி முழுவதையும் செலுத்துவதிலிருந்து சில வகை இறக்குமதியாளர்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 31-3-2000 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

132. 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் II(1)/வ.வ./40(d-1)/99, II(1)/வ.வ./40(d-3)/99, II/(1)வ.வ./40(d-6)/99, மற்றும் II(1)/வ.வ./40(d-7)/99 அறிவிக்கைகளை ரத்து செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 23-1-2000 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

133. வணிகவரிகள் துறையின் 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ./40(d-5)/99 அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 23-1-2000 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

134. வணிகவரிகள் துறையில் உருவாகி 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.40(d-4)/99 அறிவிக்கையை ரத்து செய்வது குறித்தும், செல்லுலார் தொலைபேசி விற்பனையின் பேரில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்தவேண்டிய வரிவீதத்தை பன்னிரெண்டு சதவீதம் என்பதிலிருந்து இரண்டு சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 31-1-2000 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

- ஏதுமில்லை -

222778